Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 02 | 04 - 10 - மார்ச் - 2005




## கரைந்து போகும் கிராமங்கள்

## தொடரும் கண்டனங்கள்

## ஓங்கி ஒலிக்கும் பெண்களின் குரல் மார்ச்-08

# வாழ்வதற்காக

ஓடிப்போனவன் திரும்பி வந்தாள்
ஒரு மங்கிய மாலையில்
கொழுக சப்திக்க.

கண்களால் விசாரித்தனர்
பேசப்பயந்து கொண்டு

ஊர்கூடி ரகசியம் பேசியது
தனித்தனியாகவும் யோசித்து
குழப்பத்தில் சிக்கிக்கொண்டது.

ஓடிப்போகும் முன் இருந்த
ஒய்யாரமும் சிரிப்பும்
சற்றுக் குறையவே இல்லை.

அனைத்தையும் தொலைத்துச்
சக்கையாய் கிடப்பாள்
செய்திவருமென காத்திருந்தனர்
புருவம் உயர்த்தினர்.

யாரோடு போனாளென
மரங்கள் கூட
விசாரித்துக்கொண்டன
இலைகளின் வீச்சில்.

தெரிவிற்கே கம்பீரம் தந்து
தயக்கத்தை தொலைத்துவிட்டு
நடந்துவந்தாள்.

சோகம் துளியுமிருக்குமோவென
ஒழிந்து பார்த்தனர்
திரும்பவும்.

பொலிவோடு கொஞ்சம்
புன்னகையும் கூட்டிக்கொண்டு
அழுந்தக் கால்பதித்து
அவள் வந்தாள்.

சொறிநாய்கள் சில
குலைத்து எட்டி நின்றன பயந்து.

மௌனம் கிழித்தது
எங்கேயடி போனாய்
என்றொரு கிழம் விசாரித்தது
ஊர் காதுகள்
விடைத்துக் கொண்டன.

வாழ்வதற்காக என்றால்
சன்னமாய்.

எங்கேயடி வந்தாய்
என்ற கேள்வி அதட்டியபோது
சிரிப்போடு சில சொற்கள்
வாழ்வதற்காக எனக் கம்பீரமாக.

ஆங்கிலத்தில்:- விட்டல் ஜோன்
தமிழில்:- இ.றஜித்

# காரசாரம்

# மார்ச் - 08

# ஓங்கி ஒலிக்கும் குரல்

சர்வதேச மகளிர்தினம் வருகிற 8ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படவுள்ளது. இந்த நிலையில் உலகம் முழுதுக்குமான பெண்ணிய, பெண்கள் அமைப்புகள், மீண்டுமொருமுறை பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் அவர்களது உரிமைகளையும் அதற்கான வழிவகைகளையும் பற்றிய தான சீர்திருத்தக் கருத்துக்களை உலகின் காதுகள் செவிடுபடும்படி பேசியும், இதயம் வலிக்க எழுதியும், கண்கள் பூக்கும் வண்ணம் காட்சிப் படுத்தியும் தமது திறமைகளையும், மதிப்பையும் புத்திசாலித்தனத்தையும் வெளிப்படுத்திப் பூரிப்படையப் போகின்றன.

உண்மையில் பெண்களுக்கான எந்தவித உரிமைகளையும் அறியாது, இன்னமும் அடிமைத் தளை பூட்டி அதுவே வாழ்க்கையின் நியதி என்றும், இது தங்களுக்கு விதிக்கப்பட்ட விதி என்று வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களின் காதுகளுக்கோ, அவர்கள் வாழ்விடங்களுக்கோ எட்டப்போவதில்லை. ஒட்டுமொத்தமாகப் பெண்கள் எனக் கணிக்கப்படும் ஜீவராசிகள் யாராயின், உத்தியோகம் பார்க்கும் பெண்கள் வீட்டிலிருந்து வெளியேறி ஓரளவு சுதந்திரமாகச் சுற்றும் உரிமையுள்ள பெண்கள் ஆகியோரே.

அதிகாலையில் எழுந்து சமையல்செய்து கணவனை பிள்ளைகளை உண்ணவைத்து வயலுக்குப்போய் அறுவடை செய்து கதிர் சுமந்து மத்தியானம் வந்து சமைத்து குடும்பத்தினருக்கு வழங்கி பின்நேரமும் வயலில் வேலைசெய்துவிட்டு, அதன்பின் மாலை வந்துகுளித்து, தேநீர் தயாரித்து, மற்றவர்களுக்கும் பரிமாறி, இரவுக்குச்சமைத்து, பிள்ளைகளை தூங்கவைத்து கணவனுடைய தேவையை நிறைவேற்றி அதன்பின் உறங்கி உறங்கும் போதும் பிள்ளைக்குப் பாலூட்டி, பின் அதிகாலை விழித்தெழும் பெண்களுக்கு வேலையோடு வேலையாக துணி துவைத்து, ஆடுகட்டி, மாடுகட்டி, கோழியடைத்து வாழும் பெண்களுக்கு இந்த விடயங்களெல்லாம் வேலையில்லாதது களின்ர மினைக்கெட்டவேலை.

உண்மையாகவே பெண்களின் அடிப்படைப் பிரச்சினைகளான அநேக பிரச்சினைகளை வளர்த்து ஊதிப் பருக்கவைத்துவிடும் பெண்கள் இந்த உயர்மட்டப் பெண்கள்தான். ஒரு கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு பாமரப் பெண்ணுக்கு முடிவதில்லை. காரணம் என்ன? என்ற போது, அந்தக் கூட்டத்துக்கு வாரவை எல்லாம்படிச்சவை, ஸ்டைலா உடுத்திக்கிடுத்தி வருவினம், அவையட நகை நட்டுகளக் கண்டாலே பயமாக் கிடக்கு. அதுக்க என்னண்டு நாங்கள் போய் நிக்கிறது" என்று கூறினார் ஒருகிராமத்துப் பெண்.

சரி, வாழ்க்கையில இவ்வளவு துன்பதுயரங்களை அனுபவிச்சாலும் கோயில் குளத்துக்குப் போய் அமைதி தேடலாமே- என்றால் என்னண்டு போறது. இந்தப் பனாதைக்கோலத்தில் போய் நிண்டா தெய்வமும் திரும்பிப் பாராது. ஒவ்வொரு பொம்பிளையள் எத்தின லட்சம் பெறுமதியா வாறாளவை. எங்களால ஏலுமே அங்கின மனசுக்க கடவுளேயெண்டிட்டு போகவேண்டியதுதான்.

ஏதும் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு எனத்திட்டங்களை அறிமுகப்படுத்தி அவற்றைச்செய்யும்படி இவர்களைக் கேட்கமுடியுமா? "இவர் என்ன சொல்லுறாரோ தெரியா" என மறுத்துவிடும் பெண்கள் இவர்கள்.

பதினைந்து பதினாறு வயதிலேயே வாழ்க்கைத் துணையைத் தேடி வாழ்க்கை சுமையாக மாற, கணவன் கைவிட்டு ஓடிவிட குழந்தையுடன் பதினேழு பதினெட்டு வயதில் துணையற்றுப் போகும் பெண்களுக்கு என்ன வழிவைத்திருக்கிறார்கள். வருமுன் காப்போராக கட்டுக்குள் இருக்கும் போதே மாணவர்களுக்கு பாலியற் கல்வி வழங்கப்படுகின்றதா? பெண்கள் பொருளாதார ரீதியில் தம்மை உயர்த்திக்கொண்டால் பிரச்சினைகள் தீர்ந்துபோகும். ஆகவே அவர்களை பிரச்சினைக்குரியவர்களை அதாவது ஏமாந்தவர்களை அல்லது ஏமாற்றப்பட்டவர்களை தொழில் பழகவைத்து, உழைக்க வைத்து மூன்று வேளையும் வயிறார உணவளித்து உறைவிடமளித்து, உடையளித்து வைத்துக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும் எனக் கொண்டு திட்டங்களைப் போட்டுப் பெண்களை காலவரையறையற்ற கொத்தடிமைகளாக்கி வைக்கும் சில ரட்சணிய நிலையங்கள் பெண்களை உறிஞ்சிக்கொழுக்கும் நிலை தீர்ந்துவிடுமா? இப்பெண்கள் சமுதாயத்தில் தாமும் ஒரு அங்கமாகத் தனித்து தமது சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்யமுடியாதா? பெண் தந்தைக்குக் கட்டுப்பட்டவள், அதன் பின் கணவனுக்குக் கட்டுப்பட்டவள், அதன்பின் மகனுக்குக் கட்டுப் பட்டவள் எனப் பழைய பல்லவி உண்டு அதற்கு அனுபல்லவியாக, அப்படியெல்லாம் கட்டுப்படாமல் தவறிப்போனவள் பராமரிப்பு நிலையங்களுக்குக் கட்டுப் பட்டவள். ஒருபோதும் பெண் தனித்து வாழ முடியாது என்பது இவர்கள் விதி.

உங்களுக்குத் தெரியும் உலகெங்கும் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று பேசும் போதெல்லாம் அவர்கள் ஆண்களால் அல்லது ஆணாதிக்கவாதிகளான பெண்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்று பொதுவாகச் சொல்லி விடுகிறோம்.

இதற்கு சமுதாயத்தின் புரையோடிப்போன சட்டதிட்டங்கள் மரபுகள் வழக்காறுகள் எல்லாமே காரணமாக உள்ளதை யார் மறுக்க முடியும். பெண்கள் அடிமையாகவே வாழ்ந்தேயாகவேண்டும் என்பதற்காக பலவழிமுறைகளை சமுதாயம் வைத்திருக்கிறது, முதலாவதாக பெண்கள் மீது கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளை சமுதாயம் விதிக்கிறது. இது அவளுடைய மேன்மையைப் பறை சாற்றும் என்ற நம்பிக்கை அவளுள் வளர்க்கப்படுகிறது. அடக்கம் என்பது ஆன்மாவின் உள்ளடக்கமாக அவள்மீது திணிக்கப்படுவதுடன், தன் மேலாளர்களுக்குப் பயந்து நடப்பது தர்மம், என்பதற்கும் மேலாக அது ஒரு அச்சம் கலந்த செயற்பாடாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. பெண்பிள்ளைகளின் முன்னிலையிலேயே தாயைத் தந்தை திட்டுவது அவமதிப்பது, சில வேளை அடிப்பது பின் அரவணைப்பது, புதுத்துணி எடுத்துக்கொடுப்பது, நல்ல உணவுவகை, அணிமணி வாங்கிக்கொடுப்பது. முடிவெடுக்கும் இறுதியாதிக்கத்தைக் கொண்டிருப்பது, என வீட்டின் தலைவனான தந்தை என்ற ஆண் பாத்திரம் நடந்துகொள்கிறது. பெண்ணான தாய் அதற்கேற்ப தனது ஆசாபாசங்களைத் துறந்து அவனுடைய கட்டளையும் அவனுடைய கவனிப்புமே தனது வாழ்க்கை என நடந்து கொள்கிறாள். தவறு செய்யும் பிள்ளைகளைக் கூடத் தன்னால் நிர்வகிக்க முடியாமல் "அப்பா வரட்டும்" என்ற சொற்களால் அடக்கி ஆணின் அதிகாரத்தை உறுதிப் படுத்துகிறாள். இக்குறைபாட்டுடன் வளரும் பெண் படித்து ஒரு வேலை தேடி மேலாளருக்கு அடிமையாக நடக்கும்போது அவள் ஒரு தொந்தரவற்ற, கேள்வியெழுப்பாத, அதிக வேலையைச் செய்யக்கூடிய நல்ல ஊழியராகிறாள். அண்மையில் ஒரு அலுவலக மேலாளர் பேச்சு வாக்கில் குறிப்பிட்ட உண்மை இது. எனது நிர்வாகத்தில் பெரும்பான்மை பெண்கள். எதிர்த்து கேள்வி கேட்கமாட்டார்கள். எழுந்து வெளியே போகமாட்டார்கள். கொடுப்பதை வாங்கிக்கொள்வார்கள். வேலைப்பளு, சம்பள உயர்வு, என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார்.

இதுதான் பெண்கள், ஊதியம்பெறும் தொழில்களிலிருந்து விலகி, உற்பத்தித்துறைகளில் பெண்கள் ஈடுபடும் காலம்தான் அவர்களுக்கு அபிவிருத்தி ஏற்படும், என்பது பெண்ணிய ஆய்வாளர்கள் முடிவு. தன் எசமான் மீதும், அவனது அதிகாரத்தின் மீதும ஒரு பற்றுறுதி ஏற்படுத்தப்படும் அமைப்பாக தந்தை, மகள், கணவன், மனைவி, அண்ணன், தங்கை, தாய், மகன் என்ற உறவுகள் பரிவுபாசம் என்ற பந்தத்தினால் பிணிக்கப்பட்ட பெண்கள் அதனுள்ளேயே வலம்வருகின்றனர்.

மாயா

ஆண்களை இழந்துவிட்டாலோ அவர்கள் ஆதரவற்றவர்கள் என்ற முத்திரையைச் சமுதாயத்துடன் சேர்ந்து அரசாங்கமும் குத்திவிடுகிறது. ஆக பெண் யாரையும் சார்ந்திருந்தாலே வாழலாம் என்ற கழிவிரக்கநிலையை அவளாகவே உணரச் செய்து அவளை மேலும் இயலாதவளாக்கியும் விடுகிறது சமுதாயம்.

இவற்றையெல்லாம் உதறிவிட்டு எழுந்துகொள்ளும் பெண்கள் விரல்விட்டு எண்ணக் கூடியளவில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

இவைகளுக்கும் மேலாகப் பெண்ணியலாளர்களால் சுட்டப்படும்

(20 பக்கம் பார்க்க)

# புலிகளை சினமூட்டி திசை திருப்ப முயலும் படையினர்



கடந்தவாரம் கிளாலி முன்னரங்கப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஆயுட்காலம் பற்றி கேள்வி எழுப்பப்பட்டதும் உண்டு. அதனால்தான் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி ஒருவர் இது போர் நிறுத்தத்தைப் பாதிக்காது என்றார்.

போர்நிறுத்த உடன்பாட்டின் மூன்றாண்டுகளின் படைத்தரப்போ அரசோ தட்டிக் கழித்து விட்டுப்போகமுடியாத நிலைமையும் உருவாகியுள்ளது. மட்டு, அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யனின் உயிரிழப்புக்கு காரணமான சம்பவமும் அத்தகையதே. ஆனால் அதை மிகவும் திட்டமிட்டரீதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு மூடி மறைக்க முற்படுகின்றது.

இச்சம்பவம் ஒரு போர் நிறுத்த மீறல் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கூறியிருக்கிறது. ஆயினும் அது இன்னும் முடிவான தீர்ப்பை யாரில் போர் நிறுத்தமீறல் என்பதை சொல்வதற்கு காலதாமதம் செய்கின்றது. கருத்துத்தெரிவித்த சிறிலங்கா இராணுவப் பேச்சாளரும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே இருந்தாலும் படையினரின் மீறல் என்பதை ஒப்புக் கொள்ளத்தயாராக இல்லை.

தவறுதலாக விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை அண்டி சிப்பாய்கள் வந்துவிட்டதாகவே கூறியிருக்கிறார். சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் இருதரப்பினருக்கும் இடைப்பட்ட பகுதி 550 மீற்றர் வரையில் சூனியப் பிரதேசமாகவுள்ளது. அதில் ஆகக்கூடியது 275மீற்றர் வரையே. யாராவது ஒரு தரப்பு தமது முன்னரங்க நிலையில் இருந்து முன்செல்ல முடியும். அதை மீறி 510 மீற்றர்கள் கடந்து வந்து விடுதலைப் புலிகளை துப்பாக்கியால் குறி வைத்தமையை தவறுதலான, தற்செயலான சம்பவம் என்று கூறிவிட இயலாது.

அத்துடன் சிப்பாய்கள் இருவரும் தொலை நோக்கி, துப்பாக்கி வந்த அவர்களை இடைமறித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் சிங்களத்திலேயே பேசியிருக்கிறார். மூவரையும் இலக்கு வைத்துச் சுட்டு விட்டு சிறிலங்கா இராணுவ முகாம் இருந்த பகுதியை நோக்கியே ஓடித்தப்பியிருக்கிறார். இதனை பின் தொடர்ந்து சென்ற போராளிகளும் பொதுமக்களும் இனங் கண்டுள்ளனர்.

ஆனால், வழமைபோன்றே விடுதலைப்புலிகளுக்கு எதிரான மாற்று சக்திகளின் வேலை என்றவகையில் சிறிலங்கா படைத்தரப்பு இச்சம்பவத்திலான தமது பங்களிப்பை மறுத்துள்ளது. தம்பிலுவில் பகுதியூடான போக்குவரத்தின்போது சகலரையும் தீவிர சோதனைக் குட்படுத்தியே அனுமதிக்கும் அதிரடிப்படை சம்பவநேரம் மட்டும் இயல்பான போக்கு வரத்துக்கு வழிவிட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் மீண்டும் வழமையான சோதனைக் கெடுபிடிகளை அமுல் செய்திருக்கின்றது. இதுவும் மிகத் துலாம்

பேச்சுக்களை நடத்துவதற்கு இது தருணம் அல்ல என்று கூறியிருக்கின்றார். அவர் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதை முக்கியப்படுத்தி கருத்துக்கூறியிருப்பினும் அது நியாயமான- நேர் மையான காரணம் அல்ல என்பது எவருக்கும் புரியும்.

சனாதிபதியினதும் இன்றைய அரசினதும் அதிகாரங்களை தொடர்ந்தும் பயன்படுத்துவதில் உள்ள அக்கறையை முதன்மைப்படுத்தியே சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு இது தருணம் அல்ல என்று கூறியிருக்கின்றார்.

இதற்கு ஒத்திசைவாக செயற்படுவதுபோன்றே இராணுவத் தரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. விடுதலைப் புலிகளைச் சினமூட்டி போரொன்றைத்தொடங்கிவிடுவதன் மூலம் நிலைமைகளைத் திசை திருப்பிக் கொண்டு போகலாம் என்று அது கருதுகின்றது.

அதற்காக சகல வழிகளிலும் அரசும் படைத்தரப்பும் முயல்கின்றன. இந்த நிலையில்



**ஒரு வாரம் கடந்த நிலையிலும் இது படைத்தரப்பின் போர்நிறுத்த மீறல் என்பது கண்காணிப்புக் குழுவினால் உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையில் இவ்வாரம் கிழக்கு மாகாணத்தில் திரும்பவும் அரசியற் பணியில் உள்ள போராளிகள் குறி வைக்கப்பட்டுள்ளனர்.**

**அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, சசிமதி, அகநிலா ஆகிய மூன்று போராளிகள் சம்பவத்தில் காயமடைந்திருக்கின்றனர். அம்பாறை தம்பிலுவில் சவக்காலை என்னுமிடத்தில் சிறிலங்கா படையினரின் பிரசன்னம் உள்ள காட்டுப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.**

பின்னரும் அதற்கு சற்று முன்பாக கௌசல்யனின் கொலையுடனும் தொடர்புடைய சம்பவங்கள் மாறுபட்ட சூழலில் நோக்கப்படுகின்றன என்பது மட்டும் வெளிப்படையானது. இயற்கை பேரனர்த்தத்தின் பின்னர் மீண்டும் அரசியல், இராணுவ நகர்வுகள் செயற்படத்தொடங்கி விட்டநிலையில் இவை இடம் பெற்றமை அதற்குக்காரணமாகும்.

அதேவேளை இச்சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று சிறிலங்கா



புரிந்துணர்வு உடன்பாட்டின் மூன்றாண்டு நிறைவின் பின்னரான இரண்டு வாரங்களில் வடக்கிலும் கிழக்கிலும் நிகழ்ந்த சம்பவங்கள் ஆதாரபூர்வமாக படையினரையே குற்றவாளிகளாக்குகின்றன. கடந்தவாரம் கிளாலிப்பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரணை 40 மீற்றர்வரை நெருங்கிச்சுட முற்பட்ட படையினர் இருவர் விடுதலைப்புலிகளின் தற்காப்புத் தாக்குதலுக்கு உட்பட்டனர். அதில் ஒரு படைச்சிப்பாய் கொல்லப்பட்டார், மற்றவர் படுகாயமடைந்தார்.

போன்றன சகிதம் பதுங்கிப் பதுங்கியும் முன்னகர்ந்துள்ளனர். இது ஒரு வேவு நடவடிக்கையே என தளபதி கேணல் தீபன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் முக்கியமானது.

ஆனால், ஒரு வாரம் கடந்த நிலையிலும் இது படைத் தரப்பின் போர்நிறுத்த மீறல் என்பது கண்காணிப்புக் குழுவினால் உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையில் இவ்வாரம் கிழக்கு மாகாணத்தில் திரும்பவும் அரசியற்பணியில் உள்ள போராளிகள் குறிவைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, சசிமதி, அகநிலா ஆகிய மூன்று போராளிகள் சம்பவத்தில் காயமடைந்திருக்கின்றனர். அம்பாறை தம்பிலுவில் சவக்காலை என்னுமிடத்தில் சிறிலங்கா படையினரின் பிரசன்னம் உள்ள காட்டுப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

முச்சக்கரவண்டியில் பரமான சம்பவத்துக்கும் படையினருக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகின்றது.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலில் உள்ளபோது விடுதலைப்புலிகளுக்கு எதிராக சிறிலங்காப் படைத்தரப்பு மேற்கொண்டு வரும் நிழல் யுத்தத்தின் தொடர்ச்சியாகவே இதனைக் கொள்ளமுடியும். ஆனால், அதனை கருணாகுழுவின் செயற்பாடென்று சப்பைக் கட்டு கட்டுவதில் ஈடுபடுவதன் மூலம் தப்பித்துக் கொள்ளலாம் என எண்ணுகின்றது.


சமாதான நடவடிக்கைகளையோ பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளையோ முன்னெடுப்பதில் சிறிலங்கா அரச தரப்பு இன்னும் அக்கறை காட்டவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசுவதற்கு ஜே.வி.பி கடும் எதிர்ப்பை காட்டுகின்றது. அதனையே காரணமாக வைத்துக்கொண்டு அமைதி முயற்சிகள் மீதான அக்கறையின்மைக்கு வலுச் சேர்க்கின்றார் சனாதிபதி.

இந்நிலையில் வெளி விவகார அமைச்சர் ஒரு படி மேலே சென்று சமாதானப்

விடுதலைப் புலிகள் காட்டி வரும் நிதானமும் பொறுமையும் தான் புரிந்துணர்வு உடன்பாட்டையும் எஞ்சியுள்ள சமாதானத்துக்கான சாத்தியங்களையும் பேணிவருகின்றன. கடந்த ஆண்டு மாவீரர் தின உரையில் தேசியத் தலைவர் கோடிகாட்டிய பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் இருக்கும் எல்லைக் கோடுகளை, தென்னிலங்கைக்கு இடையில் ஏற்பட்ட இயற்கைப் பேரனர்த்தத்தின் பின்னரான சூழ்நிலை மாற்றத்துள் மறந்துபோய் விட்டிருக்க இயலாது.

அவ்வாறாயின் தொடர்ந்தும் இத்தகைய விபரீத விளையாட்டுக்களை அனுமதிப்பதன் மூலம் தனது நீண்டகால நியாயமான தீர்வுகளுக்கு வழிவிடாத மனோபாவத்தைத்தான் காட்டுகின்றது.

**ஞாபகன்**



# நறுக்கென...

## கதிர்காமரின்கூற்று சொல்லும் செய்தி



"இது சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நேரமல்ல சூழலுமல்ல"- இதனைக் கண்டுபிடித்து இந்தியாவிடம் கூறியிருப்பவர் அந்தக் கதிர்காமரை விடவும் வேறுயாராக இருக்கும்?

இப்படியான கருத்துக்களை அப்பப்ப சந்தர்ப்பத்திற்கேற்ப பேசித் திணறடிப்பதில் கதிர்காமருக்கு நிகர் கதிர்காமரேதான்.

சிறிலங்கா சனாதிபதியின் ஆலோசகர் என்றால் சந்தர்ப்பவாதம் பேசாமல் அந்தப்பணியை வகிக்க முடியுமா?

சிறிலங்கா சனாதிபதியின் விசேடதூதராக இந்தியா சென்றுள்ள கதிர்காமர் அங்கு மேற்கொள்ளும் பணி சமாதான முயற்சிகளுக்கு எந்தவகையிலும் நன்மைபயக்காதது மட்டுமல்ல அதற்கு அச்சுறுத்தலான- அரசின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான சாத்தியத்தையே உண்டு பண்ணியுள்ளது என்றால் மிகையில்லை.

கொழும்பில் சனாதிபதி செயலக அறிக்கை இடைக்கால நிர்வாகம் குறித்தும் இறுதித்தீர்வு குறித்துப் பேசவேண்டும் என்று தெரிவிக்கின்ற அதேசமயம் கதிர்காமர் சமாதானம் பேச இது சூழலல்ல என்று அறிவிப்புச் செய்கிறார்.

இதற்கிடையில் அந்த அதிகப் பிரசங்கி விமல் வீரவன்ஸவோ புலிகளுடன் பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை.... இடைக்கால நிர்வாகம் குறித்து அவர்களுடன் பேசினால் அரசிலிருந்து வெளியேறுவோம் என்று மிரட்டியும் உள்ளார்.

சிறிலங்காவில் ஆட்சி அதிகாரம் யார் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதென்று தெரியவில்லை.

சனாதிபதி ஒன்று கூறினால் - ஜே.வி.பி இன்னொன்றைக் கூறுகிறது. கதிர்காமர் வேறொன்றைப்புலம்புகிறார், ஹெலஉறுமய மற்றொன்றை அலட்டுகிறது, மல்வத்தை அஸ்கிரிய பீடங்கள் புதிதொன்றை புசத்துகின்றன. இடையில் உள்ள அதிகார வலுவற்ற மகிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டார நாயக்க போன்ற உதிரிகள் தமக்கு தோன்றியவற்றையெல்லாம் அலட்டி வலியுறுத்தவும் செய்கிறார்கள்.

பாவம் சிறிலங்காவும்.....அதன் மக்களும்....!

" சரி...கிடக்கட்டும்.... கதிர்காமர் சொல்வது போன்று இது சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான தருணமல்ல வென்றால், யுத்தத்திற்கான தயாரிப்பு வேலைகளுக்கான தருணம் என்றா அவர் கூறுகின்றார்?

-அப்படித்தான் படுகிறது.

இந்தியா சென்ற கதிர்காமர் அங்கு இந்திய வெளியுறவு அமைச்சருடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், இலங்கை இராணுவத்திற்கு இந்திய இராணுவக் கல்லூரிகளில் பயிற்சி அளித்தல் போன்ற விடயங்கள் குறித்து முக்கிய கலந்துரையாடல்களை மேற்கொண்டார் என்று தெரியவந்துள்ளதை வைத்துப் பார்த்தால், அரசு மற்றொரு யுத்தத்திற்கான தயாரிப்பு வேலைகளில் ஆர்வமாக இருப்பதாகத் தெரிகிறது.

எனவே 'இது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழல் இல்லை- தருணமும் இல்லை என்ற கதிர்காமரின் கருத்து சொல்லும் செய்தி யுத்தச் சூழலை உருவாக்க அரசு முயல்கிறது என்ற அர்த்தத்தையே தருகிறது... அப்படித்தானே... பட்டறிவுப் பாடத்தை மறந்து மேலும் பட்டுத்தான் தெளிய வேண்டுமென்றால் அரசை யாரால் தடுக்கமுடியும்.

## நாடா?மக்களா?அதிகாரப்பதவியா?



"வடக்கு கிழக்குக்கென இடைக்கால நிர்வாக அதிகார சபை ஒன்றினை அமைக்கும் திட்டம் எதுவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணி அமைக்கப்பட்டபோது அவர்களிடம் இருக்கவில்லையாம்.!

இதனை விடவும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாகத் தாங்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் -அதாவது சனாதிபதி சந்திரிகாவுடன் பல நிபந்தனைகளுக்கு உடன்பட்டே கூட்டணியில் இணைந்தார்களாம். அந்த உடன்பாட்டை மீறி சனாதிபதியோ அரசோ எதனையும் செய்யமுயன்றால் தாங்கள் அரசை எதிர்க்கவேண்டிய நிலை ஏற்படலாம்.!

இது ஜே.வி.பியினரின் சனாதிபதியை நோக்கிய புதிய மிரட்டல் கணையாகும்.

அதாவது இடைக்கால அதிகார சபை கட்டமைப்பு என்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் கூட்டணி கொள்கைத் திட்டத்தில் இல்லாத ஒன்றாக இருப்பதால் அத்தகைய திட்டம் எதனையும் நடைமுறைப் படுத்தும் நோக்கம் தமக்கு இல்லையென்று சந்திரிகா அம்மையார் வெளிப்படையாக அறிவிக்கவேண்டுமாம்... இது கோரிக்கையல்ல... நிபந்தனையாம்...!

அதுமட்டுமல்ல,

வடக்கு கிழக்கு மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளை அப்பகுதிகளுக்காக அபிவிருத்தித் திட்டங்களை கவனிப்பதற்காக இடைக்கால நிர்வாக சபை குறித்து முதலிலும் அதைத் தொடர்ந்து இறுதித்தீர்வு பற்றியும் விடுதலைப்புலிகளுடன் பேச அரசு தயார் என்ற கருத்துப்பட அரச தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட செய்தியை அது வாபஸ் பெறவும் வேண்டுமாம்...!

இதுவும் நிபந்தனை தானாம்....!

சந்திரிகா அம்மையாரை கிடுக்கிப் பிடிக்குள்தான் ஜே.வி.பி வைத்திருக்கிறது. என்ன செய்யப்போகிறார்...? என்ன சொல்லப்போகிறார்...?

எதுவானாலும் ஜே.வி.பி யினரின் இந்தக் கேள்விக்கு அதாவது நிபந்தனைகளுக்கு அம்மையார் உடனடியாக வெளிப்படையாகப் பதிலளிப்பது மிக மிக அவசியம். எத்தனை காலத்திற்கு பல முகம் காட்டி... பலரையும் பேய்க்காட்டி காலம்கடத்தி அரசியல் கண்ணாமூச்சி விளையாடுவதாம்?

அதிகாரமற்ற பிரதமரும் அரசும் எதனை அலம்பினாலும் சரி சனாதிபதி என்ற நிறைவேற்று அதிகார பதவியில் உள்ள சனாதிபதி தனது நிலைப்பாட்டை பொது அறிக்கையாகவே வெளியிடவேண்டிய கட்டம் வந்துவிட்டது.

சமாதானப் பேச்சுக்களை இடைக்கால நிர்வாக அதிகாரசபையின் அடிப்படையில் விட்ட இடத்திலிருந்து தொடர சனாதிபதி தயாரா? இல்லையா?

வழவழாக் கதைகள் வேண்டாம் தீர்க்கமான பதிலே தேவை!- ஜே.வி.பியுடன் இணைந்த சமாதான விரோத ஆட்சியைத் தொடரவா அல்லது தேசத்தையும் மக்களையும் அமைதி நிலைப்படுத்த பேச்சுவார்த்தைகளைத் தொடரவா? நீங்கள் முடிவெடுக்கப்போகிறீர்கள். அம்மணியாரே...?

'கமான்... பதில் சொல்லுங்களேன்'...!

## அரசியல் வரட்சியில் முன்னாள் புரட்சிவாதிகள்



சாயம் போன சிவப்புக் கொடிக்காரர்களின் சாயம் இன்னும திகம் வெளுத்துப்போன சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

அதாவது அந்த முன்னாள் புரட்சிவாதத் தோழர்கள் தற்போது பேரினவாதத்தால் கடுமையாகப் பீடிக்கப்பட்ட நிலையில் கொள்கைத் தடம் புரண்டு கொண்டு, சித்தாந்த முரண்பாடுகளுடன் தமக்குள் மோதிக் கொள்ளும் நிலைக்கு பரிதாபகரமாக தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே என்று ஐ.ம.சு. முன்னணியில் கூட்டணி சேர்ந்து கொண்டு அரசியல் பதவிக் கதிரைகளுக்காக பல்லிளித்துப் பேரம் பேசத் தொடங்கினார்களே அப்போதே அவர்கள் தங்கள் சுயத்தை இழந்து விட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

1971 இல் வர்க்கப்புரட்சிக் கோஷம் எழுப்பியவர்கள்- ஆயுதக்கிளர்ச்சி நடத்தி அரசுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் 1971 இலேயே, பூர்ஷிவா சனநாயகம் என்று தங்களால் வர்ணிக்கப்பட்ட மூன்றாந்தர முதலாளித்துவ அரசியல் சேற்றுக்குள் தங்களையும் புதைத்துக் கொண்டு சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதே அவர்களின் புரட்சிவாத முகவரி புஸ்வாணமாகிவிட்டது.

பின் 1987 இல் இந்தியப் படையின் வருகையுடன்- இந்திய எதிர்ப்புக் கோஷத்தை முன்வைத்து அவர்கள் நடத்திய மறுகிளர்ச்சியை, பிரேமதாஸ அரசு அவர்களின் தலைமைப் பீடத்தை நிர்மூலமாக்கி ஒடுக்கிய போது தென்பகுதி சிங்கள மக்களே வெடிகொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்தவிதமே அவர்கள் மக்கள் விரோத சக்தியாக அக்காலகட்டத்தில் இயங்கியதை அடையாளப்படுத்தியது.

அத்துடன் திசைமாறி ஓடி ஒளிந்து திரிந்தவர்கள்- அவர்களின் தலைவர் ரோகண விஜேவீரவை காட்டிக் கொடுத்துவிட்டு தலைமறைவானவர் என்று கருதப்படும் பேர்வழியை இப்போது தலைவராக்கிக் கொண்டு- அரசியல் வியாபாரம் செய்ய சனநாயக வாதிகளாக தம்மை வெளிக்காட்டிய ஜே.வி.பியினர் கொள்கை வரட்சியும், முரண்பட்ட செயற்பாடுகளும் அவர்களின் அரசியல் 'வங்குரோத்து' நிலையை கடந்த ஓராண்டுக்குள் அப்பட்டமாக்கிவிட்டது.

இப்போது ஜே.வி.பி. 'சோமவன்ஸவீரவன்ஸ அன்ட்கோ' வாகிவிட்ட நிலையில் முன்னைய அவர்களது எதிரிகளான 'இந்திய விஸ்தரிப்பு வாதிகள்' அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் (இதெல்லாம் அவர்களின் பாஷையில்....) எல்லாம் தோழர்களாகி (!?) விட்டார்கள்.

புத்தம் சரணம் கச்சாமி

இந்தியா சரணம் கச்சாமி என்று இனவாத அரசியலை இந்திய துதியுடன் நடத்தத் தொடங்கியவர்கள் இப்போது,

அமெரிக்கா சரணம் கச்சாமி என்று முதலாளித்துவ ஜால்ராவும் போடத் தொடங்கிவிட்டனர்.

மீண்டும் தலைமறைவாகி விட்ட 'சோமவன்ஸ' அமெரிக்கத் தூதரிடம் சரண்புகுந்து தவறுக்காக மன்னிப்புக் கேட்டது அவர் விஜேவீரவுக்கு செய்த இரண்டாவது துரோக மென்கிறார் ஒரு முன்னாள் ஜே.வி.பிக்காரர்.

அரசியல் என்றால் அப்படித்தான்... நிரந்தர நண்பனுமில்லை., அதில் நிரந்தர எதிரியுமில்லை.... என்று சோமவன்ஸ- வீரவன்ஸ அன்ட்கோ' கூறலாம்....

'நிரந்தர கொள்கையும்' கூட இல்லை என்று சேர்த்துக்கொள்ளுங்கள் என்கிறார் அந்த பழைய ஒறிஜினல் ஜே.வி.பி காரர்.

## நெஞ்சார பொய்யுரைக்கும் சந்திரிகா அம்மையார்



பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாகச் சொல்லவேண்டும் என்பது ஒரு கிழமொழியாகும். ஆனால் பொருத்தமற்ற பொய்களைச் சொல்லி தனது ஏமாற்றுப் புத்தியை வெளிப்படுத்தி விட்டு எதையோ சாதித்தவர்போன்று தொடர்ந்தும் மக்கள் முன்னும், சர்வதேச சமூகத்தின் முன்பும் சர்வசாதாரணமாக நடமாடக்கூடியவர் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆவார்.

அவர் மட்டுமல்ல, அவரது சனாதிபதி செயலகம் விடுக்கும் முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளும், அவரது ஆலோசகரும் வெளியுறவு அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் ஊரூராக-தேசம் தேசமாக பறந்து சென்று வெளியிட்டு வரும் கருத்துக்களும் எல்லாவற்றிற்கும் மேலாக அவரது முன்னாள் எதிரிகளும் தற்போதைய ஆட்சிப்பங்காளிகளுமான ஜே.வி.பியினர் விடுத்துவரும் சுயேச்சைத்தனமான செய்திகளும் இன்றைய சிறிலங்கா அரசின் பொறுப்பற்ற கோமாளித்தனச் செயற்பாடுகளை பகிரங்கப் படுத்தியே வருகின்றன.

இது இலங்கையின் கட்டுப்பாடும் கட்டுக்கோப்புமற்ற நிர்வாகச் சீர்கேட்டை நாளுக்குநாள் உலக சமூகத்திற்கு உணர்த்தியும் நிற்கிறது.

யார் என்ன சொன்னாலும், எப்படித்தான் அழுத்தங்களைக் கொடுத்தாலும், அறிவுறுத்தல் விடுத்தாலும் முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாதெனும் மற்றொரு கிழமொழிக்குப் பொருத்தமாகவே தொடர்ந்தும் இலங்கை அரசும் அதன் ஆட்சித்தலைமைகளும் சூடு சொரணையற்ற தன்மையுடன் இயங்கிவருகின்றமையானது அவற்றின் மீதான சகல நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் முற்றாக இழக்க வைத்துவிட்டது என்றால் அதுவே இன்றைய யதார்த்தமுமாகும்.

இதுவே இன்றைய சமாதான முயற்சிகளுக்கும், சிறிலங்காவின் எதிர்காலத்திற்கும் ஆபத்தான சூழலை உருவாக்கும் விடயமாகியுமுள்ளது. தொடர்ந்து பொய்களையே கூறும் ஒரு அரசு தனது மக்களை மட்டுமல்ல சர்வதேசத்தையும் ஏமாற்ற முனைப்புடன் செயற்படுவதாகவே அர்த்தப்படும். கடைசியாக அம்மணியார் சொன்ன பொய்.

'படையினருடன் இணைந்து எந்த ஆயுதக் குழுக்களும் செயற்படவில்லை' என்பதாகும். இதனை அவர் நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் அவர்களிடம் கூறியுள்ளார். படையினருடன் எந்தெந்த குழுக்கள் என்னென்ன செயற்பாடுகளில் இணைந்து இயங்கிவருகின்றன என்பதற்குரிய ஆதாரம் எதனையும் தேடவேண்டிய அவசியமே இல்லை. கடந்தகால சம்பவங்களும், நிகழ்கால நடப்புகளும் அதனை வெளிப்படையாகவே நிரூபித்து வந்துள்ளன.வருகின்றன. ராசிக்குழு, புளொட்மோகன் குழு, வரதன் குழு, ஈ.பி.டி.பி கும்பல், வரதராஜப் பெருமாள் அணி எனத் தொடரும் ஆயுதம் தாங்கிய தமிழின- தமிழீழத் தேச விரோதக் குழுக்களின் பட்டியலில் கடைசியாகத் தம்மை அடையாளப் படுத்தியுள்ளவர்கள் கருணா கும்பலைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அரசு வீசும் எலும்புத்துண்டுகளுக்காக படைத்தரப்பினருடன் வாலாட்டி வலம் வருபவர்கள் என்பதை நாடறியும். சந்திரிகாவும் நெஞ்சார அறிவார். ஆனால் சொல்ஹெய்ம் அவர்களுக்கு நெஞ்சாரப் பொய்யுரைத்துள்ளார். 'எங்கப்பன் குருதிக்குள் இல்லை' என்றால் அவர் அதற்குள்தான் இருக்கிறார் என்பதுதானே அர்த்தம். அம்மணியாரே தமிழ்த் தேச விரோதக் குழுக்களின் முகவரி மே/பா சனாதிபதி, அல்லது மே/பா பாதுகாப்பு அமைச்சு என்பதேயாகும். இதனை இல்லையென்று மறுத்தால் யார் நம்பப்போவது.

செங்குட்டுவன்

# சூடு பிடிக்கும் ஈரான் விவகாரம்





மேற்கில் மீண்டும் ஈரான் விவகாரம் சூடுபிடித்துள்ளது. அரசியல் தலைவர்களும் புலமையாளர்களும் பிரயோகிக்கும் பிரதான சொற்பதம் ஈரான் விடயமாகிவிட்டது. கடந்த பல ஆண்டுகளாக பேசப்பட்ட ஈரான் விவகாரமும் முடிவுக்கு வந்தது போல் ஈரான் விவகாரமும் அமையுமா என்ற சந்தேகம் வலுத்துவரும் போது ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்க சனாதிபதியின் உரையும் ரஷ்ய சனாதிபதியின் ஈரானுக்கு உதவுவது தொடர்பான தகவல்களும் பெரும் குழப்பத்தை தோற்றுவித்துவருகிறது. இதன் யதார்த்தத்தை பரிசீலிப்போம்.


ஈரான் அணுவாயுதத்தை தயாரிக்க முயல்வதாகவும் அது உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக அமையுமெனவும் அமெரிக்கா கூறிவருகின்றது. ஈரானோ தனது தொழில்நுட்பத் தேவைக்காகவும்,தனது பாதுகாப்புக்காகவுமே அணுவாயுதத் தொழில்நுட்பத்தை தயார் செய்வதாகவும் மாறி மாறி அறிக்கைகள் வெளிவருகின்றன. எதிலும் தெளிவான யதார்த்தம் இருப்பதாகத் தென்படவில்லை. இரண்டு அரசுகளுமே யதார்த்தத்தை மறைத்துவருவதோடு, ஈரான் அணுவாயுத தயாரிப்பில் ஈடுபட்டுவருவதை பல நாடுகள் உறுதிப்படுத்தக் கூடியளவுக்கு நிலைமை காணப்படுகின்றது.

ஈரான் கடந்த பத்து வருடங்களாகவே அணுவாயுதத் தொழில் நுட்பம் பற்றிய உரையாடலை சீனா, ரஷ்யா, என்பனவற்றோடு நிகழ்த்திவருகின்றது. ஆனால், முழுமையான இலக்கை அடையாத நிலை தற்போது காணப்பட்டுவருவதுடன் ஈரானின் அணுவாயுதம் அமெரிக்காவை விட இஸ்ரேலுக்கே அச்சுறுத்தல் என்பதையும் கவனத்தில் கொள்ளுதல்வேண்டும்.

மறுபக்கத்தில் ஈரானின் விஞ்ஞானரீதியான வளர்ச்சியின் வரலாறு மிகக்குறுகியது. மக்களும் அரசாங்கமும் கடந்த 26 வருடங்களிலேயே ஓரளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. ஏறக்குறை கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்த 50 சதவீத வளர்ச்சியை தற்போது 80 சதவீதமாக உயர்த்தியுள்ளது. ஆனால் உலகம் அணுவை பயன்படுத்தி மருத்துவம் விஞ்ஞான தொழில்நுட்பத்திலும் பாதுகாப்பிலும் மிக அதிகமான வளர்ச்சியை எட்டிவிட்டன. அதனோடு ஒப்பிடும் போது ஈரான் பின்தங்கிய தேசமாகவே உள்ளது. அதேபோன்று ஈரானின் இராணுவ பலமும் இஸ்ரேல், சவூதியரேபியாவுடன் ஒப்பிடும்போதும் பின் தங்கியே காணப்படுகின்றது இதனை ஈடுசெய்யவே அது அணுவாயுதம் பற்றிய பரிசோதனையை மேற்கொள்ள முயற்சிப்பதோடு, யதார்த்தமாக தர்க்கிக்கமுயலுகிறது.

ஆனால், உலக அரசின் பொருளாதார இராணுவ ஒழுங்கு அப்படியில்லையே. ஏனெனில் இன்று அமெரிக்கா உலக நாடுகளை விமர்சிப்பதோடு, அணுவாயுதத்தை தடைசெய்ய ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் பின்னர் எத்தனை தடவை அணுவாயுதத்தை பரிசோதித்துள்ளது. அணுவாயுதப் பரிசோதனைக்காக ஆண்டு ஒன்றுக்கு அமெரிக்கா 40 பில்லியன் அமெரிக்க டொலரினை செலவுசெய்திருக்கின்றது. கடந்த பத்துவருடங்களில் அணுவாயுத பலத்தை 85 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1996 ஆம் ஆண்டுக்கு பின்னர் உருவாக்கப்பட்ட Ctbt உடன்பாட்டை மீறி அமெரிக்கா 21 அணுவாயுத பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. இவை அனைத்தும் சிறியளவிலிருந்தாலும் நிலத்திற்கடியில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு பார்க்கும்போது ஈரானை எப்படி அமெரிக்கா மிரட்டவோ- அச்சுறுத்தவோ முடியும் என்ற கோரிக்கை எழலாம். ஆனால், அத்தகைய நடைமுறை வியாக்கியானம் புலமை சார்ந்தவர்களின் ஆய்வுகளை மட்டுமே நிரப்பலாம். மாறாக யதார்த்தம் அவ்வாறானதல்ல. நிச்சயமாக எல்லையைத் தாண்டிய போக்கு ஈரானிடம் அதிகரிக்க அமெரிக்காவின் தாக்குதல் உத்தி அதிகரிக்கும். அமெரிக்க சனாதிபதியின் ஐரோப்பிய பயணத்தில் எதிரொலிப்பு ஈரான் விவகாரத்தில் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகவே இருந்தது. ஏற்கனவே இருந்த அமெரிக்காவின் (புஷ்) கலண்டரில் வடகொரிய விவகாரம் அமைந்திருந்தபோதும் பிராந்திய அடிப்படைகளையும் ஆக்கிரமிப்புக்கான நகர்வுகளில் ஏற்படும் நெருக்கடிகள் என்பவை எல்லாவற்றையும் கடந்து சீனாவின் மறைகரத்தின் விளைவுகளைப் பற்றி அமெரிக்கத் தரப்பு அதிகம் சிந்திக்கின்றது.இதனால் வடகொரிய விடயத்தை தந்திரமாக நகர்த்துவது என்பதை பிந்திய கொள்கையாக அமெரிக்கா கொண்டிருக்கின்றதுபோல் தெரிகின்றது. ஈராக் நடவடிக்கையின் போதும் வடகொரியா மீது அமெரிக்கா ஒரு நெருக்கடியை கொடுக்க முயன்றபோதும் அது சார்ந்த புலமையாளரின் எச்சரிக்கையை அடுத்து வடகொரியாவை பின்னர் பார்த்துக்கொள்ளலாமென்ற கொள்கையை கொண்டிருந்தது. அதேபோன்றது தான் தற்போதும் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கை அமைந்துள்ளது. வடகொரியாவை நேரடியாக தாக்கமுடியாது என்பதற்கு வலுவான இன்னோர் காரணமும் உண்டு. அதாவது வடகொரியா ஈரானைப் போலல்லாது வெளிப்படையாக அணுவாயுதத்திட்டத்தை பிரகடனப்படுத்திவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக

**ஐங்கரன்**



இஸ்லாமியர் மீதான ஆக்கிரமிப்பும் அதிருப்தியும் அமெரிக்கக் கொள்கை வகுப்பில் முதலிடத்தை வகித்துள்ளது. இதனால் ஈரான் மீதான நடவடிக்கையை உலகம் அதிகம் எதிர்பார்க்கின்ற நிலை எழுந்துள்ளது. அமெரிக்கா ஈரானை தாக்குவதற்குத் தயாராகி விட்டது. அது அமெரிக்காவுக்கு சாதாரணமான அதேநேரம், தவறான கற்பிதத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதிலும் அக்கறையாக உள்ளது. ஈராக் விடயத்தைப் போன்று ஐரோப்பிய எதிர்ப்பினை சம்பாதிக்கக் கூடாதென அமெரிக்கா கருதுகின்றமையே பிரதான காரணமாகும். 1990களில் அமெரிக்க முன்னாள் கடற்படையைச் சார்ந்த ஒருவர் ஈராக்கில் ஆயுதப்பரிசோதனை நிகழ்த்தும் ஐ.நா.பிரதிநிதியாக இருந்தபோது அளித்த வானொலி பேட்டியொன்றில், 2005 இல் ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றார். அதற்கான தயார்ப்படுத்தலை அமெரிக்க நிர்வாகம் மிக நீண்டகாலத்துக்கு முன்பே திட்டமிட்டுள்ளதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது. எனவே அமெரிக்காவின் அடுத்த நகர்வு ஈரானாக உள்ளதென்பது தெளிவாகத்தெரிகிறது. ஆனால் இப்போதுள்ள பிரதானகேள்வி ஈரான் அமெரிக்காவின் நகர்வை எப்படி முறியடிக்கப்போகிறது. அல்லது ஈராக்போன்று அழிவடையப் போகின்றதா?என்பதாகும்.

அநேகமாக ஈரான், ஈராக்கைப் போன்ற அரசல்ல ஷியாப் பிரிவினரது ஆட்சியும் ஆதிக்கமும் பெரும்பான்மையும் உள்ளதேசம். இஸ்லாமிய அடிப்படைவாதப் புரட்சி அடுத்த கட்டமிதவாத சூழலுக்குள் சென்று தற்போது நவீன வாதத்தையும் கொண்டிருக்கின்ற நாடு என்றவகையில் வலுவான அரசாக இருக்கிறது. இது ஈரானில் அகச்சூழல், அதன் புறச்சூழலும் சற்று நிதானமாகவே உள்ளது. குறிப்பாக 60 சதவீதமான ஆசனங்களை ஈராக்கில் கைப்பற்றிய அனைத்துக் கட்சிக் கூட்டணி ஷியா முஸ்லிம் பிரிவினரைக்கொண்டது. ஏறக்குறைய ஈரானுக்கு ஆதரவான அரசுக்கான அறைகூவல் கிடைத்துள்ளது. மறுபக்கத்தில் ரஷ்ய அதிபரின் கூற்று சீனாவின் அணுகுமுறைகள் ஈரானுக்கு ஆதரவாகவே காணப்படுகின்றது.ஐரோப்பாவுக்கு சென்றிருந்த புஷ் வெளிப்படையாக ரஷ்யாவை கண்டித்தமைக்கு மேற்காசிய சனநாயகம் போன்று ரஷ்யாவையும் சனநாயகத்திற்கு திரும்புமாறு புஷ் அழைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் புட்டின் நிதானமாக ஈரானுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளார் என்பதுவும் அவ்வாறே. ஈராக்குக்கு உதவியது என்பதையும் மறந்துவிடக்கூடாது

மேலும் ஈரான் மேற்காசியாவுக்குள் ஓர் இராணுவக் கூட்டைப்பற்றி பரிசீலித்துவருகிறது. எதிரி நாடுகளுடனோ, நட்பு நாடுகளுடனோ அயல் நாடுகளுடன் ஒரு நெருக்கமானஉறவை பேணுவதுடன் மிகத்தெளிவான இராணுவ ஒத்துழைப்பை உருவாக்க ஈரான் முயல்கின்றது. ஆனால் இவ்வொத்துழைப்பு திட்டமிடல் எந்தளவுக்கு வெற்றியை ஈரானுக்குத் தேடிக்கொடுக்குமென்பதுவும் ஈரான் மீதான இயற்கை அழிவின் எதிரொலிப்பும் அதன் மீதான சுமையை அதிகப்படுத்தியுள்ளது.

எனவே ஈரான் அணுவாயுதத்தை முழுமையாகப் பரிசோதிப்பதா அல்லது அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்கொள்வதா என்பதே இன்றைய பிரச்சினை. அணுவாயுதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அமெரிக்க ஆக்கிரமிப்பு சாத்தியமாகும் என்ற நிலை ஏற்பட்ட பின்பு அணுவாயுதத்தை தயாரிப்பதை நிறுத்துவதில் எந்தப்பயனும் ஈரானுக்குக் கிடைக்கப்போவதில்லை. எது எவ்வாறாயினும் ஈரானை நோக்கி அமெரிக்கா நகரத் தொடங்கிவிட்டது. மேற்காசியாவை முழுமையாக சனநாயகப்படுத்துவதன்மூலம் அமெரிக்க மயவாக்கம் செய்யலாம் என்பதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாகும். நீண்ட பேரரசுவாதத்துடன் அமெரிக்கா செயல்படுகின்றது என்பதையே அவதானிக்கமுடிகின்றது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 04 . 03 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# ஏமாற்று நாடகம்...!

சனாதிபதி சந்திரிகா மீண்டும் ஒருமுறை உலகை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அதாவது கிழக்கில் அம்பாறையில் அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் குவேனி, துணைப் பொறுப்பாளர் சசிமதி மற்றும் அகநிலா ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக சனாதிபதியால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவே இந்த ஏமாற்று நடவடிக்கையாகும்.

சனாதிபதி சந்திரிகா இதற்கு முன்னரும் ஆணைக்குழுக்கள், விசாரணைகள் என அவர் தமிழ் மக்களையும் உலகத்தையும் ஏமாற்ற எத்தனையோ நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

ஆனால், இந்த ஆணைக்குழுக்களினால் பெறப்பட்ட பலாபலன்கள் தொடர்பாகப் பார்த்தால் எதுவுமேயில்லை.

இந்த நிலையில் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மீது மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் நிலுவையில் உள்ள நிலையில் மகளிர் போராளிகள் மீது இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இப்பொழுது இதற்கு ஆணைக்குழுவென்ற பெயரில் பிரச்சினையை தணிக்கும் ஏமாற்று வேலையை மேற்கொண்டுள்ளார்.

உண்மையில் சனாதிபதி சந்திரிகா மேற்கொள்ள வேண்டியது ஆணைக்குழுக்களை அமைப்பதல்ல. முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அதனை செம்மையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுப்பதேயாகும்.

அத்தோடு, சமாதானத்தின் பெயரால் அவரின் நிகழ்ச்சி நிரலிலிருக்கின்ற புலிகள் மீதான நிழல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

இதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செய்யவேண்டிய இராணுவ துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்களை களைவதோடு, இராணுவ புலனாய்வு அமைப்பின்சமாதான செயற்பாட்டை குழப்பும் நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பதேயாகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவோ எந்த இராணுவ துணைப்படைகளும் இல்லை என்றவாறு பொறுப்பற்ற பதில்களை அளித்து பிரச்சினைக்கு மேலும் எண்ணெயை ஊற்றிவருகிறார்.

உண்மையில் சனாதிபதி சந்திரிகா புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அதன் நடைமுறைகளை உள்ளோட்டமான செயற்பாட்டிற்காக உழைப்பாரேயானால் இத்தகைய விபரீத விளையாட்டுக்கள் நடைபெறமாட்டாது.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவிடமிருந்தோ அல்லது அவரது படைக்கட்டமைப்பிடமிருந்தோ இத்தகைய நடவடிக்கைகளை எதிர்பார்க்கமுடியாது.

ஏனெனில் அவரது அரச கட்டமைப்பு எதிர்பார்ப்பது இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதே.

இதன்மூலம் தனது அரசியல் வாழ்வின் அடுத்த நடவடிக்கையை தொடங்குவதோடு எந்த சிங்கள அரச தலைவரும் வழங்கப் போகாத தமிழ் மக்களுக்கான தீர்வை தானும் நிராகரிப்பது என்பதேயாகும்.

ஆனால், இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் புலிகளை சீண்டும் நடவடிக்கைகளால் புலிகள் இயக்கம் மிகவும் கொதிப்படைந்துள்ளது.

அத்தோடு அரசகட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் அரசியல் வேலைகளில் ஈடுபடும் போராளிகளின் மீதான தாக்குதல் மூலம் புலிகளின்வேலைத்திட்டங்களை முடக்குவதை நோக்கமாக கொண்டும் அரச இயந்திரம் செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஆபத்தான விளையாட்டு மைதானமாக மாறிவிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பாதுகாப்பில் உறுதியாகச் செயற்படவேண்டிய பொறுப்பு கண்காணிப்புக் குழுவுக்கும் உண்டு.

ஆனால் கண்காணிப்புக்குழுவோ இந்தச் செயற்பாட்டில் ஒரு மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

கண்காணிப்புக் குழுவின் இத்தகைய செயற்பாடுகள் தொடருமானால் சனாதிபதி சந்திரிகாவும் அவரது அரச இயந்திரமும் விசாரணைக்குழு, சனாதிபதி ஆணைக்குழு என கதைவிடவே செய்வார்கள்.

ஆகவே, கண்காணிப்புக்குழுவும், நோர்வே அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

# சமாதானத்தைச்சாகடிக்கும் சக்திகள்


**பு.சத்தியமூர்த்தி**

சமாதானமும் சமாதானம் தொடர்பானவர்களும் சமாதானத்தை விரும்புபவர்களும் விரக்தியின் விளிம்புக்குச் செல்லக்கூடியளவுக்கு அடுத்தடுத்து நிகழ்வுகள் நிகழ்ந்தேறியுள்ளன. சிறிலங்காவின் பல்வேறு தரப்பினரும் இதனை நிகழ்த்தியுள்ளனர். சர்வதேசத்தின் உயர் இராஜதந்திர சமூக உறுப்பினர்களும் இம்முறை இலக்கு வைக்கப்பட்டமை இந்த நிகழ்வுகளின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பெப்ரவரி 7ஆம் திகதி வெலிக்கந்தைப் படுகொலையின் 'இலக்கு' குறித்து இதே பத்தியில் ஏற்கனவே பேசியிருக்கிறோம். அந்தப் படுகொலையின் பின்னர் ஐ.நா செயலாளர் அதனைக்கண்டித்ததுவும்;

அடுதொடராக சிறிலங்காவின் பேரினவாதத் தூண்கள் அனைத்துமே துள்ளியெழுந்து ஆர்ப்பாட்டங்களும் கண்டனக்கூட்டங்களும் நடத்தியதுவும், சிறிலங்கா வெளிவிவகார அமைச்சிடம் அனானைக் கண்டிக்க வேண்டுமென வலியுறுத்தியதுவும் நிகழ்ந்தன.

இதனை அடுத்து நிகழ்ந்ததுதான் மிக முக்கியமானது. சிறிலங்காவின் இராஜதந்திர முகத்தின் கோரத்தினை வெளிப்படுத்தியது. ''விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு, அதனுடைய உறுப்பினர்



கொல்லப்படுவதை ஐ.நா. செயலர் கண்டித்தமை கண்டிக்கத்தக்கது" என்ற செய்தியை சிறிலங்காவின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் ஐ.நாவிற்கான சிறிலங்காவின் வதிவிடப் பிரதிநிதியூடாக அனானுக்குக் கையளித்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் சித்தரிக்க முனைவது இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் அரசிடம் எதுவித கொள்கைரீதியான முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லையென்பதைத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

'ஒரு பயங்கரவாத அமைப்புடன்' போர்நிறுத்தம் செய்துகொள்ளலாம். பேச்சுவார்த்தை நடத்தலாம். அதனுடைய உறுப்பினர்களுக்கு உலங்குவானூர்திகளை வழங்கலாம். இராணுவத் தொடரணிப் பாதுகாப்பு வழங்கலாம்.... இப்படிப் பல்வேறு விடயங்களையும் செய்யலாம். ஆனால், அந்த அமைப்பு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்றுவிடக்கூடாது; அது தனது செயற்பாடுகளின் பின்னுள்ள நியாயப்பாட்டினை, தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் விருப்பங்களை சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிப்பதன் மூலம் அரசு குத்தியுள்ள முத்திரைகளை இல்லாமற் செய்துவிடக்கூடாது, என்பதில் சிறிலங்கா அரசு மிகக் கவனமாக இருக்கிறது.

இந்த அறிவிப்பை வெளியிட்டுவிட்ட பின்னரும் அரசு சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகளில் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்மைப்பொன்றை உருவாக்குவது பற்றிப் பேசிவருகிறது. எந்தத் தார்மீக நியாயப்பாட்டினடிப்படையில் அரசு இந்தப்பேச்சுக்களை நடாத்துகிறது? ஒரு 'பயங்கரவாத அமைப்புடன்' இணைந்து செயற்படுவதென்பது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது?

இதுதான் சிங்கள அரசியலின் இரண்டகத்தன்மையான முகம். தனக்குத்தேவையானதை அடைவதற்காக அது 'அங்கிடு தட்டித்தனமாக' நடந்துகொள்கிறது. அதேவேளை தனது அடிப்படை இலக்குகளை ஒருபோதுமே கைவிடவும் மாட்டாது. அதனை மீறி எதிர்த்தரப்பு பயணிக்க அனுமதிக்கவும் மாட்டாது.

கொபி அனானிற்கு ஏற்பட்ட அனுபவம் இதுவென்றால், எரிக்சொல்ஹெய்முக்கு ஏற்பட்டது. இன்னொரு விதமான அனுபவம்.

கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த சொல்ஹெய்மை வறுத்து எடுத்து விட்டார்கள் மகாநாயக்கர்கள். நோர்வேயின் நேர்மையின் மீது பெரும்பாலான மக்கள் சந்தேகம் கொள்கிறார்கள். விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நோர்வே செயற்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள்-என தேரர் தெரிவித்தபோது, சொல்ஹெய்ம் கொபி அனானை நினைத்துக் கொண்டிருக்கக்கூடும்.

இராஜதந்திர உலகில், எந்தவொரு நாடும் அங்கீகரிக்கப்பட்ட அரசுகளுக்கு ஆதரவாகவே செயற்படும் என்பது மிக அடிப்படையானதொருவிடயம். இதனை மீறி அவை நடந்துகொள்வதென்பது மிகக்குறைவான சந்தர்ப்பங்களிலேதான். அந்தச் சந்தர்ப்பங்கள் கூட பொருளாதார, இராணுவ, அரசியல் தேவை கருதியதாகத்தான் இருக்குமே தவிர பாதிக்கப்பட்ட மக்களுடைய நியாயத்தின்பாற் பட்டதாக இருந்ததில்லை. இருப்பதுமில்லை.

இந்த நிலையில் நோர்வேயின் சமாதானத்தூதுவருக்கு மகாநாயக்க தேரர் வழங்கிய 'மக்களின் சந்தேகம்' பற்றிய கருத்து அல்லது கண்டனமென்பது சர்வதேச இராஜதந்திரம் பற்றிய சூத்திரத்தை விளங்கிக்கொள்ளாத அல்லது விளங்கிக்கொள்ள முயலாத போக்காகும்.

தென்னிலங்கை ஊடகங்கள் தமிழர்களது உரிமை, தமிழர் பிரதிநிதிகளான புலிகள் ஆகிய விடயங்களில் எழுதித் தள்ளுபவை இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை தீர்வுகாணப்படக்கூடிய ஒன்றா? என ஒரு சராசரி மனிதனுக்கு மலைப்பை ஏற்படுத்தக்கூடியவை, வெலிக்கந்தைப் படுகொலையைக் கண்டித்த கொபி அனானின் செயலை கடுமையாகத் தாக்கி எழுதிய 'திவயின' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் 'பயங்கரவாதிகள் இந்த உலகை விட்டு அனுப்பப்படவேண்டியவர்கள் என்பது எனது கணிப்பு' என்று குறிப்பிடுகிறது.

சிறிலங்காவின் அரசு, அரச மதத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரது மனப்பதிவுகளை ஒப்பிட்டுப் பாருங்கள். எல்லோரும் ஒரே விடயத்தையே பேசுவதும், அவர்களது மனப்போக்குகள் ஒத்த திசையிலே இருப்பதுவும் மிக வெளிப்படையாகத் தெரிகின்றன.

இந்த நிலையில் இலங்கைத் தீவிற்கு சமாதானம் கிட்டுமா? சமாதானத்தை நோக்கிப் பயணிக்கும் போக்கு, ஆர்வம் இவர்கள் மத்தியில் எங்காவது தொனிக்கிறதா? எதிர்த்தரப்பைப் பலவீனமாக்கியபடி அவர்களது விருப்பார்வங்களை நிராகரித்தபடி தமது தரப்பை பலப்படுத்துவதற்கே 'சமாதானம்' என்பதை சிறிலங்கா பயன்படுத்துவது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

சிறிலங்காவின் சமாதானத்தின் மீதான எதிர்பார்ப்பு அல்லது தேவை நிறைவுற்று விட்டது. பொருண்மிய ரீதியாக, இராணுவ ரீதியாக பெரும்வீழ்ச்சியைச் சந்தித்துப் புலிகளின் கையில் வடக்கு- கிழக்குப் பகுதிகள் வீழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக சமாதான ஆயுதத்தைக் கையிலெடுத்தது சிறிலங்கா.

சமாதான முயற்சிகள் வழங்கிய கால ஓய்வு தன்னைப் பலப்படுத்திக்கொள்வதற்கு சிறிலங்காவுக்கு வாய்ப்பாக அமைத்த போதிலும், சர்வதேச பொருண்மிய உதவிகளுடன் பிணைக்கப்பட்டிருந்த 'சமாதான முயற்சிகளின் முன்னேற்றம்' என்பது மிகப் பெரிய தலைவலியாக அமைந்திருந்தது.

ஆனால் ஆழிப்பேரலை ஏற்படுத்திவிட்டிருக்கும் சர்வதேச நிதி வளங்களின் உள்வருகையினால் சிறிலங்காவின் பொருண்மியத்தில் ஒரு திடீர் வீக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த வீக்கமும், சமாதான ஓய்வு காலத்தில் சீரமைக்கப்பட்டிருக்கும் படைக் கட்டமைப்பும் ஒருவிதமான துள்ளலை சிறிலங்காவுக்கு ஏற்படுத்தியிருக்கின்றன. அத்தோடு மட்டக்களப்பில் ஏற்பட்ட குழப்பம், ஆழிப்பேரலை என்பவற்றால் புலிகளதும் தமிழர்களதும் பலமும் உறுதியும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சிங்கள தேசம் நம்புகிறது. இதனால் அதனது துள்ளல் இன்னும் சற்று அதீதமாயிருக்கிறது.

எனவேதான் எப்படியும் புலிகளை மீண்டும் யுத்தத்துக்குள் தள்ளிவிட அது படாதபாடு படுகிறது. இதன் ஒரு கூறுதான் மட்டக்களப்பு, அம்பாறையில் புலிகளின் முக்கியஸ்தர்கள் மீது தொடராக நடத்தப்பட்டிருக்கும் தாக்குதல்கள் ஆகும். இந்தத் தாக்குதல்கள் புலிகளின்

(20 ஆம் பக்கம் பார்க்க..)



# தீர்வின் கதி..?

இலங்கையின் அமைதிக்கும் உறுதிப்பாட்டிற்கும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று நிரந்தரச் சமாதானம் ஏற்படுத தப்படவேண்டும் என்பது சர்வதேசத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது. இந்தச் சமாதான முயற்சிகளை இன்று சர்வ தேசத்தின் சார்பில் முன்னெடுத்துவரும் நாடாக நோர்வே இருந்துவருகின்றது.

இதிலே நோர்வே உட்பட சர்வதேசமும் ஈடுபடுவதில் உள்நோக்கம் உள்ளதா? என்றெல்லாம் இனவாதிகள் அலசுகின்றனர். பலநோக்கங்கள் இருப்பதாகவும் கூறிகின்றனர். ஆனால் சமாதானம் ஏற்படுவதில் தாம் உறுதிப்பாடாக இருப்பதாகக் கூறும் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சிகள், இனவாத சக்திகள் எவ்வாறு நடந்துகொள்கின்றன? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

சமாதானம் என்பது இப்பொழுது இவர்களால் உரத்து ஒலிக்கப்படுகின்ற போதிலும் அதன் கருத்து மாறுபாடானதாகவே இருக்கின்றது.

இன்றைய சமாதான முயற்சிகளின் ஆரம்பப்புள்ளிதானே எனக்கூறிக் கொள்ளும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான் மனப்பூர்வமாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதை விரும்பவில்லை. அதாவது தனிப்பட்ட ரீதியில் புலிகளுடன் பேசுவதைத்தான் விரும்பவில்லை. ஆனால், புலிகளுடன் பேசாது பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. அதுதான் யதார்த்தம் எனக்கூறியிருக்கிறார்.

அவ்வாறு பேசி உண்மையிலேயே உடன்பாட்டிற்கு வரமுடியும் என அவர் நம்புகிறாரா? அதாவது புலிகளுடன் தவிர்க்கமுடியாது பேசமுற்படுகிறார்.

எனின் அவ்வாறு பேசி எட்டப்படும் தீர்வு எவ்வாறு அவருக்கு மனப்பூர்வமாக அமையப் போகிறது என்பது கேள்வியாகும்.

அவ்வாறு மனப்பூர்வமற்ற முறையில் எட்டப்படும் தீர்வை எவ்வாறு அவரால் சிறந்தமுறையில் செயற்படுத்த முடியும்? என்பது அடுத்த கேள்வியாகும்.

இன்று நடைபெறுகின்ற சமாதான முயற்சிகளின் அடிப்படையாக விளங்குகின்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது போர்நிறுத்த ஒப்பந்தமும் கூட இவ்வாறான ஒன்றுதான். அதாவது இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் ஆரம்பம் முதலே கடுமையாக பல முட்டுக்கட்டைகளைப் போட்டவர் சனாதிபதி சந்திரிகா. ஆனால், அந்த ஒப்பந்தம் ஏற்படுவதை அவரால் தவிர்க்கமுடியாது போயிற்று. ஆனால், இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துகின்ற பொறுப்பு அன்றைய ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தபோதிலும் முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் அதற்கு பெரும் இடையூறுகளை விளைவிக்கக் கூடிய அதிகாரம் சனாதிபதி சந்திரிகாவிற்கு இருந்தது.

பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்ற வேளையில் தனது இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி போர்நிறுத்த ஒப்பந்தத்தை கெடுபிடிக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை அவரால் மேற் கொள்ள முடிந்தது. இந்த போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் குறித்து அவரால் பதிலளிக்கத் தேவையில்லாத நிலை இருந்தது.

பின்னர் சமாதான முயற்சிகள் அடுத்தகட்டத்திற்கு நகரக்கூடிய ஒரு நிலையை அடைந்தபோது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கலைத்து முழுமையான அதிகாரத்தையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனதாக்கிக்கொண்டார். தேர்தலின் பின்னர் சிறுபான்மை பலம் குன்றிய ஒரு ஆட்சியை அமைத்துக் கொண்ட போதிலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடமுடியாத அதேவேளை அதனைக் கடைப்பிடிக்க வேண்டியதேவையும் அவருக்கு ஏற்பட்டது.

இப்பொழுது அவர் கட்டாயத்தின் பேரிலேயே புலிகளுடன் பேச வேண்டியுள்ளதாகக் கூறுகிறார். அதுபோலவே இன்று அவர் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் வேண்டா வெறுப்புடனேயே கடைப்பிடிக்க வேண்டியவராக இருக்கிறார்.

ஆனால், அதனைச் சரிவரக் கடைப்பிடிப்பது போலக்காட்டிக் கொண்டாலும் அவரின் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மதிக்கும் போக்கினாலன்றி விடுதலைப்புலிகளின் அசாதாரண பொறுமையின் காரணமாகவே இப்பொழுது போர்நிறுத்தம் நின்று நிலைக்கின்றது. போர்நிறுத்தம் காரணமாக புலிகள் அமைதிகாக்க, அவர்களுடன் ஒரு மறைமுக யுத்தம் நடத்தப்பட்டுவருவதாகவே புலிகள் உணருகின்றனர்.

இவ்வாறு போர்நிறுத்த உடன் பாட்டை மீறுவதற்கு அவருக்கு கூச்சம் எதுவும் இராது. ஏனெனில் அவர் இந்த ஒப்பந்தத்தைச் செய்தவரும் அல்ல. மனப்பூர்வமாகக் கடைப்பிடிக்கவேண்டிய வரும் அல்ல. போர்நிறுத்தம் அவரது எஞ்சிய பதவிக்காலம் முழுவதும் நடைமுறையிலிருந்தால் அவருக்குப் போதுமானதாகும். அதேவேளை அந்த ஒப்பந்தத்தை காயப்படுத்துவதுபற்றி அவருக்குக்கவலையில்லை.

அதே வேளை தான் இந்தச் சமாதான நடவடிக்கைகளில் மனப் பூர்வமாகவே ஈடுபடுவது போல உலகிற்குக் காட்ட வேண்டிய தேவையும் அவருக்கு இருக்கின்றது. எனவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானம் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சுயநல நோக்கிலானதும் உளப்பூர்வமற்றதானதாகவும் இருப்பதனால் அது சிறந்தமுறையில் நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் உள்ளது. இது ஏதாவது தீர்வொன்றுக்கு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் எட்டுமாயினும் அதன் செயற்பாடும் அவ்வாறானதாகவே இருக்கும். அதாவது மனப் பூர்வமற்று அவரால் அமுல்படுத்தப்படும் போர் நிறுத்த ஒப்பந்தம் என்ன கதிக்குஉள்ளாகிக் கொண்டிருக்கிறதோ, அதே கதிக்கே தீர்வு உள்ளாகும்.

**வேலவன்**

## நேர்நோக்கு

# சிறுவர் தொடர்பாக நீலிக்கண்ணீர்

பல ஆண்டுகளாக சிறுவர் உரிமைகள் பற்றியும் அவர்களின் எதிர்காலம் பற்றியும், பல அமைப்புக்கள் அடிக்கடி கண்டன அறிக்கைகளையும் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான விடயங்களையும் வெளியிட்டு வருகின்றன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை அல்லது சிறுவர் உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளையோ மேற்கொள்வதில்லை. தமிழர் தாயகப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்த சிறுவர் உரிமைகள் உரியமுறையில் பேணப்பட்டு வருகின்றன. இதனை எவரும் மறுக்க முடியாது. ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்தேறி இரண்டு மாதகாலம் கடந்துவிட்ட நிலையில் தென்னிலங்கையில் இன்று சிறுவர்கள் காணாமல் போகின்ற தொகை அதிகரித்துள்ளது. அதாவது 106 சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் தொடர்பாக சிறிலங்கா அரசு எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. இதனை கட்டுப்படுத்துவதும் இல்லை. தொடர்ந்தும் சிறுவர்கள் கடத்தப்பட்டு வருகின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 995 சிறுவர்கள் தாய் தந்தையரை இழந்துள்ளனர். 3409 சிறுவர்கள் தாய் அல்லது தந்தையரை இழந்துள்ளனர் என புள்ளி விபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. இவர்களை அரவணைப்பது யார். சிறுவர் உரிமை பேசும் பல அமைப்புக்கள் இவர்களின் எதிர்காலம் பற்றி சிந்திக்கவேண்டும். இது சிறிலங்கா அரசினாலும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களாலும் எவ்வளவு தூரம் கவனம் செலுத்தும் அல்லது செயற்படும் என்பது தெரியாது.

இன்று தமிழர் தாயகப் பகுதியில் 2862 சிறார்கள் பெற்றோர்களை இழந்துள்ளனர். இதை விட இதற்கு முன்னர் கொடிய போரின் விளைவாக தாய் தந்தை உறவுகளை இழந்த சிறார்களின் எதிர்காலம் ஒரு நல்ல எதிர்காலமாகக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டும் தான்



சிறிலங்கா சிறார்கள் அரச படைகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இவ்வாறான சிறார்கள் பேருந்து தரிப்பிடங்கள் ஆலயங்கள் என்பவற்றில் பிச்சை எடுத்தல், சிறுவர்கள் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்பட்டன. இவ்வாறு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறுவர்கள் நடத்தை குறைபாடு என்பதை விட சிறுவர்கள் கடத்தப்பட்ட விபரம் எதுவும் தெரியவரவில்லை இவ்வாறான செயற்பாடு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அதிகம் நடந்துள்ளது.

இதனை எவரும் மறுக்க முடியாது.

சிறார்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த இளமைப்பருவம் என்பது மானிடவாழ்வில் ஒரு முக்கிய கட்டமாகும் இக்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தச் செயற்பாடும் பெறுமதியான செயற்பாடுகளாகவே இருக்கவேண்டும். கல்வியறிவு, போசாக்கு, பழக்க வழக்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்று தமிழர்தாயகப்பகுதியில் உள்ள தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் கீழ் உள்ள சிறுவர் இல்லங்களில் உள்ள சிறார்கள் ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி, விளையாட்டுக்களிலும், கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர். இவ்வாறு சிறுவர் இல்லங்களில் வாழ்ந்த சிறார்களில் பெருமளவானோர்கள் தங்களின் எதிர்காலத்தை நல்ல ஒரு எதிர்காலமாக மாற்றியுள்ளனர் இதனை இன்று கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது. இன்று தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்டு இருக்கின்ற வயது குறைந்த சிறார்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் படுகின்ற செய்தி வாரத்துக்கு வாரம் வெளியாகிக் கொண்டு இருக்கின்றது. அவ்வாறு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற பெற்றோர்களின் பொருளாதார வலுவின்மை காரணமாகவும் அவர்களினுடைய எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டே இச்சிறார்கள் போராட்டத்தில் இணைகின்றனர். சிறுவர்களை படைகளில் சேர்த்துக் கொள்கின்றனர் என சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்புகின்ற அமைப் புக்கள் எவ்வளவு தூரம் சிறார்களின் எதிர்காலத்தில் அக்கறை காட்டுகின்றன என்பது கேள்விக்குறியான ஒரு விடயம். போராட்டத்தில் இணைகின்ற சிறார்கள் பெற்றோர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படுகின்றனர். அவ்வாறு பெற்றோர்களிடம் செல்ல மறுக்கின்றவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இடைத்தங்கல் முகாம் அல்லது சிறுவர் இல்லங்களில் அவர்களுக்கு ஏற்ற துறைகளில் வளர்ப்பதற்கான செயற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்கள் நிர்வகித்து வருகின்றன.

அண்மை நாட்களாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதாவது சிறுவர்கள் கடத்தப்படுதல் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஈடுபடுத்தல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அதாவது கடந்த வாரம் மன்னாரில் பாடசாலை மாணவன் சிறிலங்கா காவல்துறையால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் இரு சிறுவர்களை கடத்துவதற்கு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் முயற்சித்தமை போன்ற இவ்வாறான சம் பவங்களுக்கு சிறுவர் உரிமை பேசு கின்ற அமைப்புக்கள் மௌனம் சாதிக்கின்றன. கடந்த ஆண்டு யாழ்.குடாவில் பாடசாலைச் சிறுமி ஈ.பி.டி.பி உறுப்பினரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டமையும் கடந்த 2003 இல் வவுனியா முருகனூர்க் கிராமத்தில் 13 வயதுச் சிறுமி மூன்று பேரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டதும் மூன்றாவது சந்தேகநபர் தற்கொலையை செய்து கொண்டதும் ஏனைய சந்தேக நபர்கள் தலை மறைவாகித் திரிவதுடன் அவர்களை தேடித்திரியும் சிறிலங்கா காவல் துறையினருக்கு சிறு தொகை பணத்தை கொடுத்து தப்பிச செல்லும் செயற்பாடும் தமிழ்த்தேச விரோதக் குழுக்களால் செய்யப்பட்டு வருகின்றது. இவற்றை மறந்து தமிழ்த்தேச விரோதக் குழுவினரும் சிறுவர் துஷ்பிரயோகங்களை பெருமளவில் செய்து கொண்டிருக்க அரசு பின்னணியில் இதற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறது ஆனால் வெளிப்பூச்சுக்கு சிறுவர் உரிமைபற்றிப் பேசி வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் ஒரு கேலிக்குரிய விடயமாகவே எல்லோராலும் பார்க்கப்பட்டு வருகின்றது.

**சு. பாஸ்கரன்**


# கவனிப்பாரற்றுக் கிடக்கிறது பண்டாரவன்னியன் பொக்கிசங்கள்



எமது தமிழ் பிரதேசத்தினை பொறுத்தவரை எமது பண்டைய வரலாறுகளை சொல்லக்கூடிய பல பிரதேசங்கள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள் சின்னங்கள் என்பன காணாமல் போய்விட்டன. இன்னும் சில மறைந்துகொண்டிருக்கின்றன. இதற்கு பல்வேறு காரணங்களை நாம் கூறலாம். அவற்றில் சிங்கள அரசாங்கத்தினால் திட்டமிட்டு தமிழ் கலை



கலாச்சாரங்கள் அழிக்கப்பட்டமை, அவ்வாறே தமிழர் பண்பாட்டு வரலாறுகள் திரிவுபடுத்தப்பட்டமை, இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் புலம்பெயர்ந்தமை போன்ற காரணங்களை கூறலாம். இன்றும் எமது தமிழ் மாணவர்களை பொறுத்த வரை எமது பண்டார வன்னியனை தெரிந்த மாணவர்களின் வீதத்தை விட துட்டகை முனுவையும், பராக்கிரமபாகுவையும் தெரிந்த மாணவர்களின் வீதமே அதிகம் எனலாம். அதற்குக் காரணம் அரசின் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட




வரலாற்றுப்பாடப்புத்தகங்களே. நாம் வந்தேறு குடிகள் என கூறும் சிங்கள தேசம் அதனை உண்மையாக்கும் விதத்தில் கடந்த காலங்களில் தங்களின் செயற்பாடுகளை மேற்கொண்டமை தெரிந்ததே.

எனவே நாம் எமது கலை கலாச்சாரத்தை பேணி பாதுகாப்பதோடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பாதுகாக்க வேண்டிய கடமை உண்டு. அந்த வகையில் பண்டாரவன்னியன் ஆட்சி செய்த வன்னிப் பிரதேசத்தில் இன்று பல பிரதேசங்கள் மறைந்துவிட்டன. வன்னி மண்ணின் அடங்கா முடியாக ஆங்கிலேயரை எதிர்த்து இறுதி வரை சண்டை செய்து காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்டு ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவன் பண்டார வன்னியன். இவன் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட இடம்தான் கற்சிலை மடுப் பிரதேசமாகும்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிலுள்ளது இந்தப் பழம்பெரும் கிராமம். இந்தப் பிரதேசத்தில் பண்டார வன்னியனோடு தொடர்புபட்ட பல கிராமங்கள் இன்று இல்லை. அவற்றுள் சில வருமாறு; இனநாத கண்டன், இரம்பை, இளவழிக்குளம், களிக்கட்டுக்குளம், பல்மடு, உடையார் சமளங்குளம், குருந்தமலை, குளுநேரி, காயமோட்டை,கற்குளம் போன்ற கிராமங்கள் இன்று இல்லை. தமிழர்களின் பண்டைய வரலாற்றோடு தொடர்புடைய மிகமுக்கிய கிராமங்கள் இவை. இவற்றின் அழிவு எமது வரலாற்றுக்கு ஏற்பட்ட இழப்பே ஆகும். இதைவிட பண்டார வன்னியனின் காதலி வாழ்ந்த பிரதேசமான காதலியார் சமளங்குளம் என்ற கிராமத்தின் எதிர்காலமும் கேள்விக்குரியதே. இதைவிட மன்னனின் வரலாற்றோடு தொடர்புடைய ஏராளமான பிரதேசங்கள் இன்று இல்லை. பண்டார வன்னியன் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளான் என்பது கிராமங்களின் பெயரை வைத்து (நாச்சியார்குளம், மடுக்குளம், இளவழிக்குளம், கற்குளம்) இன்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். பண்டார வன்னியனோடு மிக நெருங்கிய தொடர்புடைய கிராமங்களில் ஒன்று தான் கற்சிலை மடு. இப்பெயர் வருவதற்கான காரணத்தை இன்றுள்ள பெரியார்கள் இவ்வாறு கூறுகின்றனர். அதாவது 1803ஆம் ஆண்டு பண்டார வன்னியன் ஆங்கிலேயரால் கொலை செய்யப்பட்டதன் நினைவாக கப்டன் றிபேக்கால் நினைவுக்கல் ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு அருகில் மடுக்குளம் என ஓர் குளம் இருந்ததாகவும் அந்தக் குளத்தின் பெயரையும் சிலையின் பெயரையும் சேர்த்து கற்சிலைமடு என உருவாக்கம் பெற்றது எனக்கூறுகின்றனர். ஆரம்பத்தில் விவசாயம் முக்கிய பொருளாதாரமாகக் காணப்பட்டுள்ளது. பழக்கவழக்கங்களைப் பொறுத்த வரை நிறையவே மாறியுள்ளது. என்றாலும் ஒரு சில இன்றும் உள்ளன. அவற்றுள் ஓலைச் சுவடி எழுதுவது, மற்றும் பன்றிப்பல், குருவிச்சிந்து, தாலாட்டு, நாட்டார் கூத்து போன்றன இங்குள்ள ஒரு சில முதியோர்களிடமே உள்ளது. காலப் போக்கில் அவர்களும் இறந்தபின் அக்கலையும் அழிந்துவிடுவது உறுதியானதே. இதனால்தான் இவர்கள் இறப்பதற்கு முன் அவ்வாறானவற்றை ஒலிப்பதிவு செய்து பின் அச்சுப்பதிவு செய்யவேண்டும் என இந்தக் கிராமத்தை சேர்ந்த சிவ னேசன் என்பவர் கூறுகின்றார். எனவே அவரின் முயற்சிக்கு ஆர்வமுள்ளவர்கள் உந்துசக்தியாக இருக்க வேண்டும். அப்போதுதான் பண்டைய எமது கலைகளை பாதுகாக்க முடியும்.

இதைவிட சேனாதிராஜா என்பவர் கூறுகின்றபோது இங்கு சில இடங்களில் கல்லினால் செய்யப்பட்ட கட்டில், கதிரை போன்ற சின்னங்களை இதன் முக்கியத்துவம் தெரியாத சிலர் தங்களின் தேவைக்காக கற்களாக உடைக்கின்றனர். இதனை உரியவர்கள் தலையிட்டு பாதுகாக்க வேண்டும் என வேதனையுடன் கூறுகின்றார் மற்றது முக்கியமானது ஒன்று ஒட்டுசுட்டான் சிவன் கோயில் இது இலங்கையில் இருக்கின்ற இரண்டு பழம் பெரும் தான் தோன்றீச்சரக் கோயில்களில் ஒன்று. மேலும் இப்போது தண்ணி முறிப்பு வயல் பிரதேசத்தில் உள்ள ஒரு வீதி. தேரோடும் வீதி என்றே



கூறப்படுவதாகவும் கூறினார். இப்பெயர் வந்த காரணம் பண்டார வன்னியனின் கீழ் ஆட்சி செய்த சிற்றரசுகளில் அரசி ஒருவர் இருந்ததாகவும் அவர் தேரில் அவ்வீதியால் வந்து போவதால் இப் பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது எனவும் கூறுகின்றார். இதைவிட இங்கு வாழ்கின்ற சில மக்களிடம் ஆங்கிலேயர் காலத்தில் (1884) வழங்கப்பட்ட காணி உறுதி காணப்படுகிறது. மேலும் லண்டனில் உள்ள அரும் பெரும் காட்சியகத்தில் இங்குள்ள வரலாற்றோடு தொடர்புடைய பல பொருட்கள் உள்ளன. என்பதை தனது சகோதரி தெரிவித்ததாகக் கூறுகின்றார் சேனாதி ராஜா என்பவர்.

ஆரம்பத்தில் பரியாரி தலைமுறையின் மூலம் ஆயுர்வேத மருத்துவ முறையே காணப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் பண்டார வன்னியன் அடங்காத் தமிழனாக இறுதிவரை ஆங்கிலேயரை எதிர்த்து வீர மரணம் அடைத்தவன். இவரது வரலாறுகளையும், அப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வரலாற்றுச் சின்னங்களையும் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். நாம் இம் மண்ணின் பூர்வீகக் குடிகள்



என்பதற்கு இவ்வாறான வரலாற்று படிவங்களே ஆதாரமாகக் காணப்படுகிறது. இலங்கையில் வரலாற்று நூல்களை எழுதியவர்கள் தமிழர்களின் பழமைகளை திட்டமிட்டு மறைத்துவிட்டனர். எனவேதான் நாம் இப்போது இருக்கின்ற ஒரு சில வரலாற்று பொக்கிசங்களையாவது பாதுகாக்க வேண்டும். அதிலும் பண்டாரவன்னியனோடு தொடர்புடையவை முக்கியமானதே.

சுழியன்



## சொல்லுறன் கேளுங்கோ

அடிசக்கை எண்டானாம் அம்மன் கோயில் புக்கை எண்டானாம். இந்த அஸ்கிரிய,மல்வத்த பீட மகாநாயக்கர்கள் எவ்வளவு தெளிவாக வரலாறு தொடர்பாகவும் இன்றைய நேற்றைய யதார்த்த நிலை தொடர்பாகவும் புரிஞ்சு வைச்சிருக்கினம்.

அதுவும் நோர்வேயிலிருந்து வந்த விசேட தூதுவர் எரிக்சொல்கெய்மிடம் ஒரு வரலாற்றுக்கதையை அவிழ்த்துவிட்டு இந்த இலங்கைத்தீவு என்னவோ பௌத்த நாடாகவே தோன்றியது போலவும் விட்டார்கள் ஐயா ஒரு சரடு. அதைத்தான் தாங்க முடியவில்லை.

அதாவது எப்படித் தெரியுமோ ஒரு வரலாற்றுக்கதையொண்டை அவிழ்த்து விட்டிருக்கினம். வரலாற்றுக்காலம் முதல் வடக்கில் சிங்கள மக்கள் வாழ்ந்து வந்தனர். பௌத்த விகாரைகளும் ஏராளமாக இருந்தனர். தென்னிந்தியத் தமிழர்களின் குடியேற்றத்துடன் சிங்கள மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டன. பௌத்த விகாரைகளும் அழிக்கப்பட்டன் எண்டு விட்டிருக்கினம் ஒரு கதை.

இல்லை நான் கேக்கிறன். இந்த மகாநாயக்கர் என்ன தமிழர்களையும் உலகத்தையும் இளிச்சவாயர்கள் எண்டா நினைச்சுக் கொண்டிருக்கினம்.

இலங்கையின்ர மூத்த குடிகளாக இயக்கர்களும் நாகர்களும் தான் வாழ்ந்தவைகள் எண்டிறத இவர் சொல்லாட்டி என்ன தெரியாதோ.

அதோட லாலாவோ லீலாவோ எண்டிற இடத்திலயிருந்து அடிச்சுக் கலைக்க இஞ்சவந்து இறங்கின விஜயனின் வரலாற்றோடதான் இவையின்ர வரலாறும் தொடங்கியது என்றது என்ன தெரியாமலோ போட்டுது. விஜயனுக்கே இறங்க இடம் கொடுத்தது குவேனி எண்டிறது இண்டைக்கும் வரலாற்றுப்பாடமாக இருக்குப் பாருங்கோ.

தட்டிச்சுற்றி எங்கட நிலத்தை பிடிச்சு வைச்சுக்கொண்டு வெள்ளைக் காரருக்கு இவையள் வரலாற்றுப்பாடம் நடத்தினமாம் நடத்தினம். அதுசரி என்ன தென்னிலங்கையில வாழும் சிங்கள மக்கள் தமிழரை வெளியேறு எனக்கூறினால் என்ன கடல்ல பாய்வதா எனக் கேட்டாராம். ஐயா சாமிக்கு தமிழ் ஒண்டும் கடல்ல பாயவேண்டிய அவசியம் இல்லை.வேலுப்பிள்ளையின்ர மோன் இஞ்ச ஒரு நாட்டை உருவாக்கி வைச்சிருக்கிறார். இதை உங்கட வாயால சொல்ல வெக்கமாக இருந்தால் பேசாம இருங்கோ அதுக்காக புதுக்கதை விடாதையுங்கோ.



# சிந்தித்தால் போதும்... சரி செய்து விடலாம்

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களது எதிரிகள். மற்றவர்களது மனதைக் குப்பைத் தொட்டியாக்கும் எதிரிகள். மற்றவர்களது மனங்களை, எண்ணங்களை, வாழ்க்கையை ஒரு போதும் சிந்திப்பதில்லை. நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளும் சுய நலவாதிகள்.

இன்றைய சமூகத்தில் மனிதர்களை மனிதர்கள் ஏமாற்றுவதும், பொறாமை கொள்வதும் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன. அரசியல் வாதிகள் தொடக்கம் அதிகாரிகள் வரை இப்படித்தான் வாழ்க்கையை நடத்திச்செல்கிறார்கள். அரசியல் வாதிகளின் தேசியக் கொள்கையே மற்றவர்களை ஏமாற்றி அடிமைப் படுத்தி தாங்கள் அரியணையில் ஏறிக் கொள்வது அவர்களை நாம் ஒரு போதும் குற்றம் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் தன்னுடைய சுவாசக் காற்று வாயுமண்டலத்தில் தனியாக ஏதும் இல்லை என்பது தெரியாத பாவிகள் அவர்கள்.

இங்கு நாம் பார்ப்பது அதிகாரிகளை. இவர்கள் பலதரப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளாகப் பொறுப்பேற்றுக்கொண்டதோடு அவர்களின் அதிகாரம் ஆரம்பமாகிறது. உண்மையில் அதிகாரிகள் ஊர் வளர்க்க வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஆனால் இன்று ஒரு சில அதிகாரிகள் பட்டங்களைப் பெற்று வட்டங்களுக்குள்ளேயே நின்றுவிடுகின்றனர்.

கல்விப் பணிக்கான அதிகாரம் ஒருவருக்குக் கிடைத்திருந்தால் அவ்ஊர் மாணவர்களின் கல்வி அறிவு எப்படி இருக்கிறது. அறிவை வளர்க்க எப்படிப்பட்ட உதவிகளைச் செய்யலாம் என்ற சிந்தனை சிதையாமல் இருக்கவேண்டும்.

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமை உடைத்து இவ்வுல்கு" என்பார் வள்ளுவர்.

மனித குல சமூக வாழ்க்கைக்குரிய பார்வையும், கருத்தும், செயல் திறனும் உள்ளவர்கள்தான் பொறுப்பேற்றுக்கொண்ட பணியைத் திறம்பட நடத்துவார்கள்.

எம் பிரதேசங்களில் பணியாற்றும் அதிகாரிகளின் அசட்டுத் துணிச்சல்களினால் அவர்களை நாடி வரும் பயனாளிகள் வாடிநிற்கும் நிலைதான் உள்ளது. எம் பிரதேசம் எந்தவொரு வசதி வாய்ப்புக்களையும் கொண்டிராத பிரதேசம். எம்மக்கள் ஆமிக்குப் பயந்து செல்லுக்கு ஓடி அகதிகளாக்கப்பட்டு, அரைவயிறு உண்டும் உண்ணாமலும் குப்பி விளக்கில் கண்குத்தப் படித்து பல்கலைக்கழகத்தின் படியைத் தொட்டு விட வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக தவமிருந்து பெற்றுவிட்ட வாய்ப்பை கைநழுவவிட்டுவிட்டு பரிதவிக்கும் பாவிகளாகிவிட்டார்கள்.

இதற்குக் காரணங்கள் பலவாறாக சுட்டப்படுகின்றன. இங்கு அரசு மேற்கொள்ளும் சட்டங்களில் செய்து கொண்ட சமரசங்கள் காரணமாகவும் உள்ளது.

அரசு அடிக்கடி மாற்றிக்கொள்ளும் சட்டங்களை காலதாமதமாகவும் அத்தோடு சிங்கள மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அறிவுறுத்தல்களை அனுப்பி வைக்கின்றபோது அவற்றை வாசித்து விளங்கிக் கொள்பவர்கள் அதுவாக இருக்குமோ? அல்லது இதுவாக இருக்குமோ? என்று சஞ்சலப்பட்டுக் கொண்டு தமக்கு விளங்கியவாறு அறிவுறுத்தல்களை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

இது மாத்திரமல்லாமல் புதிய புதிய சட்டங்கள் மாறுதல்கள் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஒ[illegible]கூட்டி விடயங்களை விளக்குகின்றார்கள். அவற்றை எம் அதிகாரிகள் அசட்டையாகக் கேட்டுவிட்டு செயற்படத் தொடங்குகின்றார்கள். இந்த நிலையை மாணவர்களின் நிலையிலிருந்து பார்க்கும் போது பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகின்ற கதையாக உள்ளது.

அதிகாரிக்கு அதிகாரி, அதிகாரிக்கு அதிகாரி என்று அதிகாரம் படியேறிச் செல்கின்றது. அதிகாரம் பலவீனமடைந்த பகுதிகளில் கூடுதலாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. ஒரு இடத்தில் மாணவர்களை உங்களுக்கு விருப்பமான ஒரு காட்சியை படமாகவரையுங்கள் என்று சொல்லியிருந்தாராம் ஒரு ஆசிரியர். அம்மாணவர்கள் படம் வரைந்து முடிந்ததும் படங்கள் ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்க்கும்போது பல மாணவர்களின் எண்ணங்கள் அந்த இடத்திலுள்ள அதிகாரியைச் சுட்டுவதாகவே இருந்ததாம். என்னவென்றால் அதிகாரியின் அறையில் அதிகாரியின் இருப்பிடத்தில் பலவாறான படங்கள் கீறப்பட்டிருந்ததாம். (மிருகங்கள்) இவற்றைக்கொண்டு நோக்கினால் அதிகாரிகளின் செயற்பாடுகள் மாணவர் மத்தியில் எவ்வித தாக்கத்தை உண்டுபண்ணுகின்றன என்பது புலனாகின்றது.

இப்படித்தான் ஒவ்வொரு துறைசார் நடவடிக்கைகளிலும் அதிகாரம் தொடர்பான பிரச்சினை தொடர்கிறது.

அண்மையில் நண்பர் ஒருவர் வேடிக்கையாகவும் அதே வேளை வேதனையாகவும் ஒரு கதை சொன்னார். தங்கள் பாடசாலைக்கு கணனிகள் (Computers) வந்ததாம். அவற்றை அலுமாரியில் வைத்துப் பூட்டிவிட்டாராம் அதிபர். ஏனென்று கேட்டபோது Mouse சை Mouse தின்னாமல் பூட்டி வைத்திருக்கிறேன் என வேடிக்கையாகப் பதில் சொன்னாராம். அவர்களிலும் பிழையில்லை ஏனென்றால் அவர்களுக்கு மேலுள்ளவர்கள் பார்வையிட வரும் போது கொடுக்கப்பட்ட உபகரணங்கள் பக்குவமாக உள்ளதா என்றுதான் பார்க்கிறார்களேயொழிய எந்த அளவுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றதென்பதை பார்ப்பதேயில்லை. படியேறும் அதிகாரத்தில் பொருட்பதிவேட்டில் (Inventory) உள்ளபடி சாமான்கள் பத்திரமாக இருந்தால் போதும் என்கிற மனநிலையில் இருந்தால் இச் சாமானுகள் எல்லாம் எப்படி அலுமாரிகளை விட்டு கீழிறங்கும்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதற்கு அதிகாரிகள் வழிகாட்டியாக இருப்பதோடு தம்மால் இயலுமான உதவிகளைச் செய்துகொடுக்க வேண்டும். கல்வி என்பது மாணவர்களை மையப்படுத்தியே இருக்கிற தொழிய அதிகாரிகளை மையப்படுத்தியதாக அல்ல. கல்விச்சாலைகளில் கல்விக்காக ஏதும் ஒரு உதவி கேட்டால் உதுகள் எல்லாம் செய்ய ஏலாது என்று மறுத்துவிடும் பல அதிகாரிகளை காண்கின்றோம். மாணவன் ஏன் நகல் எடுக்கிறான் அது அவனுக்கு முக்கியமானதா, அவன் ஏன் எங்களிடம் வந்து கேட்டான் என்ற கேள்விகளை ஒரு போதும் நாங்கள் எங்களைக் கேட்டுச் சிந்திப்பதில்லை. ஒரே வசனத்தில் உதெல்லாம் சரி வராது என்று மட்டும் சொல்லிவிடுவார்கள். பிரதேசத்திலேயே அவ்வாறான வசதிகள் இல்லாதபோது அம்மாணவன் தனது மனதைக் குழப்பி கல்வியை வெறுக்கும் நிலை கூட ஏற்பட்டிருக்கிறது. கல்விக்காக உதவிகளை வழங்காத அதிகாரிகள் இறுதியில் அப்பொருட்கள் கரப்பொத்தான், கறையான், என்பவற்றுக்குள்ளாகி உள்ளுக்கு பழுதாகி வெளிப் பூச்சு மட்டும் பழுதாகாமல் இருக்கும். அப் பொருட்கள் தாம் அதிகாரத்திலிருந்து விலகும்போது பொருட் பதிவேட்டில் சரியாகக் காட்டிவிட்டு மட்டும் செல்லும் மகா வல்லவர்கள் பணியில் இருந்தென்னலாபம்.

இவ்வாறு பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கும் மாணவர்கள் மன இறுக்கங்களுக்கு ஆளாகின்றனர். உளவியல் கற்றவர்களினாலேயே உளத்தாக்கத்திற்கு உள்ளாகும் மாணவர்கள்தான் அதிகம். இப்படியான தவறுகள் நிசப்தமாக நகர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த உஷ்ணத்தை குறைப்பதற்கு, பிரளயங்களிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்கு யார் முன்வருவார்கள்.

**அகவிழி**



# தொடரப்படும் பால் அசமத்துவப்போக்கு

சமூகத்தில் ஆண்- பெண் என்பது பிறப்பால் பெறப்பட்டது. சமூகத்தைச் சமூகமாக இயங்க வைக்கும் செயற்பாட்டில் தனி நபர் ஒருவரிடம் எதிர் பார்க்கப்படும் பங்களிப்பு பிறப்பிலேயே ஏற்பட்டுவிடுகிறது. ஆண்-பெண் வேறுபாடு என்ற இந்த அமைப்பில் அங்கத்துவம் தவிர்க்கமுடியாதது. மாறுவேடம் போடும் அங்கத்துவத்திற்கு இங்கு இடமில்லை. பிறப்பினால் பெறப்பட்ட சமூகப்பங்கிலே அசௌகரியங்களை உணர்பவர்களுக்கு எதுவித மாற்றுமுறைகளும் இல்லை. தமிழர்களின் சமூக வாழ்வில் உள்ளூர ஊறி உறைந்து காணப்படும் பழமைவாதம், இனம், மொழித்தொன்மை, பாரம்பரிய கலாசாரம், பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற பல்வேறு பெயர்களிலும், போர்வையிலும் இன்றுவரை பால் அசமத்துவப்போக்குகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

காலம், காலமாக அடிமைச்சங்கிலியால் பூட்டப்பட்ட பெண் என்பவளுக்கு தந்தை ஒரு ஆண், சகோதரன் ஒரு ஆண், அதற்கும் மேல் கணவன் ஒரு ஆண்,ஆண்கள்தான் பெண்ணை அடிமைப்படுத்தினார்கள் என்பதல்ல இதன் கருத்து. பெண் அடிமைகளுக்கு பல்வேறு தூண்டிகள் நம்மிடையே காணப்படுகின்றன. துலங்கல்கள் வெளிப்பட்டு தம் பக்கச்சார்பான செயலுருவங்களை வெளிக்காட்டுகின்றன. "நெஞ்சில் அடிபட்டவனுக்குத்தான் நினைவில் வலி இருக்கும்" பாதிக்கப்பட்டவனுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வேளையில், பாதிப்பை ஏற்படுத்தியவனுக்கு சிறு விடயமாக ஏன்? அதுவுமில்லாமல் இருக்கலாம். ஏனெனில் அவன் பாதிப்புக்குள்ளாகவில்லை. இப்படியான சிந்தனைகள் உருவாக்கங்கள் ஒருதலைப்பட்சமான கருத்துக் கணிப்புக்களாகவே தென்படுகின்றன. ஆண், பெண் என்பவர்கள் பாதிப்பை ஏற்படுத்தாவண்ணம் பெண் உரிமைச்சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்வது உத்தமமானது.

ஒரு சாரார் மூலமான விசாரணை வெளிப்பாடுகளின் வழி, பெண்ணியவாதிகள் கூறும் கருத்துக்களுக்கு, விடைகாணாமல் இரு சாரார் வழியேயான சுமுகமான தீர்வு தான் உத்தமமானது. திரைமறைவிலிருந்துகொண்டு ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம் எனும் இரு துருவங்களை ஏற்படுத்தி, மட்டம் தட்டுதல் வழி விசனம் தெரிவிப்பதால் பலனேதுமில்லை. அன்பு வழி அணுகாத தொடர்பு உறவுமாகாது. நட்புமாகாது. சந்தேகமற்ற விதிகளின் படி இது விபரிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பம் எனும் நிலையில் நோக்கின், பெண்பிள்ளைகளுக்கு பாரபட்சம் உணவு போன்ற அடிப்படை நிலையில் இருந்தே காட்டப்படுகின்றது. பெண் என்பவள் பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல் போன்றவற்றுக்கு எடுத்துக்காட்டாகவே வளர்க்கப்படுகின்றாள். திருமணம் எனும் நிலையில் வரதட்சணை பற்றிச் சிந்திப்பது ஆணைப் பெற்ற ஒரு தாய், பெண்ணைப் பெற்றவர்கள், சீதனம் தேடவேண்டுமே என்பதற்காக

**இனியவள்**

அல்லும் பகலும் அயராது உழைக்கத்தலைப்படுகின்றனர். "சீதனம்" என்பதானதே ஒரு குடும்பத்தைப் பற்றிய தவறான கணிப்புக்குக் கூட இட்டுச் செல்கின்றது.

மனம் உள்ளவன்தான் மனிதன். ஒரு பெண்ணின் வாழும் உரிமையை மறுப்பவன் மனிதனல்ல. நேரே சிந்தித்து, நேரே கதைத்து நேர்மைப் பண்பு பேணுதல் மனித உரிமைகளில் முக்கியமானது. மாறாக சமூக மத்தியில் ஒரு பெண் பற்றிய தவறான பார்வையை விதைத்து, அவளை ஒரு கேலிப்பொருளாக கணிப்பீடு செய்பவன் மனிதனல்ல. பெண் உரிமைச் சிந்தனைகளிலே பெண்களின் பாதிப்புறு நிலைமைகளில் பெண்களும் சரி, ஆண்களும் சரி பங்கு கொள்கின்றார்கள். ஆனால் கருத்து வெளியிடும் தன்மையில், விடுப்பார்வத்து பார்வையாளர்களாகவே கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார்கள். செல்வாக்குகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

ஆணாதிக்கம்-பெண்ணாதிக்கம் என்பதெல்லாம், சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை என்பதான நேரிய சிந்தனைகளால் புறம்தள்ளப்படவேண்டியவை.

பெண்ணுக்குக் கொடுக்கும் திணிப்புக்கள், அழுத்தங்களில் பாலுறவு நிலைகள் பற்றிய போதனைகள் தேவையற்றவை. இன்றைய கல்வி கற்ற பெண்களுக்கு இவை பற்றிய அறிவு நன்கு புலப்படுமென்பதும் தெரிந்ததே. ஆண்-பெண் எனும் பேதங்கள் பற்றிய போட்டி தேவையற்றது. மாறாக பெண்ணியல் நோக்கில் மேம்பட்ட சிந்தனைகளை வெளிக்கொணரவேண்டும். ஒருவனின் கண்ணைக் கெடுத்துப் பார்வையற்றவனாக்கி விட்டுப் பார்!பார்! என்பதாக அழுத்தம் கொடுக்கக்கூடாது. இந்நிலை தொடருமானால் சமத்துவமும், சுதந்திரமும், சகோதரத்துவமும் ஏட்டளவிலே தான்.

பெண் என்ற காரணத்திற்காக அவளுக்கு ஆணைக்காட்டிலும் குறைந்த பட்ச உரிமைகளும், வசதிகளும் வழங்கப்படவேண்டுமென்பதற்கு அவளின் உடலமைப்பில் குறையேதுமில்லையென்பது தர்க்க ரீதியானதும், அறிவியல் ரீதியானது மாகும். ஆனால் பெண்ணினது பின் தங்கிய நிலைக்கு சமூகப்போலிக் காரணங்கள் மூலம் நியாயப்படுத்தப் படுகின்றது. பாலியல் பிரிவு முறை ஒருமுறை நிலைகொண்டதால் அதன் தாக்கத்தை விரிவுபடுத்தி சமூகத்தின் ஏனைய ஒடுக்குமுறைகளின் சேர்க்கைக்கு ஒரு களத்தை அமைத்துக் கொடுக்கிறது. பெண்களுக்கெதிரான பல்வேறு பட்ட அடக்கு முறைகளின் சங்கமத்திற்கு இடமளிப்பதாக அமைகின்றது. இவையே சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலும், ஸ்தாபனங்களிலும் இழையோடியுள்ளது.

பெண்ணியம் பற்றிய சித்தாந்தங்களில் பால் அசமத்துவப் போக்கைக் கடைப்பிடிக்கும் எமது சமூகங்களில், எழுதாத சமூகச்சட்டங்களை ஆண்களை விட அதிகம் பேணுவோர் பெண்களாகவே உள்ளனர். இவைகளை இவர்கள் மீறமுடியாத சமுதாய விதிகளாகவே கருதுகின்றனர். அதனால்தான் பாலியல் சித்தாந்தத்தை அன்றாட வாழ்வில் விருத்தி செய்வதில் பெண்கள் முக்கியமானதோர் பாத்திரத்தை வகிக்கின்றார்கள்.

(20 ஆம் பக்கம் பார்க்க..)

# கரைந்து போகும் கரையோரக்கிராமங்கள்

இரா-வின்

இடப்பெயர்வுகளையும்- இழப்புக்களையும் தொடர்ச்சியாக சந்தித்து, இப்பொழுது இயற்கையின் சீற்றத்தாலும் சிதைக்கப்பட்டவர்களில் இன்பருட்டி, சக்கோட்டை கிராம மக்களின் நிலை மிகவும் மோசமானது. கரையோரக் கிராமங்களான இவற்றில் பெரும்பாலானவர்கள் கடலை நம்பியே தமது வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர். இராணுவத்தினரது தாக்குதல்களிற்கும், ஆக்கிரமிப்புக்களிற்கும் இலக்காகிய இக்கிராம மக்கள், 1990 ஆம் ஆண்டு, 1995ஆம் ஆண்டுகளில் இருபெரும் இடப்பெயர்வுகளையும் சந்தித்துள்ளனர். மயிலிட்டி, பலாலி, நாகர்கோயில் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும் இங்குள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மேற்படி இரு கிராமங்களிலும் சுனாமிப் பேரலையினால் 15 பேர் இறந்துள்ளனர். இதில் 11 பேர் இரண்டு மாதம் முதல் 11 வயது வரை என்பது குறிப்பிடத்தக்கது. பலர் காயமடைந்ததுடன் பெறுமதியான சொத்துக்களையும் தொழில் வளங்களையும் இழந்துள்ளனர். சுனாமித் தாக்கத்திற்கு முன்பே போதிய வசதிவாய்ப்புக்களின்றி உள்ள இப்பகுதி மக்களின் எதிர்காலம் என்ன? கடற்கரையில் இருந்து 100 மீற்றரிற்கு உட்பட்டே பாடசாலை, தேவாலயம் முதல் பெருமளவானவர்களது வாழ்விடங்கள் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்வாய் வடமத்தி கிராம அலுவலர்( ஜே.398) கனகசபை- யோகேந்திரநாதன் தனது பிரிவுக்குட்பட்ட இன்பருட்டி, சக்கோட்டை கிராமங்கள் தொடர்பாகப் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள்;

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து தற்காலிகமாக உள்ளவர்களுடன், 529குடும்பங்கள் உள்ளனர். இவர்களில் 418 குடும்பங்கள் சுனாமிப் பேரலையினால் இடம்பெயர்ந்துள்ளனர். ஏனைய குடும்பங்கள், கடல் அலையினால் பாதிக்கப்படாதவர்கள். இங்கு உயிர் இழப்புக்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தபோதிலும் உடமைகளின் இழப்புக்கள் அதிகமாகவுள்ளது. இவ் இரு கிராமங்களையும் பொறுத்தவரையில் அல்வாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை என்ற ஒரே ஒரு பாடசாலையேயுள்ளது.

இப்பாடசாலை மாணவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களிற்கான பாடசாலை உபகரணங்கள், பாடசாலைச் சீருடைகள் இல்லை. பல மாணவர்கள் கலர் உடுப்புடன் பாடசாலைக்குச் செல்வதினை அவதானிக்கமுடிகிறது. இங்குள்ளவர்களில் அநேகமானவர்கள் தொழிலாளர்கள். இவர்களினால் பிள்ளைகளின் தேவைகளை உடனடியாக மேற்கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் தொடர் இடப்பெயர்வுகளைச் சந்தித்து இப்போ இருந்தவற்றையும் இழந்துள்ளனர்.

இப் பகுதியிலுள்ள கழிவு நீர்வாய்க்கால்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளன. கழிவு நீர் கடலுக்குள் போகாது கிராமங்களிலேயே தேங்கியுள்ளது. இதனால் நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. கழிவு நீர் வாய்க்கால், பாலங்களைத் திருத்தாது விட்டால் இனிவரும் காலங்களில் பெய்யும் மழையாலும் இக்கிராமம் பாதிக்கப்படவுள்ளது. முன்னேற்பாடாகவும், சுகாதார வசதி கருதியும் இவ் வீதிகளிற்கான கழிவு நீர் வாய்க்காலை அமைப்பதற்கு உரியவர்கள் முன்வர வேண்டும்.

அரசாங்கத்தால் 100மீற்றர் திட்டம் கொண்டுவரப்படுமானால் இக் கிராமத்தின் 75% ஆன குடிமனைகள் வேறு இடத்திற்கு போக வேண்டுமென்ற கட்டாயமுள்ளது. இங்குள்ள ஏனைய பகுதிகள் தோட்டக்காணியாக இருக்கின்றமையே காரணமாகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழிலாளர்களாகையால் இவர்கள் தொழிலை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் இல்லை. இவை தொடர்பான முழுமையான நடவடிக்கைகள் எதனையும் அரசாங்கம் இதுவரை மேற்கொள்ளவில்லை.

கடற்றொழிலாளர்களைப் பொறுத்தவரையில் சுயமாக உழைத்து வாழக்கூடியவர்கள் இவர்களிற்கு நிவாரணப் பொருட்களையும் ஏனைய் வீட்டுப்பாவனைப்பொருட்களையும் அநேகர் வழங்கிவருகின்றனர். இதனைவிட்டு இவர்களிற்கான தொழில் உபகரணங்களை வழங்கி தொழிலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையே உரிய அமைப்புக்கள் மேற்கொள்ளவேண்டும் என்றார். கிராமசேவையாளரான கனகசபை- யோகேந்திரநாதன்.


கிராம சேவையாளர் கனகசபை-யோகேந்திரநாதன்

பின்தங்கிய கரையோர கிராமங்களான சக்கோட்டை, இன்பருட்டிப் பகுதியில் 35 இற்கு மேற்பட்ட விதவைகள் உள்ள னர். இவர்களில் அநேக மானோர். மீன் தெரிவதற்குப்போய் அதில் கிடைப்பதைக் கொண்டே தமது வாழ்வை நகர்த்திவருகின்றனர். மாணவர்களினது இடைவிலகலின் வேகம் அண்மைக் காலங்கலில் அதிகரித்துள்ளது. இதற்கு குடும்ப வறுமையும் இளவயதுத் திருமணங்களுமே காரணமாக அமைகிறது. குடும்பக் கட்டமைப்புப் பிறள்வுகளும் இப்பகுதியில் அதிகளவில் இடம் பெறுவதை அவதானிக்கமுடிகிறது.


அருட்தந்தை-பத்திநாதர்

முல்லைத்தீவு- கொக்கிளாயில் இருந்து இடம் பெயர்ந்து பலாலியில் மீள்குடியேறி, அ கிருந்து மீண்டும் இடம் பெயர்ந்து சக்கோட்டைப் பகுதியில் தற்காலிகமாக குடியேறியவர் தான் பொன்ராசா- றொபின்சன் சக்கோட்டையில் இருந்து இந்தியா சென்று கடந்த ஐந்து மாதங்களிற்கு முன் சக்கோட் டைக்கு வந்து சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் கடந்த இரண்டு மாதமாகவுள்ளார். தொடர்ச்சியான இழப்புக்களையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்த றொபின்சன் எம்முடன் பகிர்ந்துகொண்டவை;

எங்களிற்கென பலாலியிலும்- கொக்கிளாயிலும் காணி உள்ளது. கடந்த பல வருடங்களாக எமது பகுதியில் இராணுவத்தினரே முகாமமைத்துள்ளனர். நிரந்தரமான தொழில் இல்லை. குறிப்பிட்ட. காலத்திற்காவது ஒரு இடத்தில் நிரந்தரமாக இருக்கமுடிவதில்லை. நிம்மதியாக வாழ்க்கையை இதுவரை நாம் அனுபவிக்கவில்லை. 25 வருடங்களாக தொடர் அவலங்களை எதிர்கொண்டு வரும் எமக்கு அடுத்து என்ன செய்வதென்றே தெரியேல்ல, இங்க இருக்கிறம் நிவாரணம் தருகினம். இதுவும் எத்தனை நாளைக்கு எங்களிற்கென இங்க காணி இல்லாததால அகதி என்ற பெயருடனேயே தொடர்ந்தும் இருக்கவுள்ளோம்.




எமது பகுதியிலுள்ள இராணுவத்தினர் எங்கட நிலங்களில் இருந்து வெளியேறினால் இனிவரும் காலங்களிலாவது நாம் ஒரு இடத்தில் இருக்கலாம். நாங்கள் இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே இடம் மாறிக்கொண்டிருப்பது. எங்களிற்கென்று இப்ப எதுவுமில்லை. இருக்கிற காணியையாவது இராணுவத்தினர் எங்களிட்டம் தரவேணும்.

கடந்த காலங்களில் இராணுவ ஆக்கிரமிப்புக்களினால் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களிற்குச் சென்றோம். இப்போ இயற்கையின் சீற்றத்தால் இடம்பெயர்ந்துள்ளோம். இனி நாம் எங்கபோவது என எம்மிடம் கேள்வி எழுப்பினார் பொன்ராசா- றொபின்சன். இடப்பெயர்வுகளையும், இழப்புக்களையும் தொடர்ச்சியாக சந்தித்து இனி எங்கே, எப்படி வாழப்போகிறோம் என்ற அங்கலாப்பிலுள்ளவர்களில் இவரும் ஒருவர் என்பதை இவரது கருத்துக்களில் இருந்து விளங்கிக் கொள்ளமுடிகிறது.

சக்கோட்டை புனித சவேரியார் தேவாலய பங்குத் தந்தை பத்திநாதர் அடிகளார் பதிர்ந்துகொண்ட கருத்துக்கள், சுனாமிப்பேரலைக்கு முன்பே இப்பகுதி மக்கள் அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டு வந்தவர்கள் இப்பொழுது இவர்களது சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் மலசலகூடம், குடிநீர் வசதியின்றியுள்ளனர்.

பொதுவாக சித்திரை, வைகாசி மாதங்களில் இப் பகுதிக் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிடும். நீண்ட தூரங்களிற்குச் சென்றே தண்ணீர் பெற வேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களிற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். இவற்றுடன் சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இம் மக்களினது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியும். தனியே கடற்றொழிலை நம்பியுள்ளவர்களிற்கு அதுவும் இப்பொழுது கை கொடுப்பதில்லை. இளைஞர்- யுவதிகளிற்கான தொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அதன் ஊடாக வேலைவாய்ப்பின்றியுள்ளவர்க ிற்கு வேலைவாய்ப்புக்களை வழங்க லாம் என்றார் பங்குத்தந்தை பத்திநாதர்.

கரையோரக்கிராமங்களில் இராணுவத்தினரது கெடுபிடிகளும் அண்மையில் அதிகரித்துள்ளது. இன்பருட்டி- சக்கோட்டை கடற் கரையோரமாகவுள்ள முருகைகற்பா களை அகற்றி தமது தொழி இலகுவாக்குவதற்குக் கூட இராணு வத்தினர் தடை விதித்துள்ளனர். தொழில் வளங்களை இழந்துபோயுள்ளவர்கள் சுனாமிப்பேரலையினால் கரையொதுங்கியுள்ள முருகைக்கற்பாறைகளையே அகற்றி தொழில் செய்வதற்கான புனரமைப்பை மேற்கொள்ளவே இராணுவத்தினர் முட்டுக்கட்டையாகவுள்ளனர்.

ஆமியால், சுனாமியால், மீண்டும் ஆமியால் தொடர்ச்சியான அவலங்களையும் இழப்புக்களையும் சந்தித்த இப்பகுதி வாழ் மக்களிற்கு மறுவாழ்வை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அரசசார்பற்ற பொது அமைப்புக்களாவது முன்வரவேண்டும். கரையோரக் கிராமங்கள் புனரமைக்கவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







இன்றைய உலகில் நாளுக்கு நாள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அதிலும் அமெரிக்கர் வித்தியாசமானவர்கள் இன்றைய அவர்களின் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம். இதனடிப்

# இனி பெற்றோலியம் தேவையில்லையா...?

படையில்தான் அமெரிக்காவின் கால்ட்லேக் நகரில் அமெரிக்க அரசின் ஒரு பரிசோதனைச் சாலையும் ஒரு தனியார் நிறுவனமும் இணைந்து 2.6 மில்லியன் டொலர் பெறுமானமுள்ள ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். இந்த திட்டத்தின் நோக்கம் இன்று இருக்கின்ற பெற்றோலிய அடிப்படைப் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் ஒரு அணு உலையை உருவாக்குவது.

நாளுக்கு நாள் எரிபொருட்களின் பாவனை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எரிபொருள் கனிய வளம் தீர்ந்து விடுமானால் இந்த நவீன உலகமும் தீர்ந்துவிடும். எனவேதான் அதற்கு பதிலாகத்தான் மிக மிக அதிக வெப்பத்தில் தண்ணீரை ஐதரசனாகவும், ஒட்சிசனாகவும் பிரித்து அதில் வரும் ஐதரசனை பெற்றோலியத்திற்கு மாறாக பயன்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். ஹீலியத்தை குளிர்ப்படுத்த உபயோகிப்பதும் அதிவெப்ப அணு உலையின் மூலம் உருவாக்கப்படும் ஐதரசன் பெற்றோலியத்தைவிட குறைந்த செலவினை உருவாக்கும் என்பதனை நாங்கள் பரிசோதனை மூலம் காட்டு[illegible]கின்றோம். என இந்த பரிசோதனைச்சாலையின் ஆராய்ச்சியாளர் ஸ்டீவ் ஹெர்ரிவ் தெரிவித்துள்ளார்.

மின்சாரத்தின் மூலம் நீரை ஐதரசனாகவும், ஒட்சிசனாகவும் பிரிக்கும் முறை 150 ஆண்டுகளாக இருந்து வருகின்றது. ஆனால் மின்சாரத்தின் மிக உயர்ந்த விலையும் இதன் மூலம் உருவாகும் ஐதரசன் விலையும் இந்த முறையை வியாபார ரீதியில் பயன்படுத்த தடையாக இருந்தது. உயர் வெப்ப மின்சாரத்தில் ஐதரசனை பிரிக்க தேவையான மின்சாரத்தை வெகுவாக குறைக்கிறது. இதற்குப் பதிலாக வெப்ப சக்தியை பயன்படுத்திக் கொள்கிறோம் என பரிசோதனைச் சாலையின் மற்றொரு ஆய்வாளர் ஜோஸப் ஹர்ட் விக்ஸென் கூறுகின்றார். 2017ஆம் ஆண்டளவில் இவ்வாறான ஒரு அணு உலையை தயாரித்து விடுவோம் என்கின்றனர். இப்போது இருக்கின்ற பெற்றோலியப் பொருளாதாரத்தை ஐதரசன் பொருளாதாரமாக மாற்றுவதற்கு பத்தாண்டுகள் தேவைப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது கார்களுக்கு பயன்படுத்தப்படும் பெற்றோலியத்திற்கு பதிலாக இனிவரும்




காலங்களில் ஐதரசன் மூலம் உருவாக்கப்படும் எரிபொருளை பயன்படுத்தலாம். 300 மெகாவாட் அணு உலை சுமார் 30000 வீடுகளுக்குமின் சக்தியை அல்லது 50000 பேர்களுக்கு பிரயாணச் சக்தியையும் கொடுக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது. எது எப்படியோ பெற்றோலியத்திற்கு பிரதியீடாக மாற்று எரிபொருள் கண்டுபிடிக்கப்படுவது மகிழ்ச்சியே. வாழ்க விஞ்ஞானம் வளர்க புதிய கண்டுபிடிப்புக்கள்.

---

இயற்கையில் பல பல அதிசயங்கள், மாற்றங்கள் என்பன நடந்து கொண்டே இருக்கின்றன. இதில் சில வற்றுக்குக் காரணங்கள் தேடக்கூடியதாக உள்ளன. ஆனால் மேலும் சிலவற்றுக்கு ஏன்? என்ற கேள்விக்கு விடை தெரியாமலும் உள்ளது.


பூங்காவில் நீர் உயர்ந்து எழும்படியாகச் செய்யும் செயற்கை ஊற்றுக்

# அதிசய வெந்நீர் ஊற்றுகள்

களைப் பார்த்திருப்பீர்கள். இவை அழகுக்காக அமைக்கப்பட்டவை. இதே போல் இயற்கையாகவே சில இடங்களில் தரைக்கு அடியிலிருந்து இது போன்ற நீரூற்றுக்கள் வெளிப்படுவது உண்டு. இவற்றின் நீர் சூடாக இருக்கும். இவற்றையே நாம் வெந்நீர் ஊற்றுகள் என்கிறோம்.


எரிமலைப் பகுதிகளில் இத்தகைய வெந்நீர் ஊற்றுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. நியூசிலாந்து, ஐஸ்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் காணலாம். இதில் "எல்லோஸ்ட்டோன்" தேசிய பூங்காவிலுள்ள ஓல்ட்பெய்த்புல் **(Old Faithful)** எனும் வெந்நீர் ஊற்று உலகப் புகழ்பெற்றது. இங்கு ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு முறை சுமார் 70000 லீற்றர் நீர் 40 மீற்றர் உயரத்திற்கு பீறிட்டு எழுகிறது. இவ்வாறு தொடர்ந்து நான்கு நிமிடம் வரை நீடிக்கும். பின் அடங்கிவிடும். மறுபடியும் ஒரு மணித்தியாலம் கழித்து நீர் பீறிட்டு வெளிப்படும்.

இது எவ்வாறு ஏற்படுகிறது என்றால்? பூமியின் உட்பாகம் வெப்பமானது. இவ் வெப்பத்தினால் அவ்விடத்திலுள்ள பாறைகள் கூட உருகி குழம்பாக இருக்கும். எரிமலைகள் நிறைந்த இடங்களில் இப் பாறைக் குழம்பு தரைக்குக் கீழே சிறிது தொலைவிலேயே காணப்படுகிறது. அவ்விடங்களில் அதற்கு மேல் சேரும் நீர் கொதித்து ஆவியாகும். ஆவியின் அழுத்தத்தினால் அங்கு இருக்கக் கூடிய துளை அல்லது வெடிப்பின் வழியாக



தரைக்கு மேல் நீர் வெளிப்படும். அது மீண்டும் வெடிப்பின் நீர் நிறைந்து கொதித்து வெளிப்படுவதற்குச் சற்று நேரமாகும். சில வெந்நீர் ஊற்றுக்களில் இடை விட்டு நீர் பீறிட்டு எழுவதற்கு இதுவே காரணம் இது பார்ப்பதற்கு மிக அழகாகக் காணப்படும். இதனால் என்னவோ பல ஆயிரக் கணக்கான உல்லாசப் பயணிகள் இவ்விடங்களில் கூடுவது வழக்கமாகிவிட்டது. ஆபத்தான இடங்களில் அழகான நீர் ஊற்றுகள்.

---



மருத்துவம்

# இளம்பிள்ளை வாதம்

ஆடித்திரியும் மயில்களின் கால்களை முறித்துப் போடுவது போன்று ஓடி, ஆடித்திரியும் குழந்தைகளின் கை கால்களைச் செயல் இழக்கச் செய்து அவர்களை முடமாக்கி விடுகிற மிகக் கொடுமையான நோய் இளம்பிள்ளை வாதம்.

போலியோமைலிட்டிஸ் (Poliomyelitis) என்று மருத்துவர்களால் அழைக்கப்படும் இந்நோய் ஒரு தொற்றுநோய் வகையைச் சேர்ந்தது. இது எல்லா வகையினரையும் தாக்கக் கூடியதுதான் என்றாலும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளே பெரும்பாலும் தாக்கப்படுகின்றனர். எனவேதான் இதற்கு "இளம் பிள்ளை வாதம்" என பெயர் சூட்டியுள்ளனர்.

இந்நோய் போலியோ வைரஸ் (Polio Virus) எனும் நுண் கிருமிகளால் ஏற்படுகின்றது. இந்த வைரஸ் I, II,III, என மூன்று வகைகளை கொண்டது. இதில் முதலாவது வகையே ஆபத்தானது. பாதிக்கப்பட்ட குழந்தையின் தொண்டையிலும், குடலிலும் இவை வாழ்க்கை நடத்துகின்றன. தொண்டைச் சளியிலும், மலத்தின் மூலமும் இவை உடம்பை விட்டு வெளியேறுகின்றன.

இளம்பிள்ளை வாத நோய் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையிடமிருந்து மற்றொரு குழந்தைக்கு நோய் பரவுகின்றது. குழந்தை இருமும்போதும், தும்மும் போதும் தொண்டையிலிருந்து வரும் சளி மூலமும் குழந்தையின் மலம் மூலமும் வைரஸ் கிருமி வெளியேறி நேரடியாகவோ அல்லது ஈக்கள் மூலமோ உணவிலும், குடிநீரிலும்



கலந்து குழந்தையின் உடம்பில் நுழைந்து கொள்கின்றன. உடலில் சென்றதும் அவை தொண்டையிலும், குடலிலும் உள்ள நிணநீர்த் திசுக்களில் இனப் பெருக்கம் அடைந்து நிணநீர்ப் பாதை வழியாக இரத்தத்தில் கலக்கிறது. பின்பு அங்கிருந்து மூளைக்குச் சென்று மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்குகின்றது. இதில் என்ன ஆபத்து என்றால் போலியோ வைரஸ்கள் பெருமபாலும் முதுகுத் தண்டு வட்டத்திலுள்ள இயக்க நரம்பணுக்களை மட்டுமே விரும்பித்தாக்குகின்றன. அதனால்தான் இந்நோயில கால்கள் செயல் இழக்கின்றன. அத்தோடு சில சமயங்களில் மூளை நரம்பணுக்களையும் அவை பாதிப்பதுண்டு. அப்போது கைகளும், கால்களும் ஒரே நேரத்தில் செயல் இழக்கும்.

வைரஸ் கிருமிகள் உடம்புக்குள் நுழைந்த 7-14 நாட்களுக்குள் நோயின் அறிகுறி தெரிய ஆரம்பிக்கும். ஆரம்பத்தில் மிதமான காய்ச்சலும், சாதாரண தடிமனும்தான் தெரியும் காய்ச்சல் ஆரம்பித்த மூன்றாம் நாள் தலைவலி,கால்வலி, கழுத்து வலி, வாந்தி என அறிகுறிகள் காணப்படும். பின்னர் அதுவரை நின்று நடந்து திரிந்த குழந்தை நிற்க நடக்க முயாமல் கால்கள் செயலிழக்கத் தொடங்கும் இதைவிட வைரஸ் மார்புத் தசையை பாதித்திருந்தால் குழந்தை மூச்சுவிட திணறும். அப்போது உடனே சிகிச்சை கிடைத்து விட்டால் உயிர் பிழைக்கும். இல்லையெனில் மரணம் நேரிடலாம்.

எனவேதான் பாதிக்கப்பட்ட குழந்தையை உடனடியாக தனிமைப் படுத்த வேண்டும். பின்பு வைத்திய சாலையை கட்டாயமாக அணுக வேண்டும். இதைவிட போலியோவை தடுப்பதற்காக கண்டுபிடிக்கப்பட்ட இளம்பிள்ளைவாத வாய்வழி தடுப்புச் சொட்டு மருந்தை உரிய உரிய காலத்தில் கொடுத்து வருமுன் காத்து நலமுடன் வாழுங்கள்.

---



# ஆஸ்துமாவுடன் வாழ்தல்

உண்மையில் ஆஸ்துமா ஒரு மிகவும் பழமையான நோயாகும். 3500 வருடங்களுக்கு முன் புராதன எகிப்தில் இது முதலில் விளக்கப் பட்டுள்ளது. எனினும் ஆஸ்துமா பற்றிய முதலாவது செம்மையான விளக்கம் 1819 வரை பதியப்படவில்லை. 19ஆம் நூற்றாண்டின் முடிவின் போது காற்று வழிகளின் அழற்சியான நிலைமையாகவே ஆஸ்துமா கவனத்திற்கு எடுக்கப்பட்டது. மகரந்தங்கள் அல்லது வீட்டுத் தூசிக்கறையான் (Dust Mite) போன்ற சூழலில் உள்ள சில பொருட்களுக்கு "அலர்ஸிக்காக" ஆஸ்துமா விளங்கும் எனவும் அல்லது கடும் உழைப்பு, குளிர்காற்று, காலநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் மற்றும் உணர்ச்சி பூர்வமான மன அழுத்தம் போன்றன ஏனைய தூண்டல்களை இது கொண்டிருக்கலாம் எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆஸ்துமாவை புரிந்துகொள்வதிலும் அதற்கு சிகிச்சை அளிப்பதிலும் கடந்த இருபது வருடங்களின் போது பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சில உண்மைகளும், புள்ளி விபரங்களும்.

உலகில் உள்ள ஒவ்வொரு நாடுகளிலும் இடம்பெறும் மிகவும் பொதுவான நோயே ஆஸ்துமா ஆகும். \ பெருமளவு கைத்தொழில்மய நாடுகள் ஒரே தொகையிலான ஆஸ்துமாவைக் கொண்டுள்ளன. எனினும் ஜப்பானில் இது குறைவாகவே உள்ளது. நியூகினியா போன்றன ஏனைய நாடுகளில் ஆஸ்துமா அதிகரித்த அளவில் இடம்பெறுகின்றது. உண்மையில் ஆஸ்துமா அபூர்வமாக விளங்கியபடியால் அண்மை வரை இதற்குப் பூர்வீகச் சொல் இருக்கவில்லை.

(தொடரும்)




# சிட்டுக்குருவிக்கு சிறகுகள் உண்டு



அதனை முதன் முதலில் கண்டவள், சுஜா என்று பெரும் பாலான உறவுகள் மற்றும் நண்பர்களால் செல்லமாக அழைக்கப் பட்டவளும் பிறந்து அநேக காலம் யாழ்ப்பாணத்திலேயே வசித்தாலும் தற்போது கொழும்பில் வதிபவளும் மிக அழகிய பெண்ணும் என் மைத்துனியுமான சுஜாதா.

தனது கரு நீல விழிகளில் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் தேக்கி, விழிகளை விரித்து... புருவங்களை வில்லென வளைத்து... ஒரு சிறுமியின் உற்சாகத்துடன், நடுக் ஹோலில் நின்றபடி கத்தினாள்.

"இஞ்ச... இஞ்ச... ரெண்டு குருவி, கூடு கட்டுது. ஓடி வாங்கோ... வந்து பாருங்கோ..."

அவள் அழைத்த விதம் உவகை கொள்ள வைத்தது. என் பெயரைச் சொல்வதைத் தவிர்த்து, மரியாதையாக அழைக்கிறாள். ஆயினும் இதற்காக அதிகம் சிரமப்படுகிறாள்.

பாடசாலை விடுமுறைக்காக கொழும்பிலிருந்து இங்கு வந்த ஒரு வாரமும் நான் தினமும் அனுபவிக்கும் 'இன்ப அவஸ்தை' இது.

தனது பன்னிரண்டு வயது வரையிலும் இங்குதான் இருந்தாள். அப்போது ஒன்றாக மணல் விளையாட்டும் கள்ளன் பொலிஸ் விளையாட்டும் விளையாடிய ஆட்கள் தான் நாம். அப்போதெல்லாம், இப்போது போல "வாங்கோ... போங்கோ" கிடையாது.

பருவம் எவ்வளவு மாறுதல்களைச் செய்துவிட்டது!

சூரியக்கதிருடன் ஓடிப்போய் கொழும்பிலிருந்து உயர்தரம் படிக்கிறாள். போனதற்கு இம்முறைதான் ஊர்திரும்பியிருக்கிறாள். பருவப் பெண்ணாக- என்னைச் சீண்ட ஒரு வாரமாக பிறர் அறியாமல் ஒருவரையொருவர் இரகசியமாகச் சீண்டி வேடிக்கை பண்ணிக்கொண்டு தானிருக்கிறோம்!

நான் போனபோது, ஒரு குருவிதான் இருந்தது. மற்றையது வெளியே பறந்துவிட்டது. சுவருடன் பொருத்தப்பட்டிருந்த அம்மப்பாவின் படத்திற்கு மேலிருந்த சிவப்பு மின் விளக்கின் வளைந்த கறுத்தப் பிடியில் உட்கார்ந்திருந்து எம்மைப் பார்த்துக்கொண்டிருந்தது.

அதுவும் பறந்துவிடுமோ என்ற அச்சத்தில், சுஜா வாயில் கைவைத்து ''உஸ்...ஸ்...ஸ் என்றாள்.

தலையை அப்படியும் இப்படியுமாக சரித்துப் பார்த்து... வாலை அசைத்து... உடலை ஒரு முறை வெட்டித் திருப்பிப்பறந்து போனது. முன் கூடத்திலிருந்த சாய்வு நாற்காலியில் சில விநாடிகள் உட்கார்ந்து மீளவும் பறந்து போனது.

"அங்க கூடு... இப்பதான் கட்டத் தொடங்கியிருக்குது. இந்தக் குருவி எனக்குத்தான்" சுஜா காட்டிய திசையில் பார்த்தேன். அம்மப்பாவின் படத்திற்கு மேலே சுவரிற்கும் ஓட்டிற்கும் இடையில் சில தும்புகள் கூடொன்றிற்கான அத்திவாரம்.

சுஜாவின் கூச்சலில் அம்மாவும் தங்கச்சியும் ஓடி வந்து விட்டனர். அடுப்படிக் காரியத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு அம்மா ஓடி வந்திருந்தாள். அவளது கையில் அகப்பையும்... அகப்பையிலிருந்து குழம்பும் வழிந்துகொண்டிருந்தது.

குருவிகளின் வரவில் தங்கையும் மகிழ்ந்தாள்.

''என்ன குருவியுது?'' என்றாள்.

''இதுதாண்டி சிட்டுக் குருவி.. உனக்குத் தெரியாதே..." என்ற சுஜா, என்னைத் திரும்பிப் பார்த்தாள். தான் சொன்னது சரியோ என்ற ஐயம் போலும் அவளுள். வந்த சிரிப்பை வாய்க்குள்ளேயே அடக்கினேன்.

அம்மா மட்டும் சலனமில்லாது பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, "அடுப்பில கறி" என்றபடி சமையலறைக்குள் போனாள்.

மீளவும் இரண்டு சிட்டுக்களும் பறந்து வந்தன. ஒரு சிட்டு கூட்டடியில் உட்கார்ந்தது. ஒன்று அந்தரத்தில் இறக்கையடித்தபடி நின்றுகொண்டிருந்தது. இரண்டினது அலகுகளிலும் தும்புகள்.

"அங்க... என்ன மாதிரி நிக்குது... ஹெலியும் உப்பிடி நிக்கும்'' இது சுஜா. இரண்டும் பளபளக்கும் கறுப்பு நிறத்தில் இருந்தன. இறக்கைகளில் கோடிழுத்த மாதிரி ஒரு வெள்ளைக் கோடு. அதற்கு மேலே, மண்ணிறமும் பச்சையும் சேர்ந்தது மாதிரியான ஒரு நிறம்.

கண்களும் கறுப்பு, உடலும் கறுப்பு. ஆயினும் கண்கள் வெகு துல்லியமாகத் தெரிந்தன. ஒளி வீசும் சிறு இரத்தினக்கல் போலிருந்தது.

ஒன்று மாறி ஒன்று, தும்புகளை வைத்துக் கூடு செய்தன.

நான் ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டேன். சுஜாவும் எனக்கருகில், சுவருடன் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். இருவரும் சிட்டுக்களில் ஆழ்ந்து போனோம்.

மற்றையவர்கள் தொலைக் காட்சியின் முன் அமர்ந்துவிட்டார்கள். அவர்கள் [illegible]மையாகப் பார்க்கும் தொடர்க[illegible]ரமாகியிருந்தது.

[illegible]ல் ஒரு தரம் எழுந்து வெளி[illegible] போய், சிட்டுக்கள் எங்கே தும்பெடுக்கின்றன எனப் பார்க்கப்போனேன். என் வரவு சிட்டுக்களை அச்சுறுத்தியது போலும், மெலிதாய்க் கீச்சிட்டபடி பறந்து விட்டன. சுஜா என்னை உள்ளே கூப்பிட, வந்து விட்டேன். அதன் பின் வேறு வேலைகளில் ஈடுபட, சிட்டுக்களை மறந்தே போனேன்.

மாலையில் அம்மா தயாரித்த தேனீரை சுஜாதான் கொண்டுவந்தாள். "கூடு கட்டிற்றுதுகள். பார்த்தனியளோ" என்றாள்.

மீளவும் சிட்டுக்களின் நினைவெழ, போய்ப் பார்த்தேன். பெரும்பாலும் கூடு தயாராகியிருந்தது. நல்லதொரு பொழுது போக்கு ஆரம்பமானதாகப்பட்டது.

சிட்டுக்களில் மகிழாதவர்கள் யாரிருக்கமுடியும்? அவற்றில் ஆழ்ந்தால் நேரம் போவதே தெரியாமல் போய்விடுமல்லவா!

என்னைப் போலவே சுஜாவுமிருந்தாள். தூங்கப் போகும் முன்பும்... விழித்தவுடனும் சிட்டுக்களுடனேயே உறவு கொண்டாள். சில நாட்களில் சிட்டுக்களிற்குப் பகிரங்கமாகவே 'குட்நைற்றும்' 'குட்மோர்னிங்'கும் சொன்னாள்.

எனக்குச் சிட்டுக்களின் மீதான ஈர்ப்பு ஏற்பட்டதற்கும் சுஜாவிற்கு ஈர்ப்பு ஏற்பட்டதற்கும் பரஸ்பரத் தொடர்புகளேதும் கிடையாது. நாங்கள் உள்ளுக்குள் எப்படியிருந்தாலும் இது விடயத்தில் தனித்தனி ஈர்ப்புக்களே இருந்தன. எனக்குச் சிறு வயது முதலே அந்த ஈர்ப்பு இருந்தது. சுஜாவிற்கும் அப்படியே இருந்திருக்கலாம்.

தானியங்களும், பிற உணவுகளும் சிட்டுக்களிற்கு இடத் தொடங்கினேன். அம்மப்பாவின் படத்திற்குக் கீழே அவற்றை வைத்துவிட்டு, சற்று எட்ட நிற்கவேண்டும். முதலில் ஒன்று மட்டும் எட்ட இறங்கும். கால்களை முன் பின்னாக வைத்தவாறு, தலையை வெட்டி வெட்டி... சரித்துச் சரித்து... வாலை மேலும் கீழுமாக... வலம் இடமாக

**யோ.கர்ணன்**

அசைத்துப் பார்க்கும். பிறகு மற்றையது இறங்கும். அதுவும் அவதானித்த பின் எட்ட நின்றபடி தானியத்தைப் பொறுக்கும். பிறகு சற்றே முன்னே வரும். மெது மெது வாய் பயம் தெளிந்து கொத்தத் தொடங்கும்.

விவஸ்தை கெட்ட அம்மா, நேர காலம் தெரியாமல் அப்போது தான் "எடி பிள்ளை... புளி முடிஞ்சுதடி, தேவியன்ரியிட்ட ஓடிப்போய் வேண்டிக்கொண்டு வா... ஓடிவா" என சமையலறைக்குள் இருந்தபடி நான்கு வீடுகளிற்குக் கேட்கும் படி கத்துவாள். நொடியில் சிட்டுக்கள் உயரப் பறக்கும். உயரமான இடங்களில் உட்கார்ந்து கொண்டு கீச்சிடும். அப்போது சுஜாவைப் பார்க்க வேண்டும், முகம் கறுத்துச் சுண்டிப் போய்விடும். ஆயினும் எதுவும் பேசமாட்டாள்.

அடக்கமாட்டாத கோபத்துடன் நான்தான் அம்மாவைப் பேசுவேன்.

"கண்டறியாத குருவி இஞ்ச, மனிசர் கிடந்து அவியிறன் நாடகத்துக்கும் நேரமாகுது. உனக்குத்தான் குருவியும்....." இந்தப் பதிலோ இதனது சாயலையுடைய் பதிலோ அம்மாவிடமிருந்து வரும்.

வீட்டுக்குள் அங்கு மிங்குமாக இரண்டு சிட்டுக்கள் பறந்து திரியத் தொடங்கியதுமே வீடு நிறைவு பெற்றுவிட்டது போலவும்... சகலதும் பெற்றது போலவுமொரு நிறைவு படர்ந்தது. பௌதீகப் பொருள் நிறைவு உண்டாகிறதோ இல்லையோ மனம் நிறைந்தால் சரிதானே!

நமது வீட்டில் சிட்டுக்கள் கூடு கட்டி நான்கு நாட்களின் பின் நீலப்பிள்ளை வாத்தியார் தன் கடைசி மகளின் 'லேடிஸ்' சைக்கிளில் வந்தார்.

எண்பது வயதிலும் அவர் சைக்கிள் ஓடித்திரிவது எங்கள் அனைவருக்கும் ஆச்சரியம். அதன் காரணமாகவே அவருக்குள் பிடிபடாத பெருமை வீட்டில் அரைமணி நேரம் இருப்பாரானால் நான்கு முறை கேட்பார்.

"என்ர வயதுக்கு நீங்கள் இருப்பியளோடா... இல்லக் கேக்கிறன். சொல்லன். ஏன் பேசாமல் இருக்கிறாய்?... என்னைப்பார், இப்பவும் கம்பு மாதிரித்தான்ரா இருக்கிறன். எல்லாம் அந்த நேரத்துச் சாப்பாடு தான்ரா பொடி" என்பார்.

அறுபது வயதின் பின் அவருக்கு லௌகீக வாழ்வின் மீதான பிடிப்பு அற்றுப்போகத் தொடங்கி விட்டது. இந்த வாழ்வு ஒரு நீர்க்குமிழ்.... வாழ்க்கை ஆண்டவனால் விதித்தபடி நடக்கின்றது. இடையில் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று அறுபது வயதின் பின் அவருக்குத் தோன்றியதில் ஆச்சரியமில்லைத்தானே!

காண்பவர்களிடமெல்லாம், லௌகீக வாழ்வின் நிலையாமை குறித்தும்... ஆன்மீக வாழ்வின் அவசியம் குறித்தும் உபதேசிக்கத் தொடங்கியிருந்ததனால் "ஆள் ஒரு மாதிரி" என்ற கருத்து பரவலாக நிலவியது.

சுஜாவைக் கண்டதும் "ஆர் இவள் பெடிச்சி..." என்றவர், "இவன் தான் கொத்திக்கொண்டு வந்திட்டானோ" என்று விட்டு, "ஹோ... ஹோ' எனப் பெரிதாகச் சிரித்தார்.

நான் சுஜாவைப் பார்த்தேன். முகம் "குப்" பெனச் சிவந்து போனது. அதுவும் அழகாய்த் தானிருந்தது. பெண்களிற்கு எதுதான் அழகில்லை?

அம்மாதான் "இதுதான் சரோண்ட கடைசி" என்றாள்.

ஆர் சரோண்டையோ... எடி பெட்டை எப்பிடி வளர்ந்திட்டாய்... மூக்குச் சளி வடிச்சுக்கொண்டு திரிஞ்சது நேற்று மாதிரியிருக்குது. இப்ப என்னடி செய்யிறாய்?

"குருவி பாத்துக்கொண்டிருக்கிறன்" என்றாள் குறும்பாக"

''குருவியோ... எங்க பாப்பம்'' அவளது குறும்பு அவருக்குப் புரியவில்லைப் போலும் சுஜா கூட்டிக்கொண்டுபோய்க் காட்டினாள்.

கண்களை இறுக்கியவாறு பார்த்தவர் "ரெண்டு என்ன" என்றார். பின் "பிறகென்ன லட்சுமி கடாட்சம் கிடைச்சிருக்குது. சிட்டு லட்சுமி ஓமடா" என்றார் என்னைப் பார்த்து.

''இதுகளக் கலைச்சுப் போட வேணும். வீடு வாசலில பீச்சினால் அரியண்டம் தாங்கேலாது....." என்றாள் அம்மா.

"சீச்சீ... அப்படிச் சொல்லாத பிள்ளை எல்லாத்துக்கும் ரெண்டு பக்கம் இருக்குது பிள்ளை வாழ்கையைப் பாரன்... அதுக்கும்..."

அவர் முடிக்குமுன் அம்மா எழுந்து போய்விட்டாள். அவளுக்கு எரிச்சல் கிளம்பியிருக்க வேண்டும்.

''இதுக்கு ஒரு பெட்டி சரிக்கட்டிவை.... இஞ்சயே நிரந்தரமாயிருந்திடும்" என்று விட்டு ஏதேதோ எல்லாம் கதைத்தார். முக்கியமாக, ஈராக் விடயத்தில் அமெரிக்காவின் போக்கு பிழை என்று உரத்த குரலில் சொன்னார். ஏதோ, நான்தான் புஷ் போலவும் அவர் உலகத்தின் மனச்சாட்சி போலவும் பேசிய விதம் எனக்குச் சிரிப்பாக இருந்தது.

சிட்டுக்குப் பெட்டி வைக்கும் திட்டத்தை கடுமையாக எதிர்த்தாள் சுஜா. குருவியின் இயற்கையான வாழ்வை நாம் குழப்பக் கூடாதாம். அதனை விடவும், அண்மைக் காலமாக ஒரு குருவிதான் திரிவதால், மறு குருவி முட்டையிட்டு அடைகாப்பதாகவும் இனிக்கூட்டை விட்டு மாறாது என்றும் சொன்னாள்.

எனக்கும் சரியென்றே பட்டது இரண்டு கருத்தும்.

இதற்குள் சுஜா புறப்பட வேண்டிய நாள் நெருங்கியது. அப்பாதான் கொழும்பில் கொண்டு போய் விட்டுவிட்டு வரவிருந்தார். கூட்டிக்கொண்டு வந்ததும் அவர் தான். அவள் புறப்பட இன்னும் இரண்டு நாளிருந்தது.

எப்படியாவது போவதற்குள் சிட்டுக்களுடன் புகைப்படமெடுக்க வேண்டுமென்றாள். கூடவே அதன் சாத்தியமற்ற தன்மைகளையும் அவளே சொன்னாள். நல்ல வேளையாக சிட்டொன்றைப் பிடித்துத் தரும்படி என்னைக் கேட்கவில்லை. மாரீசமான் தேடிய இராமனாயிருப்பேன்.

புறப்படுவதற்கு முதல் நாள் இரவு, நடு ஹோலிலிருந்த சுஜா, "தினேஷ்" எனக் கூப்பிட்டாள். சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த நான் அலுப்புடன் எழுந்து வந்து "என்ன" என்றேன். அவளது கண்களில் குறும்புத்தனம் தெரிந்தது. குறும்புச் சிரிப்புடன் "நான் கூப்பிடவில்லையே" என அபிநயித்தாள்.

ஏதோ குறும்பு செய்கிறாள் என்பது புரிந்தது. மகிழ்ச்சியூட்டும் தோல்வி ஒன்று ஏற்பட்டது. திரும்பிப் போக எத்தனிக்க. ''நான் குருவியத்தான் கூப்பிட்டனான்.'' என்றாள்.

"குருவியையோ?"

ம்... அதுக்குத்தான் அந்தப்பேர் வைச்சிருக்கிறன். "என்று குறும்பாகச் சிரித்தாள். சீண்டல் கலையை இளம் பெண்கள் எங்குதான் கற்கிறார்களோ? "

"அப்ப மற்றதுக்கு என்ன பேர்?'' என் கேள்வியினால் திகைத்துப் போனாள். அதிர்ச்சி முகத்தில் தெரிந்தது. 'அதுக்கு... அதுக்கு... ஆ... திருமதி தினேஸ்"

அவள் முகத்தில் வெற்றிக் களிப்பு படர்ந்தது. மீளவும் இன்பமான தோல்வி. இவ்விடத்தில் வெற்றியை விடவும் தோல்வி இன்பமானது. ஒரு முறை வெல்வதை விடவும் ஆயிரம் முறை தோற்கலாம்.

நான் திரும்பிப் போக, பின்னால் சொன்னாள்.

"இந்த வயதில சாய்மனைக் கட்டிலில படுக்கக் கூடாது. அதுதான் எழுப்பின்னான்" அவள் அப்படிச் சொல்வதற்காகவே, ஆயிரம் முறை சாய்மனைக் கட்டிலில் படுத்தெழலாம் போலிருந்தது.

→

வெளியே வர, முகுந்தன் வந்தான். முற்றத்தில் உட்கார்ந்து கதைத்தோம். கதையில் நேரம் ஓடியது தெரியவில்லை. மீளவும் உள்ளே வர,

அப்பாவும் தம்பியும் படுத்து விட்டனர். அம்மாவும் தங்கையும் தொலைக் காட்சியின் முன்னிருந்த னர். அவர்கள் படுக்க பத்தரை பதினொன்றாகும்.

சுஜா பல் துலக்கிவிட்டு இரவு உடையில் வந்தாள். அறைக்குள் நுழைந்தவள் மீளவும் எட்டிப் பார்த்தாள். மெலிதாய்ப் புன் முறுவல் பூத்தாள். அழகாயிருந்தாள். அப்படியே பார்த்துக்கொண்டிருக்க லாம் போலத் தோன்றியது. வாயை நெளித்து 'நெய்க்காட்டி' விட்டு அறைக் கதவைச் சாத்தினாள். உள்ளிருந்தபடியே-

"குட்நைற்" என்றாள்.

"குட்நைற்"

அவள் படுத்துவிட்டாள். மௌனம் திரை விரித்தது. நான் அதைக் கிழித்தேன் சிறிது நேரத்தின் முன் பெற்ற சுகமான தோல்வியின் இன்பத்தை அவளுக்கும் நான் உணர்த்த வேண்டும்தானே. காதல் என்பது பரஸ்பர புரிதலும்...புரிய வைப்பதும் தானே.

"சுஜா..." "என்ன..." "இஞ்ச வாவன்"

கட்டில் சத்தம் கேட்டது. பிறகு கதவு திறந்தது.

''என்ன'' என்றபடி என்னருகில் வந்தாள்.

நான் அவளைக் காணா தவன் போல, குருவிக் கூட்டைப் பார்த்து. "சுஜா நித்திரையாகிற றியோ... ?ங்கி வாபாப்பம்" என்றபடி கடைக் கண்ணால் அவளைப் பார்த் தேன். உள்ளே பொங்கிய மகிழ்ச் சியை அடக்கி,பொய்க் கோபம் காட்டி, தலையைச் சிலுப்பிக் கொண்டு போனாள். ஆயினும் மகிழ்ச்சியை மறைக்க முடியவில்லை. முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்ததே!

அவள் உள்ளே போக. "ஒன்பது மணிக்கே படுக்கக் கூடாது. பத்துக்குத்தான் படுக்க வேணும்" என்றேன்.

"நாளைக்குப்பயணம் தெரியுமோ" அதன் பின் நான் அவளைக் குழப்பவில்லை.

மறுநாள் காலை புறப் பட்டாள். நேற்றைய உற்சாகங் களைத் தொலைத்திருந்தாள். முகம் வாடியிருந்தது.

அடிக்கடி சிட்டுக்களைப் பார்ப்பதும் கதைப்பதுமாயிருந்தாள்.

"நான் போய் ரெலிபோனில அடிக்கடி கதைப்பன். கவனம் அதுகள்" என என்னைப் பார்த்தாள் இடையில்.

"குஞ்சு பொரிச்ச பிறகு எனக்கு ரெண்டு கொண்டு வந்து தருவியளோ மாமா"

''போடி விசரி...இஞ்சயிருந்து கொழும்பு கொண்டு வாறதுக்கிடையில செத்துப்போகுங்கள்" என்றார் அப்பா.

முடிவில் அவள் புறப்பட்டாள். சிட்டுக்களிற்குக் கையசைத்து விடைபெற்றாள். போகும்போது என்னையொரு பார்வை பார்த்தாள். ஒரு பார்வையில் இத்தனை காதல் இருக்குமா? நான் நொருங்கியே போனேன்.

சுஜா போன பின் இரண்டொரு நாட்கள் வீடு வெறுமையாயிருந்தாலும், பின்னாளில் அந்த இடைவெளியும் சிட்டுக்களால் நிரப்பப்பட்டு விட்டது.

இப்போது சிட்டுக்கள் இரண்டல்ல, நான்கு. முட்டையிட்டுப் பொரித்த இரண்டு சிட்டுக்கள் கூடியிருந்தன.

"கீச்கீச்" என ஒலி யெழுப்பியபடி அவை மெதுமெதுவாய் இவ்வுலகுடன் இணையத் தொடங் கின. சூட்சுமங்கள் நிறைந்த இவ்வு லகின் ஒவ்வொரு இரகசியப் பக் கங்களையும் அவை கற்றுக்கொள்ள ஆரம்பித்தன. கூடவே பறக்கவும் கற்றுக்கொண்டன.

இருபது நாள் இடை வெளிக்குள், நான்கோ ஐந்தோ முறை சுஜா ரெலிபோன் எடுத்துவிட்டாள். ஒரு நாள் அம்மா "என்னடி... இஞ்ச நாங்கள் இருக்கிறதயே நீ மறந்து போனாய் போல....ஆ...குருவிதான் சொந்தமோ... உன்ன மாதிரித்தான் இஞ்சயும் ஒரு பைத்தியம் இருக்குது." என்றாள்.

தலையை வெட்டி வெட்டி... சரித்துச் சரித்துப் பார்ப்பதை எவ் வாறுதான் குஞ்சுகளும் கற்றனவோ! அவையும் அப்படித்தான் பார்த்தன. மூத்தவைகளைப் போலவே ஆங் காங்கு குந்தி.. வால் அசைத்து கொள்ளையழகு காட்டின. அவற்றின் செய்கையில் மழலைத்தனம் தெரிந் தது.

நான்கு சிட்டுக்களும் ஒன்றாய் இருக்கும் சந்தர்ப்பத்தில் அதனைப் புகைப்படமெடுத்துவிடவேண்டு மெனத் தீர்மானித்துக்கொண்டேன். கமராவும் தயார் நிலையில் இருந் தது. அந்த முயற்சி சுஜாவுக்கானது.

அன்றொரு நாள் மாலை யில், "இஞ்ச...இந்தச் சனியனுகள.. இதில பீச்சிப் போட்டு நிக்குதுகள்... இதுகளால ஒரே ஆக்கினையப்பா. இந்தக்கூட்டை எடுத்து எறியுங்கோ பாப்பம்... சீ" அம்மா பெரிதாய்க் கத்தினாள்.

வந்து பார்த்தேன்- அம்மப் பாவின் படத்தின் மேல் சிட்டொன்று எச்சமிட்டிருந்தது. கண்ணாடியில் அது நீளமாய் வழிந்திருந்தது.

"அது துடைச்சால் சரி. உதுக்கேன் இப்படிக் கத்திறியள்..." அம்மா என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

எனக்கும் ஒரு மாதிரியாகப் போய்விட்டது. இவ்விடத்தில் வேறேதும் வார்த்தைகளைப் பயன் படுத்தியிருக்கலாம்தான். அம்மாவின் எண்ணமும் சரிதான். தன் தந்தை எதனுடையதோ எச்சத்தில் நனை வது எந்தப் பிள்ளைக்குத்தான் உவப்பானது?

அம்மப்பாவின் படத்தை இடம்மாற்ற முடியாது. வீடு கட்டும் போதே அது திட்டமிட்டுக் கட்டப் பட்டது. சிட்டுக்களின் கூட்டைத்தான் இடம் மாற்றம் செய்யவேண்டும். அது சாத்தியமா?

நீலப் பிள்ளை வாத்தியார் சொன்னமாதிரியே, பின் அறை மூலையில் காட்போட்பெட்டியொன்று வைத்தேன். சிட்டுக்கள் அங்கே குடியிருக்க ஆரம்பிக்க ஆரம்பித்து விடும், அதன் பின் பிரச்சினைகளேது மில்லை என அம்மாவுக்கு ஆறுதல் சொன்னேன்.

வீட்டின் கொந்தளிப்பு அடங் கியது. ஆயினும் சிட்டுக்கள் இடம் மாறவில்லை. கொந்தளிப்பு மெது மெதுவாக அடங்கி... மறைந்தே போகிறதோ என நான் எண்ணிய போதுதான், அது மீண்டும் நடந்தது. மீண்டும் அம்மப்பாவின் படத்தின் மேல் எச்சமிடப்பட்டிருந்தது.

அம்மா பத்திரகாளியாகவே மாறி விட்டாள். கூட்டைக் கலைத்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போவதாக நின்றாள். நான்தான் தடுத்தேன்.

"பெட்டி வைச்ச உடனே போகுதே பொறுங்கோவன். ஒரு பத்துநாள் வேண்டாமே அம்மா அவசரப்படுறியள்"

அம்மாவும் நிபந்தனையை ஏற்றுக்கொண்டாள். ஆயினும் அச்சிறு சிட்டுக்களை எதிரிகளாகவே, குரோதத்துடனேயே நோக்கினாள். இது எனக்குக் கவலையளித்தது.

தங்களிற்காகக் குடும்ப மொன்று பிளவுபட்டு நிற்பதை யறியாமல், சிட்டுக்கள் எப்போதும் போலவே பறந்தும்... தலைவெட்டிப் பார்த்தும்... உற்சாகமாயிருந்தன.

இதற்கிடையில், இப்பிரச் சினைகளை சுஜாவிடம் சொல்லி விட்டாள் தங்கச்சி. விடுப்புக்களை யும் புதினங்களையும் பெண்களால் ஏன்தான் பேணிக்காக்க முடியா துள்ளதோ?

சுஜா ரெலிபோன் எடுத்துக் கேட்டாள்.

சிட்டுக்களிற்கு ஆபத் தில்லை. விரைவிலேயே இடம் மாறிவிடும். நீ அடுத்தமுறை வரும் போது சிட்டுக்கள் ஒரு கூட்டமாகவே பெருகிவிடும். நீ கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற சாரப்படச் சொன்னேன்.

அம்மா, குருவிக் கூட் டையும்.. அம்மப்பாவின் படத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கறுவிக் கொண்டு கழித்த நாட்களிலொன்றில்- நான்தான் அன்று சந்தைக்குப் போய் வந்தேன். நான் வீட்டினுள் நுழைய- எனக்காகவே காத்திருந்தவள் போல தங்கச்சி ஓடிவந்து-

"அண்ணா... அம்மா கூட்டை எடுத்து எறிஞ்சிட்டா... குருவியள் பறந்திட்டுதுகள் பாவங்கள்" என்றாள்.

எரிச்சல்.. கோபம்.. அதிர்ச்சி என மனிதனுக்கு உண்டாகக் கூடாத உணர்ச்சிகள் உண்டாக, வேகமாக உள்நுழைந்தேன்.

குருவிக்கூட்டைப்பார்த்தேன். அங்கே கூடில்லை. இடம் வெறுமையாயி ருந்தது. ஒரு தும்பு கூட இல்லாமல்.

அம்மாவில் கோபம் வந்தது. அம்மப்பாவின் படத்தைப் பார்த்தேன். துடைத்துச் சுத்தமாக இருந்தது. அம்மப்பாவின் படத்தின் முன் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ், அதன் கறுத்தப் பிடியுடன் காணாமல் போயிருந்தது. சிதிலங்களையும் காணோம். ஏதோ விபரீதம் நடந்தி ருப்பது புரிந்தது.

"அம்மா கூட்டிக்கொண் டிருந்தவ.. அப்ப குருவியொண்டு வந்து லைற்றில இருந்திச்சுது. அம்மா தும்புத்தடியை விசுக்கிக் கலைச்சா... அது மாறி லைற்ற உடைச்சுப்போட்டுது. உடனே கோபத்தில, கொக்குத் தடியெடுத்து கூட்டைக் கலைச்சுப்போட்டா, குரு வியள் பறந்திட்டுதுகள். பிறகும் வந்து வந்து பாத்து கத்திக்கொண்டி ருந்ததுகள்" நான் மௌனமானேன். அம்மாவிற்கு நல்ல காரணம் இருக் கிறது. அது அவள் மட்டில் நியாய மான காரியம். தும்புத்தடி வீசி மின் விளக்கு உடைந்தது. குருவி யாலேயே தவிர அதனை வீசிய தன்னால் அல்ல என்பது அவளது வாதமாயிருக்கும்.

அப்போது ரெலிபோன் சிணுங்கியது. தங்கச்சிதான் எடுத்தாள். "அண்ணா...உனக்குத்தான்... சுஜா எடுத்திருக்கிறாள். " என்றவள், கூடவே-

"வெள்ளனவும் எடுத்தவள் நான் குருவியின்ர கதையை சொன்னனான்" உன்னைக் கேட்டவள். நீ சந்தைக்குப் போட்டாயெண்டனான். இப்ப எடுக்கிறாள்"

"ஹலோ..." "என்ன நடந்தது..."

"ஒண்டுமில்ல..."

"ஒண்டுமில்லயோ... இப்ப விளையாடாதேங்கோ... குருவிய ளுக்கு என்ன நடந்தது..."

"கூட்டை அம்மா பிச்சுப் போட்டா... பறந்திட்டுதுகள்...."

"விசர் மாமி..."

".........."

"பாவங்கள் குஞ்சுகளும் இருக்குது. இனியென்ன செய்யுமோ? எங்க போயிருக்குங்கள்? இனி அதுகள் என்ன செய்யும்?"

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. மௌனமாகவே இருந்துவிடலாமா என்றும் யோசித்தேன். குருவிக் கூடிருந்த இடத்தைப் பார்த்தேன் சிட்டொன்று பறந்து வந்து கூடிருந்த இடத்தைப் பார்த்தது. அவலமாகக் கத்தியது. சிட்டின் அவலக்குரல் வீடெங்கும்.... ஊரெங்கும்... உலக மெங்கும்... இந்தப் பிரபஞ்ச வெளியெங்கணும் நீக்கமற நிறைந்து, பின் மெதுமெதுவாய் வடிந்து போனது. நிசப்தம் படர்ந்தது. சிட்டுக்குருவி தலையை வெட்டி வெட்டிப் பார்த்தது. பின் உடைந்த விளக்கில் இருந்து விட்டுப் பறந்து போனது.

"சிட்டுக்குருவிக்கு சிறகுகள் இருக்குதுதானே" என்றேன்.

".........." அவளுக்கு என்ன விளங்கியதோ தெரியவில்லை, மௌனமாகி விட்டாள். அவள் கதைக் கும் வரை நானும் மௌனமாய் இருந்தேன்.

●●●

# வலிகள் சுமந்தே வலிமை பெற்றவர் நாம்

இருளோடு வந்த காலை
எம் தலை மீது
இடியாகி விழுந்தது
அலை தந்த செல்வமெல்லாம்
அதுவே அள்ளிப்போனது;
இல்லை இல்லை அதற்கு மேலாலும்
எங்கள் உறவுகளையும் கூடவே....

விதைப்பும், அறுவடையுமென
வளம் கொழித்திருந்த நம் வயல்களில்
உப்பிக்கிடந்தவை போக
மிச்சமாய் யாரேனும்....
தடிகொண்டு குத்திக்குத்தித் தேடினோம்
வெள்ளக்கிடங்குகளில்.....
இடிபாடுகளின் குவியல்களுக்குக் கீழும்
நேற்றுவரை எம் மண்ணில்
சிரித்திருந்த முகங்கள்....
அடையாளம் காணப்பட முடியாமலும்
அடுக்கப்பட்டிருந்தன...சில....பல....
ஐயோ! ஏனிந்தக் கொடுந்துயரம்
எங்களின் மேல் கவிண்டது?
நச்சுவாயுக்களும், அணுக்கழிவுகளும் போல
எம்மிடம் ஏதேனும் இல்லாத போதும்
இயற்கையே இப்படியாகி வந்ததேன்?

நாளும், கோளும் பார்த்து நாம்
நன்றாகத்தானே இருந்தோம்!
தாயத்துக்கட்டிய கழுத்தும்,
சீர்வரிசையென சீதனத்தோடு பேசி
வாழவென்று அனுப்பப்பட்ட மகனும்
காற்றுக்கறுப்புப்படாமல்
கயிறு கட்டப்பட்ட கைகளுமென பலரும்!
நொந்து, நசிந்து நோவால் உயிர் பிரிந்து
உப்புநீரால் உடல் நிரப்பப்பெற்று...
ஐயோ! ஏனிப்படியோர் இடி
எங்களின் தலைகளில்?

ஜாதி பார்த்தோம்; மதம் பார்த்தோம்
வீதிக்கொவ்வொரு விதி செய்தோம்;
கூறுகளாகிக் கொள்கை வகுத்தோம்;
இன்னுமொரு புறத்தில்
இன அடையாளம் பேணுதல் பிற்போக்கென்று
உலக வர்க்கத்தின் ஒரு பகுதியே நாமென
நம்பிக் கூட்டம் போட்டோம்!
டிசெம்பர் 26 கழிந்த போது
ஜாதி, மத, ஊர், பிரதேச, வர்க்க வேறுபாடுகளின்றி
வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்களென நாம்
தனித்து விடப்பட்டபோதுதான்
உணரத் தலைப்பட்டோம்.

நாம் யாரென்று!
எமக்காக எங்களைத் தவிர
எவருமே இல்லாத தமிழினம் நாம்
எதிரியே எங்களை யாரென்று
எமக்கு உணர்த்தியவன்
அடுத்தவர்கள் வருவார்கள் தருவார்களென்று
எதிர்பார்த்துக்கிடக்க
எமக்காக என்று
எந்த உலகமும் இல்லை!
விசுவாமித்திரச்சீற்றம் கொண்டு
எங்களுக்குரிய சொர்க்கத்தை
நாமே உருவாக்குவோம்....!!

எல்லாமே இழந்தோமென
இடிந்திருக்கும் இதயங்களே!
உங்களுக்காய் இதயங்கள் பல
உறுதியாய் உங்களுடனேயே உள்ளன!
வலிகள் சுமந்தே
வலிமை பெற்றது நம்மினம்
மூப்பெய்தி மூச்சு நிற்கும் பொழுது வரை
ஒவ்வொரு காலத்துளியும் பெறுமதியானது; இனிமையானது!
ஒற்றுமையாய் இணைந்து
புன்னகைகள் நிறைந்த புதுவுலகத்தில்
மீண்டும் வாழ்ந்திடுவோம்!! உறுதியாயிருங்கள்!!

சு.ஞாவலன்



# இளைய நாதம்

## நகைச்சுவை



"நீ பள்ளிக்கூடத்தில் சேர்ந்துட்டியாமே! எது வரைக்கும் படிப்பே?"
"மணி அடிக்கிற வரைக்கும்!"

# நுளம்பு



நுளம்பு ஒரு சிறிய பூச்சி தான். ஆனால் அதனால் ஏற்படும் நோய்களோ ஏராளம்.' மலேரியா, மஞ்சள் காய்ச்சல், மூளைக் காய்ச்சல், யானைக் கால் நோய், டெங்கு காய்ச்சல் போன்றவற்றின் காவிகள் இந்த நுளம்பு தான்.

இந்த நுளம்பில் 1600 க்கு மேற்பட்ட இனங்கள் உள்ளன. பனி மூடிய பகுதிகளை தவிர உலகில் மற்றெல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. சிறிய நுளம்பின் இறக்கையின் பரப்பளவு 3 மி.மீ ஆகவும் பெரிய நுளம்பின் இறக்கைப் பரப்பளவு 31. மி.மீ ஆகவும் உள்ளதோடு அதன் உடல் நீளம் 19 மி.மீ ஆகும். ஆண் நுளம்பினை விட பெண் நுளம்பு உருவத்தில் சற்று பெரியவை.

பெண் நுளம்பு மட்டுமே கடிக்கும். முட்டையிட அதற்கு இரத்தம் தேவை அதற்காகவே அவை கடிக்கின்றன. சில நுளம்புகள் பகல் வேளைகளில் கடிக்கும் வேறு சில நுளம்புகள் மாலை வேளைகளில் கடிக்கின்றன. ஆண் நுளம்பும், பெண்நுளம்பும் பெரும்பாலும் ஒரே மாதிரித்தான் காணப்படும். ஆனால், சின்ன வேறுபாடு உண்டு அதாவது அதன் உணர்கொம்புகளில் பெண்ணுக்கு சுருள் மயிர்கள் இடைவெளி விட்டு காணப்படும். ஆனால், ஆணின் உணர் கொம்புகளில் 'பிரஸ்' போன்று காணப்படும் உடலில் இருந்து தனது உறிஞ்சு குழல் மூலம் இரத்தத்தை உறிஞ்சும் அதே சமயம் இரத்தம் உறையாமல் தடுக்க இன்னோர் குழல் மூலம் உமிழ்நீரைச் செலுத்துகிறது. இரத்தத்தை உறிஞ்சிச் சென்றபின் அந்த உமிழ் நீர் காரணமாக கடித்த இடத்தில் எரிச்சலும் தடிப்பும் ஏற்படுகிறது.

பெண் நுளம்பு இரத்தம் குடிப்பதற்கு முன் ஆண் நுளம்பினை கவர்ந்து இழுத்து இனச் சேர்க்கை புரிந்து விந்தணுக்களை உடலில் தேக்கி வைத்துக்கொள்கிறது. முட்டையிடும் போது அதை உட்கொண்டு கருத்தரிக்கச் செய்கின்றது. ஓரிரு மாதங்களுள் நான்கைந்து தடவைகள் முட்டையிட்டுவிட்டு இறந்துபோகின்றது.

இது நீர்ப்பரப்பில்தான் முட்டையிடுகின்றன. ஒரு தடவையில் 50தொடக்கம் 500 வரை முட்டையிடுகின்றன. பதினாறு மணி நேரத்திற்குள் முட்டைகள் பொரித்து இளரிகள் வளர்ந்துவிடும். இது தொடர்ந்து உருண்டு கொண்டே இருக்கும். மூன்று தடவைகள் தோலுரித்துக் கொண்ட பின்னர் கூட்டுப்புழுப் பருவம். இது இரண்டு முதல் நான்கு நாள் வரை நீடிக்கும். அதன் பின் வளர்ந்த நுளம்பாக மாறிவிடும்.

நுளம்புகளுக்கு கூட்டுக் கண்கள் ஒவ்வொன்றிலும் நூற்றுக் கணக்கான பார்வையுணர்வு அலகுகள் காணப்படுகின்றன. தாழ்வாகப் பறக்கும் நுளம்புகள் மணிக்கு 2.5 கி.மீ முதல் 05 கி.மீ வரையிலும் உயரப்பறப்பவை மணிக்கு 28 கி.மீ வரைக்கும் பறக்கும் இது டிப்தேரா வகையில் குலிஸிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

## பொது அறிவு

01. 'போல்ஷெவிக்' என்பது எந்தப் புரட்சியின் வேறு பெயர்?
ரஷ்சியப் புரட்சி (1917)

02. உலகின் மிகப் பெரிய தங்க மார்க்கெட் எங்குள்ளது?
லண்டன் (இங்கிலாந்து)

03. அஸ்வான் அணைக்கட்டு எந்த நதியின் மீது கட்டப்பட்டுள்ளது?
நைல்நதி

04. அமெரிக்காவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலின் பெயர் என்ன?
யு.எஸ். நானிலஸ்

## சொற்சிலம்பம் - 76

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நே | ப் | ம | தி | லி | ளு | தீ |
| டி | கு | நீ | பா | ம | சீ | ட் |
| டோ | யா | ச் | சோ | ன் | ணி | கா |
| லை | அ | பா | ய | சு | ங் | ஜ |
| மே | ட் | தா | ஷ் | ரா | ம | ந |
| மு | ம் | கா | ச | ய் | யெ | பு |
| சி | லை | ய் | ஓ | கி | ள | கு |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -74 இன் விடைகள்

01. அமேசன்

02. நேபாளம்

## சொற்சிலம்பம் - 74 இன் பரிசுக்குரியவர்

செ.நிசாந், தரம் 4B, 39 செல்வபுரம், மு/பாண்டியன் குளம்- ம.வி.

## சொற்சிலம்பம் - 74 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ச.துஜீதன், இல-216/2x 2 திருவையாறு.

02. ஆ.லூசியாமேரி, புளியங்குளம், கிளிநொச்சி.

03. யோ.கார்த்திகா, கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை.

04. ச.திருமகள், கிராமியஅபிவிருத்தி வங்கி, மல்லாவி.

05. வி.வினோஜன், கணுக்கேணி- மேற்கு, முள்ளியவளை.

06. கி.பிரசாந், அத்தார்திட்டம், வள்ளிபுனம்.

07. ஜே.ஈழமாறன், தமிழீழம்.

08. தே.தர்ஷிகா, 2ஆம் கட்டை, பரந்தன்.

01. பூகம்பத்தால் பாதிக்கப்படாத வீடுகளை கட்டும் நாட்டின் பெயர் ஒன்று?
01) ..........................................

02. 'காரோன்' என்பது எந்தக்கோளின் துணைக்கோள்?
01) ..........................................

பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................


சொற்சிலம்பம்-76
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# ஆமையாரின் இனிப்புச் சுவை

பகுதி-04



# விடுதலைப்பாதையில் நாட்டார் கலைகள்



"வலிமையும், பெருமிதமும் உள்ள நாட்டில் ஏற்படும் புரட்சி வறுமையையும், துன்பத்தையும் விரட்டும்."

மனிதன் தன் அறிவால் அனுபவத்தால் தேடியதைச் சொல்ல எப்போதும் தயங்குகிறான். யாரோ சொல்லிவிட்டுப் போன பழங்குப்பைகளைக் கிளறியே தெரிந்துகொள்வதாக எண்ணுகிறான். நான் எனது எமது சொந்த அனுபவங்களைச் சொல்ல விளைகிறேன்.

வளராத எதுவும் வளமற்றது. அது போன்றதுதான் கலையும். கலை வளரும் ஆற்றல் கொண்டது. அதிலும் நாட்டார் கலையும் வளர்கிறது. வளர்ந்தது. வளரும். காலத்தால் அழியாத வரலாறுகளைக் காவித்தந்ததும், தாளமுடியாத அரசியல் பூகம்பங்களிடையே தன்னைத் தக்கவைத்துக் கொண்டதும், தன்னோடு வரலாற்றின் வேர்களைக் காயவிடாது காத்ததுவும் நாட்டார் கலைகள்தான்.

கலையோடு, மதமும், மொழியும் பின்னிப் பிணைகிறது. இங்கிருந்துதான் பண்பாட்டுப்பண்பு பிறக்கிறது. வரலாறு தானாகவே இதனுடன் இணைகிறது. ஏனெனில்-

மக்களின் வாழ்வியலோடு ஒன்றாத கலை எதுவுமற்றது. அதனுள் உயிர் ஒடுங்கிப் போய்விடும். ஒரு நாட்டின் வரலாற்றை அதன் மாண்பை அதன் மீது படையெடுத்துவரும் அந்நியநாடு அதைக் கைப்பற்றும்போது அழிக்கமுனைகிறது. அதில் வெற்றியும் பெறுகிறது. நினைவுச்சின்னங்கள், வழிபாட்டிடங்கள், வாழ்வியல் முறைகளின் உணவு, உடை, கல்வி, தொழில் என அனைத்துமே மாற்றவேண்டுமென முயல்கிறது. அதற்காக முதலில் கலைபண்பாடுகளின் மீதே தன் கையை விரிக்கிறது. உதாரணமாக நான் தொலைவுக்குப் போகவிரும்பவில்லை. யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் எங்கே போகிறது.

கீரிமலை, கேதீச்சரம் இரண்டும் சிறிலங்கா இராணுவத்தின் காலடியில் போனபோது எம்மக்கள் பிதிர்க்கடனைப் பாலியாற்றிலும் பேராற்றிலும் செய்யலாம் என்று மாறியது. யாழ் நூலகம் எரிந்தபோது தமிழரின் ஆவணங்கள் தொலைந்தன. தொல்பொருட் சாலை துவம்சம் செய்யப்பட்டது. பழைய நாற்சார வீடுகள் நாசப்படுத்தப்பட புதிய வேற்று நாட்டுப்பாணியிலான வீடுகள் வந்தன. ஆடைகள் மாறின உணவுப் பழக்கம் மாறியது. சினிமா, தொலைக்காட்சி, என்பன எம் பெண்களை வழிநடத்த ஆரம்பித்தன. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த மாயைகளின் பின்னே எங்கள் சொந்த வாழ்வாதாரங்களான, மண்ணையும் மண்ணோடு மக்களையும் காக்க கலைகளின் உதவியை நாடினோம்.

கலை என்றால் துரத்து
கலை என்றால் ஆன்மா
கலை என்றால் ஆடை
கலை என்றால் வெறி
கலை என்றால் இல்லாமற்செய்
கலை என்றால் அழகு.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கலை மனதை ஒருநிலைப்படுத்தும் வல்லமை படைத்தது. அதுவே மண்ணின் கலையாக மக்கள் கலையாக அமையும்போது எவரையும் தன்னுடன் இசையவைத்துவிடுகிறது.

போர்க்காலம், நெருக்குதல்களுக்குள் வாழும் மக்களுக்கும் ஆக்கிரமிப்புக்குள் நின்று அல்லல் படும் மக்களுக்கும் கலை ஒரு உத்வேகத்தை அளித்துள்ளது.

1866இல் தென்னாபிரிக்க கறுப்பின பாடகர்குழு ஆசிய நாடெங்கும் சுற்றி அலைந்து நாட்டார் பாடல்களை இசைத்து பணம் திரட்டினர். இதுபற்றி W.E.B. டியூபோய்ஸ். கறுப்பின மக்களின் ஆத்மாவின் சரிதை என்ற நூலில் கூறுகிறார்.

எழுத்து மூலச் சான்றுகள் அழிக்கப்பட்டு அல்லது திரிபுபடுத்தப்பட்டுள்ள ஒரு நாட்டின் வரலாற்றை மீளப்பதிப்பிக்க என்ன செய்யலாம் என்ற கருத்து எழும்போது 1959இலே ஸ்டேன்லி எல்கின்ஸ்தான் எழுதி வெளியிட்ட "அடிமைமுறை" ஒரு சரியான கருத்தை வெளிவிட்டதுடன் வரலாறுகளின் மூலங்கள் பற்றிய ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது. பெரும் நாட்டாரியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் தர்மப்பிரிய வெசும் பெரும, குமாரிஜெயவர்த்தன, ஜோன் ரஸ்ஸல் போன்றவர்களின் கருத்தையும் பார்ப்போம்.

"எழுத்துமூலச் சான்றிலிருந்து வரலாறு எழுதப்படுவதிலும் பார்க்க, அது கிடைக்காதபோது நாட்டுப்புறக் கூறுகளைக்கொண்டும் வரலாற்றை உருவாக்கலாம்."

எது எவ்வாறாயினும் ஒரு வரலாற்றுக் கடமையைக் கொண்டியங்குவதுதான் இலக்கியங்கள் எனப்படுகின்றன. நாட்டார் இலக்கியங்களும் அவ்வாறானவையே. நாங்கள் இங்கு தமிழீழப் போராட்டகாலத்து நாட்டார் கலைகளைப்பற்றிப் பார்ப்பதற்கு முன் தமிழர்களின், குறிப்பாக ஈழத்துத் தமிழர்களின் நாட்டாரியல் தொடர்ந்தும் பேணிவந்துள்ள வரலாற்றுக் கூறுகளைக்கொண்ட நாட்டார் மொழி வழக்குகளைப் பாடல்களை, ஐதீகக் கதைகளை அறிந்துகொள்வது இதன் வேர்களைப்பற்றி அறிவதாக அமையும்.

வரலாற்றின் வழியில் நாம் வெள்ளையர் காலத்திலிருந்தே பாடல்களைக்கொண்டு வருகிறோம். அதற்கு முற்பட்டதான வரலாறு இல்லை என்பதல்ல. மூன்றாம் உலக நாடுகளாகக் காணப்படும் நாடுகளின் அமைதியான எளிமையான வாழ்க்கையில், வில்லும் அம்பும், வேலும் வாளும் பாடப்பட்ட காலமும் உண்டு. துமுக்கிகளின் காலம். ஒரு மாறுபட்ட (இனம்) தோலையுடைய, வித்தியாசமான பழக்கவழக்கமுடைய மனிதர்களை ஆரம்பத்தில் தேவர்களாகவே கிராம மக்கள் சந்திக்கின்றனர்.

டீ அல்மெய்டா புயலால் எற்றுண்டு கடற்கரையில் ஒதுங்கி நிற்கிறான். அரையில் துண்டுகட்டி வெற்றுமேலுடன் கோல்களை மட்டுமே வைத்துக்கொண்டு நின்ற சிங்களச் சிப்பாய்கள் பதுங்கியிருந்து அவதானிக்கின்றனர். அவர்கள் பாணைத்தின்று உவைன் பாணத்தைக் குடிக்கிறார்கள். சேவகர்கள் அரசனிடம் போய் சொல்கிறார்கள் "அரசே வெள்ளை நிறத்தில் தேவர்கள் வந்துள்ளனர். இரத்தத்தைக் குடிப்பதையும் கற்களை உண்ணுவதையும் கண்டோம்"

அகத்தியர் நிகண்டில் ஒரு பாடல் குறிக்கிறது. " இரும்புக் குதிரைகளில் மக்கள் ஏறிப்பறக்கவும், தீபங்கள் கீழ் நோக்கி எரியவும் செய்யும்" என்று இதைச் சொன்ன சித்தரை என்ன செய்தார்களோ. இன்று மோட்டார் சைக்கிள்களில் மனிதர் செல்வதும் மின்குமிழ்கள் கீழ்நோக்கி எரியவும் செய்கின்றன.

வெள்ளையர் ஆட்சியில் விளைந்த அற்புதங்கள் கும்மிப்பாடலாகப் பாடப்பட்டது.

என்ன சொல்வேனடி மின்னாளே- இந்த
இங்கிலீசுக் காரன் தன்ரைசை
பூட்டி ரயிலை நடத்தினார்-புகை
இல்லா விளக்கையும் பொருத்தினார்.
தண்டவாளச் சூட்சம் வைத்தாரே- மலைத்
தண்ணீரை வாவென்றழைத்தாரே.

எல்லாம் மலைநாட்டில், யாழ்ப்பாணத்திலும் பறங்கித்துரைமார் திரிகிறார்கள். இவர்களது வாழ்க்கையும் நடையுடை பாவனையும் மக்களைக்கவருகிறது. சங்கானைச் சந்தையில பறங்கி சுங்கானைப் போட்டுவிட்டான். தேடி எடுப்பவர்க்கு பறங்கி பாதிச்சுங்கான் கொடுப்பான்.

சுட்ட கருவாடாம் பறங்கிக்கு சோறு மிறங்காதாம். முந்திரிச் சாராயம் (வைன்) பறங்கிக்கு முந்நூறு கோழிமுட்டை காலம் கடந்தது. வெள்ளையர் ஆட்சி ஒழிந்து சிங்கள ஆட்சியில் தமிழர் நமது சுதந்திரம் கைமாறியது. சிங்களத்தார் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்த குடும்பங்களையே பிரித்து நாடு கடத்தியபோது நாட்டார் இலக்கியம் அதைப் பதிவு செய்தது. கண்டிக்குத்தென்னிந்தியத் தமிழர் 1827 இலிருந்து 1835வரை குடியேற்றப்பட்டனர். இவர்கள் 1964இல் கள்ளத் தோணிகள் என்ற பெயரில் நாடற்றவராக்கப்பட்டனர்.

மானே மரகதமே மாமிபெத்த ரத்தினமே தேனீ உன்னைப் பிரிஞ்சு போக தேம்புதுடி எம்மனசு- இது இமிக்கிரேசன் சட்டம் அது எனக்குமுனக்கும் நட்டம்.

இது இப்படி பிரிக்கப்பட்ட ஒரு கணவனின் புலம்பல், வெள்ளையருக்குத் தொண்டு செய்தே தம்மை வளர்த்தவர்கள் நிறையப்பேர். இவர்களுக்கு தமது சொந்த இனமக்களையே பிடிக்கவில்லை. ஆங்கிலேயரின் கைப்பொம்மையாக இயங்கி ஆண்டான் அடிமையாக மக்களைத் தரம்பிரித்தும் கொடுமையான வரிச் சுமைகளை அவர்கள் மீது சுமத்தியும் வந்தனர். சோழர்காலப் படையெடுப்புகளின் போதும் அதற்குமுன்பும் போர்க்கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களே கொத்தடிமைகளாக மாற்றப்பட்டனர் எனவும் சொல்லப்படுவதுண்டு. இக்கால ஆண்டான் அடிமைக் காலம் போன்றே பிராமணர்களுக்கும் தீண்டாத மக்கள் என ஒதுக்கப்பட்ட மக்களுக்குமான பிரச்சினைகளும் நாட்டார்கதைகளிலும் பாடல்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவற்றை பின்னொரு சந்திப்பில் பார்ப்போம்.

**ஒரு வரலாற்றுக் கடமையைக் கொண்டியங்குவதுதான் இலக்கியங்கள் எனப்படுகின்றன. நாட்டார் இலக்கியங்களும் அவ்வாறானவையே. நாங்கள் இங்கு தமிழீழப் போராட்டகாலத்து நாட்டார் கலைகளைப்பற்றிப் பார்ப்பதற்கு முன் தமிழர்களின், குறிப்பாக ஈழத்துத் தமிழர்களின் நாட்டாரியல் தொடர்ந்தும் பேணிவந்துள்ள வரலாற்றுக்கூறுகளைக்கொண்ட நாட்டார். மொழிவழக்குகளைப் பாடல்களை, ஐதீகக் கதைகளை அறிந்துகொள்வது இதன் வேர்களைப்பற்றி அறிவதாக அமையும்.**

தமிழ்க் கவி

# நெஞ்சு... பொறுக்குதில்லையே...!



யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் இருக்கும் அந்தக் கிறிஸ்தவ நண்பர் எம்மை கிறிஸ்மஸ் தினத்திற்கு நிச்சயம் வருமாறு அழைத்திருந்தார்.

அந்த நண்பர் எம்மோடு மிகவும் அன்பாகவும் புரிந்துணர்வுடன் பழகுபவர். எனவே நிச்சயம் கிறிஸ்மஸ்தினத்திற்கு அவரது வீட்டுக்குச் செல்வதென முடிவெடுத்தோம்.

ஆனால், துரதிஷ்டவசமாக நாம் அப்பகுதியில் இருந்து வேறு இடம் ஒன்றுக்குச் செல்ல வேண்டி இருந்ததால் கிறிஸ்மஸ் தினத்தன்று நண்பரின் வீட்டுக்குச் செல்லமுடியவில்லை.

பின்னர், புதுவருட தினத்தன்று நாம் அப்பகுதிக்குச் செல்லவேண்டியிருந்தது. அன்று எங்களைக் கண்ட நண்பர் எங்களுக்கு கைகொடுத்து புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

கிறிஸ்மஸ் தினத்திற்கு வரமுடியாமல் போய்விட்டது. இன்று புதுவருடத்தன்று நாம் வருகிறோம் என்று கூறி வரும் நேரத்தையும் சொல்லியனுப்பினோம். அவரும் அப்போது இரட்டிப்பு மகிழ்ச்சியில் இருந்தார்.

எங்கள் வேலைகளை முடிந்தளவுக்கு ஒதுக்கிவிட்டு குறிப்பிட்டநேரத்திற்கு அவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டோம். அவர் எங்களை மிகவும் இன் முகத்துடன் வரவேற்று உபசரித்தார்.

அவரது வீட்டில் மூன்று இளம் பெண்கள் இருந்தனர். ஆனால், அவர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியாது. அவர்களில் இருவர் "பஞ்சாபியும்" ஒருவர் "ரைற்ஸ்கேட் பிளவ்ஸ்" (மிகவும் இறுக்கமானதும் கட்டையானதுமான சட்டையும் பாவாடையும்) அணிந்திருந்தார்.

இவர்கள் மூவருடன் அந்த நண்பரும் ஓடியோடி தங்கள் வீட்டுக்கு வந்துகொண்டிருந்த விருந்தினர்களை உபசரித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், விருந்தினராக வந்த நண்பர்களில் பெரும்பாலானவர்களின் கண்கள் இறுக்கமான சட்டை பாவாடை அணிந்திருந்தவரையே அடிக்கடி நோக்கிக் கொண்டன.

ஒரு கணத்தில் மேலும் நான்கு நண்பர்கள் அங்குவந்தனர். அவர்களுக்கான கதிரையினை வீட்டினுள் இருந்து எடுத்துக் கொண்டு அந்தப்பெண் வந்தார். கதவினூடாக கதிரையைக்கொண்டுவருவதாயின் அதனை தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்துத்தான் வெளியில் கொண்டு வரவேண்டும். அவ்வாறே அவரும் அதனை கொண்டுவந்தார்.

அப்போதுதான் அந்த இறுக்கமான உடை அவரை சங்கடப்படுத்தியது. இதனை அங்குவந்திருந்த நண்பர்களில் இருவர் அவதானித்தும் கொண்டனர்.

புதுவருட விருந்தினை முடித்துக் கொண்டு நண்பர்கள் வெளியில் வந்த போது பேசிக் கொண்டவை இவை.


"இனிமேல் நான் இந்த வீட்டுக்கு வரமாட்டேன் எங்களுடைய நண்பன் நல்லவர். ஆனால், அங்கிருந்த ஒரு பெண்ணின் உடை அலங்காரம் எனக்குப்பிடிக்கவில்லை. இவர்கள் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்கின்றார்கள" என்றார் ஒருவர்.

அதற்கு மற்றவர் "நானும் அவதானித்தேன். ஆனால் அந்தப் பெண் எமது நண்பரின் சகோதரி அல்ல. அவரது உறவுக்காரர். எனவே அவர் தொடர்ந்து அவ்வீட்டில் நிற்க மாட்டார்" என்று கூறினார்.

"எவ்வளவோ அழகான உடைகள் இருக்கும் போது இந்தப் பெண்கள் இத்தகைய உடைகளை அணிவதில் என்ன சந்தோசம் காண்கின்றார்களோ தெரியாது.

இது உங்களுக்கே கூடாது என்று கூறினால் நாங்கள் எப்பிடியும் போட்டுக் கொள்வோம். உங்கள் கண்கள் ஏன் அதைப் பார்க்கின்றன என்று விதண்டாவாதம் பேசுகின்றார்கள். பண்பாடும், நாகரிகமும் ஒழுக்கமும் உடையிலா இருக்கிறது? என கேள்வி வேறு கேட்கிறார்கள். ஆனால், எனக்கு என்னவே இளவயதுக் காரர் சிகரெட் குடிப்பது, மது அருந்துவது எல்லாம் கலாச்சார சீரழிவுக்கு எப்படி காரணமாக இருக்கின்றதோ அது போல இதுவும் ஒரு கலாச்சார சீரழிவுக்கு காரணமாக அல்லது தூண்டுதலாக இருக்கும் என்று நினைக்கிறன்." என எம்முடன் வந்தவர் கூறிப் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

சிவியா



# வீடு

## அன்பாகப் பேசுங்கள் அகிலம் உங்களிடம்

இயற்கை நமக்கு நாவை கொடுத்திருக்கிறது. இது எமக்கு இயற்கையின் அன்பளிப்பு இதனை நாம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். நாக்கு சிறிய சதைதான் என்றாலும் ஏற்படும் நன்மைகள் நிறையவே அவ்வாறே தீமைகளும் எனவே பேசுகின்றபோது சிந்தித்துப் பேசவேண்டும்.

பேசுகின்ற ஆற்றல் எமக்கு மட்டும் தான் உண்டு. அதனால்தான் கூறுகின்றேன் அன்பாக சிந்தித்து சிறப்பான முறையில் பேசுங்கள் என்றுமே மகிழ்ச்சியாக வாழ்வீர்கள். நம்மை வாழ வைப்பதும் சில நேரங்களில் வாரி விடுவதும் வாய் என்பதனை மறந்து விடாதீர்கள். பேச்சு அவரவர் உள்ளத்தை படம் பிடித்துக் காட்டுவதோடு உங்கள் மீதான மற்றவர்களின் நன்மதிப்பு, மரியாதை என்பன நீங்கள் பேசுகின்ற பேச்சினிலேயே தங்கியுள்ளது. நாவால் சுட்ட வடு ஒரு போதும் மாறாது என அன்பானவர்களே பேசுகின்ற போது அன்பாகப் பேசுங்கள். தவறுதலாக வார்த்தைகளைக் கொட்டிவிட்டு பின் கவலைப்படக்கூடாது. மற்றவர்களுடன் பேசும் போது உங்கள் முகம் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதோடு புன்னகையும் தவழட்டும். அப்போதுதான் நீங்கள் எளிதில் எவரையும் கவரலாம். அத்தோடு அனைவர் மனங்களில் இலகுவில் இடம் பிடிப்பீர்கள். வீண் பேச்சு எப்போதும் விபரீதத்தையே தரும். ஆகவே அளவோடு பேசுங்கள் அத்தோடு மனம் விட்டு பேசுங்கள். மேலும் நீங்கள் நூறு நண்பர்களை தேடுவதிலும் பார்க்க ஒரு எதிரியை தேடாமல் இருப்பதே சிறப்பானது. இதற்கெல்லாம் நீங்கள் பேசுகின்ற முறையே அவசியமானது.

இதைவிட மற்றவர்களுடன் அரட்டை அடிப்பதை பெரும்பாலும் தவிர்த்துக்கொள்ளுங்கள், மற்றும் ஒருவரையும் கேலி செய்யாதீர்கள். எப்போதும் மற்றவர்களின் மனம் புண்படாமல் இருக்குமளவுக்கு நாம் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் பேசுகின்ற போது மற்றவர்களின் வேலைகள் பாதிக்கப்படாத அளவுக்கு சுருக்கமான அளவுக்கு பேசுவது சிறப்பானது ஆகும். நகைச்சுவையாக பேசுங்கள். ஆனால், நக்கலை தவிர்த்துக் கொள்ளுங்கள் பைபிள் சொல்வது போன்று "நீங்கள் எதை கொண்டு அளக்கிறீர்களோ அதே அளவு உங்களுக்கும் அளக்கப்படும்" எனவேதான் ஒருவரையும் குறைத்து மதிப்பிட்டு பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள், ஒருவருடைய தவறுகளை பலர் முன்னிலையில் சுட்டிக்காட்டாதீர்கள். அது நீங்கள் அவர்களை அவமானப்படுத்துவதாக அமைந்துவிடும்.



அதனால் தவறுகளை தனிமையில் குறிப்பிட்டவர்களுக்கு சுட்டிக்காட்டுங்கள். இது உங்கள் மீது அவருக்கு நல்ல மதிப்பினை பெற்றுத்தரும். எனவே அன்பானவர்களே பேசுகின்றபோது அன்பாக, சிந்தித்து, அளவோடு புன்னகை தவழ மனம் விட்டு உற்சாகமாக, தெளிவாகப் பேசுங்கள் நீங்கள் அகிலத்தை வெற்றிகொள்ளலாம்.

**ஆ.சோபா**

## பெருமை வேண்டாம்



பெருமைக்குணம் விஷத்துக்கு நிகரான ஒரு தன்மை, எவ்வளவு உடனடியாக ஒழிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஒழிக்கவேண்டும். எமக்குள் இருக்கும் பெருமைக் குணத்தை ஒழிக்காமல் அதை மேலும் வளர்த்துக்கொண்டால் கடைசியில் பெருமைக்குணம் விஷமாக மாறக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடும். இது நம் அனைவரினதும் கடமை-

இந்தக் கடமையிலிருந்து யாரும் தப்புவதற்கில்லை. எமது சமுதாயத்தில் பெருமை பேசுபவர்கள் மற்றவர்களை கீழ்த்தரமாக நினைப்பதை காணக்கூடியதாக வுள்ளது. தன்னைத்தானே பெருமையாகப் பேசிக்கொண்டு மற்றவர்களை கீழ்த்தரமாகப் பேசி அவர்களின் மனதை வேதனைப்படுத்துகின்ற சிலரை எமது சமுதாயத்தில் காணக் கூடியதாகவுள்ளது. இப்படியானவர்கள் தங்களை விரைவாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

பெருமை உணர்வை மாற்றுவதற்கு முதலில் நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள். அதன் பின் உங்களைப் படைத்த முழுப் பெரும் மூல சக்தியை ஓரளவேனும் தெரிந்துகொள்ளுங்கள். இந்த இரண்டு வழிமுறைகளையும் நீங்கள் முறைப்படி வளர்த்தால் பெருமைக்குணம் தனக்குத்தானாக மாறிவிடும். மனிதன் சிறப்புள்ளவன்தான் அவன் ஆற்றல் மேலானதுதான் என்றாலும் இயற்கையின் பேராற்றலோடு இணைத்துப் பார்க்கும்போது மனிதனுக்கும் அற்ப துரும்புக்குமிடையில் அதிக வித்தியாசம் தோன்றுவதில்லை. எனவே பெருமையடிப்பது மனிதனுக்குரிய குணமல்ல. எனவே அவன் தன் நிலையை உணர்ந்து பணிந்து நடக்க வேண்டுமே தவிர பெருமையடிக்கக்கூடாது. இயற்கையின் படைப்புக்களில் கோடி கோடியான படைப்புகளில் மனிதனும் ஒருவன் இயற்கையின் ஆற்றலையும் மனிதனின் ஆற்றலையும் முறைப்படி ஆராய்ந்து பார்த்தால் எமக்குப் பல உண்மைகள் தெரிகின்றன. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அந்த உண்மைகளை ஏற்றுக் கொள்ளவேண்டியதாகத்தான் இருக்கின்றது. அவற்றை மறுப்பதற்குரிய துணிவும் அவற்றிற்கு மாற்றுப் பொருள் கற்பிக்கும் திறனும் நிச்சயமாக மனிதனிடம் கிடையாது. மனிதனுக்கு இறைவன் பலபேறுகளை கொடுத்தான் பின்னர் இயற்கை மனிதனுக்கு இறப்பையும் ஏற்படுத்தினார். மனிதன் பெருமையடிக்கிறான் மற்ற எவரிடமும் இல்லாத சிறப்பு தன்னிடம் உள்ளதாக நினைத்துக் கர்வம் கொண்டு பெருமையடிக்கிறான்.

மற்றவர்கள் அனைவரையும் தன்னைவிட உயர்வாக மதிக்கவேண்டும். அப்படி நடந்தால்தான் இவருக்கு திறமையை விட மேலும் திறமையடைய முடியும். மற்றவர்கள் அனைவரையும் தன்னைவிட உயர்வாகக் கருதும் வரை ஒரு மனிதன் அறிவு முழுமைபெறாது சில நபர்கள் தங்களைத் தாங்களே பெருமையாகக் கருதி பெருமையாக மற்றவர்களுடன் பேசினால் தங்களை மற்றவர்கள் பெருமையாக அடுத்த நபர்களுக்குக் கூறக்கூடும் என சிந்திப்பதுண்டு. இதை அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட தவறான முடிவு- மூன்று. தன்னைத்தானே பெருமையாகப் பேசுவதை விட மற்றவர்கள் பெருமையாப் பேசுவதே சிறந்தது. எங்களை நாங்களே பெருமை பேசுவதை நிறுத்துவோம்.

**இ.றஜித்**

## பாதுகாப்புக் குறிப்புகள்

*குழந்தைகள் தண்ணீர்த் தொட்டி, கிணறு ஆகியவற்றுக்குள் எட்டிப்பார்க்கமுடியாதபடி மூடிவைக்கவும்.*

* * *

*வீட்டில் விஷம், பூச்சி மருந்துகளை கூடியவரை வைக்கவேண்டாம். அப்படி வைத்தாலும் அவற்றின் மீது பளிச்சென்று விஷம் என்பதை எழுதிவைக்கவும். தெரியாத்தனமாக அதை விழுங்கக்கூடிய ஆபத்து குறையும்.*

* * *

*வெளியே தனியாகப் போகும் போது கைப்பை அல்லது சட்டைப் பையில் உங்கள் பெயர், முகவரி, ரெலிபோன் நம்பர், இரத்தவகை விவரங்களை வைத்திருந்தால் சமயத்தில் உதவும்.*

*அக்கம் பக்கத்தாருடன் சுமுக உறவு வைத்துக்கொள்ளுங்கள். ஆபத்து அவசரத்துக்கு அவர்கள் உதவி தேவை.*

* * *

*தேவையற்ற பொது இடங்களில் உங்கள் சொந்த விசயங்களைப் பேசாதீர்கள். சமூக விரோதிகள் காதுகளில் அவை விழுந்தால் உங்களுக்கு ஆபத்து.*

* * *

*பெண்கள் தனியே வெளியில் போகும் போது கைவசம் ஒரு விசிலை வைத்திருப்பது நல்லது. யாராவது பின் தொடர்ந்தால் விசிலைச் சட்டென்று ஊதுங்கள். கூட்டத்தின் கவனத்தை அது கவரும். கயவனும் பயந்து ஓடிவிடுவான்.*

* * *

*தனி வீடுகளில் உள்ளவர்கள் காவலாளி அல்லது நாய் வைத்துக் கொள்வது பாதுகாப்புக்கு நல்லது.*

* * *

*கூடியவரை நன்கு தெரிந்தவர்கள் மூலம் வேலைக்கு வரும் ஆட்களையே பணியில் அமர்த்திக்கொள்ளவும்.*

* * *

*ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்க வேண்டுமென்றால் நெருக்கமான கம்பி கிரில் போடவும்.*

* * *

*குழந்தைகள் கைக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைக்கவும்.*

* * *

## சைவ ஓடியற் கூழ்




தேவையான பொருட்கள்:-

ஓடியல்மா -1/2
பயிற்றங்காய் -50 கிராம்
பூசணிக்காய் -100 கிராம்
மரவள்ளிக்கிழங்கு - சிறிய கிழங்கு ஒன்று
பலாக்கொட்டை - 8
செத்தல் மிளகாய் - 8
மஞ்சள் - சிறிய துண்டு
நற்சீரகம் - 1 தேக்கரண்டி
மிளகு - 1/2 தேக்கரண்டி
வெள்ளைப்பூடு - 6 பல்லு
அரிசி - 1 மேசைக்கரண்டி
பழப்புளிக்கரைசல் -1 மேசைக்கரண்டி (தடிப்பானது)
முருங்கையிலை - சிறிதளவு
உப்பு - அளவாக

செய்முறை:-

* காய்கறிகளைச் சுத்தம் செய்து சிறிதாக வெட்டி அரிசியையும் சேர்த்து இரண்டு தம்ளர் நீர் சேர்த்து வேகவிடவும்.

* ஒடியல்மாவைச் சிறிது நீர் சேர்த்து வேகவிடவும்.

* செத்தல் மிளகாய், மஞ்சள், நற்சீரகம், மிளகு, வெள்ளைப்பூடு இவற்றை அரைப்பதமாக அரைத்து எடுக்கவும்

* குழைத்து த்துள்ள ஒடியல் மாவின் மேல் தெளிந்துள்ள நீரை அகற்றிய பின் மூன்று தம்ளர் நீர் சேர்த்துக் கரைக்கவும்.

* காய்கறி நன்கு மசிய வெந்ததும் அரைத்த கூட்டு, முருங்கையிலை, ஒடியற்கரைசல், புளிக்கரைசல், உப்பு யாவற்றையும் சேர்த்து நன்கு துளாவிக் கொதிக்கவிடவும். தேவையான அளவு நீர் சேர்க்கவும்.

*மா வெந்து கூழ் ஓரளவு தடித்ததும் இறக்கிக்கொள்ளவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு 'பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்–37

பெயர்:..............................................

முகவரி:..............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

## இலக்கியப்பகிர்வு

# பயில்நிலம்

தனது நோக்கத்தினையே தலைப்பாக்கிக்கொண்டு ஒரு சிறு சஞ்சிகை வெளிவரத்தொடங்கியுள்ளமையை வரவேற்கவேண்டி உள்ளது. கடந்தவருடம் செப்ரெம்பரில் தனது முதலாவது இதழை ஆரம்பித்த 'பயில்நிலம்' என்னும் அந்த இதழ் இப்போது ஆறு இதழ்களையும் தாண்டி ஏழாவது இதழுக்கு வந்துள்ளது.

குறிப்பாகப் பாராட்டப்படவேண்டிய விடயம் சிறு சஞ்சிகைகளுக்கான பொது இயல்பைத் தாண்டி ஒழுங்காக தனது முதல் ஆறு இதழ்களையும் கொண்டுவருவதுதான். இந்த ஒழுங்கு எதிர்காலத்திலும் சரிவரவேண்டும். சரிவருமா?

கொழும்பு தெகிவளைப் பகுதியில் இருந்து முளைத்துள்ள இந்தப் புதிய தளிரின் பின்னால் வித்தியாசமான ஒரு இளைஞர் கூட்டம் செயற்படுவதாகத் தெரிகிறது.

முதலாவது இதழ் ஆசிரியர் குழுவென ஐந்து பேரையும், விநியோகக்குழு என மூவரையும், விளம்பரக் குழுவென மூவ்ரையும் கொண்டு வெளியாகியது. ஆக மொத்தம் பதினொரு பேரின் உழைப்பு அதில் வெளிப்பட்டு இருந்தது.

மூன்றாவது இதழில் மாற்றம் ஏற்பட்டது. இதழின் ஆசிரியராக ஒருவர் பொறுப்பு ஏற்றார். அவ்வாறே விளம்பரம், விநியோகம் போன்றவைகளிலும் காணப்பட்டது. அதிலும் கவனிக்கவேண்டிய விடயம் ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொருவர் ஆசிரியர், விளம்பரம், விநியோகமும் அவ்வாறே.

குழுவாகச் செயற்பட ஆரம்பித்தவர்கள் தனித்தனிப் பயிற்சி பெற இவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கருதலாம். பொதுவாக இத்தகைய சஞ்சிகைகள், வெளியீடுகள் குழுவாக ஆரம்பிப்பது தான் வழக்கம். ஆனால், காலக்கரைவில் இத்தகைய குழுக்களின் அங்கத்தவர்கள் உதிர்ந்து உதிர்ந்து தனி ஒருவர் மட்டுமே மிஞ்சிகந்தறுந்து போவதும் உண்டு.

பயில் நிலக் குழு இதற்கு மாறுபாடாக அமைய வேண்டும். அவ்வாறு அமையும் என்பதற்கு முன்னுதாரணமாக பதினொரு பேராக இருந்த ஆரம்பக் குழுவில் ஆறாவது இதழில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பொதுவாக ஒத்த கருத்துடையவர்கள் ஒன்று சேரும் போது அவர்களால் ஒத்திசைவாகச் செயற்பட முடியும். அவ்வாறான ஒரு செயற்பாடு பயில்நிலக் குழுவிற்கு வந்துள்ளது என்று நம்பலாம். இப்போது மாத்திரம் அல்ல எதிர்காலத்திலும் இந்தச் செயற்பாடு உறுதி பெற வேண்டும்.

கால மாற்றத்திலும், வளர்ச்சிப் போக்கிலும் இந்தத் தோழமையும் நெருக்கமும் மேன் மேலும் வளர்ச்சிபெற வேண்டும்.

எங்கள் இலக்கிய வரலாறு வித்தியாசமானது. எழுச்சி பெற்று வரும் இளையோர் சரியாகத் தட்டிக் கொடுத்து வளர்க்கப்படுவதில்லை. காட்டமான விமர்சனங்களின் மூலம் இளையோர் வேளாண்மையை வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதைத் தடுப்பதே மூத்த படைப்பாளிகளில் கணிசமானோர் வழக்கமாகும். வளரும் இளையோர் நல்ல வேளாண்மையைச் செய்வார்கள். செய்து வருகிறார்கள்.

எனவே பயில்நிலப் படைப்பாளிகளுக்கும் அவர்கள் பின்னால் நின்று அவர்களுக்காக வழித்தடம் அமைப்பவர்களும் இதனைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

பயில்நிலப் படைப்பாளிகளில் கணிசமானோர் அரசியல், விஞ்ஞானக் கட்டுரைகளில் ஆர்வம் உள்ளவர்களாக உள்ளனர். அவை மிக நன்றாகவும் அமைந்துள்ளன. கவிதை, கதை போன்றவற்றிலும் இவர்கள் சரிவர ஈடுபாடு காட்ட வேண்டும். அப்போதுதான் அவர்கள் முழுமையாகத் தேர்ச்சிபெற முடியும்.

பயில்நிலக் கதைகள் பல ஆரம்பமாகவே உள்ளன. இதனைப் பிழையாகக் கூறமுடியாது. படைப்புக்கள் கதை பண்ணுவதாக அமையாது, கதைகளாக அமைய வேண்டும்.

"ஆடிச் சாய்ந்த ஆலமரம்" என்னும் சிறுகதையின் இறுதிப் பகுதியில் சுட்டிக்காட்டப்படும் கவிதை வரிகள் தமிழீழ மண்ணில் வெளியான "பிஞ்சுமனம்" என்னும் திரைப்படத்தில் வெளியான கவிஞர் புதுவை இரத்தின துரை அவர்களின் பாடலாகும்.

ஆனால், கதையில் முதியோர் தினத்தையொட்டி வானொலியில் ஒலிபரப்பான கவிதையாகச் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. இது போன்ற தவறுகள் கவனிக்கப் படவேண்டும்.

"கனாக்காலம்" என்னும் கதை 'அம்புலி மாமா' பாணியில் அமைந்துள்ளது. "சிறுவயதில் வீடுகளுக்குச் சென்று பழைய ஆடைகளை காசுக்கு வாங்கி விற்று வந்த சிவராசன் கடும் உழைப்பாலும், நாணயமான நடத்தையாலும் அந்த ஊரின் மத்தியிலேயே ஒரு பெரிய கடையைத் திறந்தார்" என எழுதுவது நடப்பியலுக்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது. அது போலவே 'மளிகைக் கடை,' 'மளிகைச் சாமான்'கள் என்ற சொற்பதங்கள் எங்கள் மொழிவழக்குக்கு எவ்விதம் பொருந்தும்.

இந்தச் சிறுதவறுகள் ஆரம்பத்திலேயே திருத்தப்பட வேண்டும். பயில் நிலத்துப் படைப்பாளிகளுக்கு உதவும். மூத்தவர்கள் இத்தகைய தவறுகளைத் திருத்த உதவ வேண்டும்.

"இயற்கை அன்னையே
உன்னில் இருந்தே
எழுந்தவர் நாம்!
உன்னைத்தேடி
உன்னைக் கற்று
உனக்குள்ளேயே
வளர்ந்தவர் நாம்.
நீகோபித்துக் கொள்கிறாய்
என்பதற்காக நாம் விலகிப்போக
முடியுமா? உனக்குள்ளேயே
எம்
தேடலைத் தொடர்வோம்"

எனும் நிலா மகளிர் கவிதை அர்த்தமுள்ளது.

அதனைப்போன்றே "கு.மலர்" என்கின்ற பயில் நிலத்தின் வாசகி எழுதிய வரிகளாகும்.

"அனுபவம் வேண்டுமானால்
இளமையை இழந்துவிடு
வளர்ச்சி வேண்டுமானால்
தூக்கத்தை இழந்துவிடு
முன்னேற்றம் வேண்டுமானால்
வியர்வையை இழந்துவிடு
உரிமை வேண்டுமானால்
மௌனத்தை இழந்துவிடு
வெற்றி வேண்டுமானால்
ஆசையை இழந்துவிடு
எனினும் வெற்றிமட்டும் வேண்டுமெனில்
பயில் நிலத்தை இழந்து விடாதே"

புதியவர்கள் பயில் நிலம் தொடர்பாக எவ்விதம் ஆர்வமாக உள்ளார்கள் என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

"சமூகம் பற்றிய படைப்புகள், சில எல்லைகளுக்குள் வரையறுக்கப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், இளைஞர்களின் சமூகப் பார்வைகள், கல்வி நடவடிக்கைகளால் விலங்கிடப்பட்டுள்ள நிலையில் இவர்களுடையதும் இவர்களுக்கானதுமான சிந்தனைகள் பதியப்படுவதற்கு ஒரு களம் தேவைப் படுகிறது. இதன் பிரதிபலிப்பே இந்தப் பயில் நிலம்.

கற்பனாவாத உலகு பற்றி சிந்தனைகளை இலக்கியம் என்று இளைஞர்களுக்குக் காட்டி, மாயைக்குள் முடக்கி வைத்துக்கொண்டிருக்கும் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளைப் போற்றி வரும் ஒரு சில பாட்டனார் பரம்பரையினரின் பார்வையிலிருந்து விடுவித்துக் கொண்டு வரும் வழிகாட்டியாக இந்த பயில்நிலம் அமைய வேண்டும் என்ற முயற்சியில் நாம் இறங்கியிருக்கிறோம்.

என முதலாவது இதழில் அறைகூவல் இட்ட பயில்நிலம் தனது ஆறாவது இதழில் இறுதிப் பக்கத்தைப் பின்வருமாறு கூறுகிறது.

"பயில் நிலம் வெறுமனே




பக்கங்களால் நிரப்பப்பட்ட சஞ்சிகைகளின் நடுவே வாசகர்களுக்கு சிந்தனையைத் தூண்டக் கூடிய பல விடயங்களை உள்ளடக்கிய ஓர் இதழாக வெளிவருவதில் நாம் மகிழ்வடைகின்றோம். பயில் நிலம் எழுத்தாளர்களை, வாசகர்களை உருவாக்கி இருக்கின்றது. பல புதிய புதிய முகங்களை எமது இதழ் அறிமுகப்படுத்தி வருகின்றது. எமது இதழோடு முதலில் வாசகராக இணைந்த பலர் இன்று எழுத்தாளர்களாக, விநியோகத்தர்களாக இணைந்து செயற்பட்டு வருகின்றனர். ஒரு இதழ் வெற்றியடைவதற்கு இம் மூன்று தரப்புகளும் தமக்கிடையே பலமான இணைப்பை ஏற்படுத்துதல் அவசியம். நீங்களும் எமது இதழோடு வாசகர்களாக, எழுத்தாளர்களாக, விநியோகத்தர்களாக இணைந்து செயற்படவேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிந்தனைப் புரட்சி மூலம் நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்"

புதிய படைப்பாளிகளின் படைப்புகளுக்கு உந்துகளமாக உள்ள 'பயில்நிலம்' காத்திரமான ஒரு இலக்கினை நோக்கி அசைந்து கொண்டு இருக்கிறது என்பதை அதன் வளர்ச்சி காட்டுகிறது.

அதன் காரணமாகவே விடயத்தெரிவு, பக்கவடிவமைப்பு போன்ற விடயங்களில் ஆரம்பத்தில் இருந்த சில நெருடல்கள் மாற்றம் அடைந்து ஒரு ஒழுங்குக்கு வருகின்றது.

பல்வேறுவகையான விவாதங்களை, கருத்து மேடைகளை அமைத்துவரும் 'பயில்நிலம்' அவற்றுக்கு மேலும் விரிவான களம் அமைக்க வேண்டும்.

அனுபவப்பட்டவர்களின் நேர்காணல்கள் கூட இன்னமும் ஆழமாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அதுவே பயனுள்ளதாக அமையும்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

## நூல்நயம்

# நெஞ்சு கனக்கும் நினைவுகள்

கவிதை என்பது மனித மனங்களை உறுத்துகின்ற உலுப்பி அசைக்கின்ற உன்னதங்களின் வெளிப்பாடுகளே! அந்த வகையில் நெஞ்சிற் கனன்று நெருப்பாகி வெளிவந்திருப்பவைதான் "நெஞ்சு கனக்கும் நினைவுகள்" என்னும் கவிதைத் தொகுப்பாகும்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் எழுத்துருவாக்கத்தில் நூலாகி விளங்கும் இக் கவிதைத் தொகுப்பில் 40 கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. இந்த 40 கவிதைகளையும் ஆக்கிய வகையில் பல்கலைக்கழக மாணவர்களான 12 கவிஞர்கள் இத் தொகுப்பின் மூலம் அறிமுகமாகின்றனர்.

உயிர்ப்பும் உணர்வும் ஒன்று சேர ஓரிரு முந்நாளில் மறந்து போகும் நினைவுகளா அவை? என்ற கேள்வியை எழுப்பி; அவை மறக்கப்பட முடியாதவை என்பதை மனதில் பதிக்கும் வகையில் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. தேர்ந்தவை அனைத்துமே பாராட்டுக்குரியவையாகும்.

அவற்றுள் இ.கோகுலன் எழுதியுள்ள எட்டுக் கவிதைகள் அவரின் உள்ளக் குமுறலை உணர்த்தி நிற்கின்றன.

"நம்மூர் கயவன்
பிடியிலிருந்து
மீட்சி பெறும் கால்கள்
அவள் நினைவோடு
செருக்களம் நோக்கி நகரும்
ஏந்திய சுடுகலன் செந்தணல்
கக்கும்
கயவர் புறமுதுகிடும் வரை"

"நாளைய நிகழ்வு" என்னும் அவரது கவிதையில் இவ்வாறு நினைவு விரிகின்றது.

"எங்கள் வாழ்க்கை" என்னும் கவிதை மீனவ வாழ்க்கையை விரித்துச் சொல்லுகின்றது. "சீதனம் எனும் கவிதை தமிழர் மத்தியில் இன்னமும் சாக மறுத்துக் கொண்டிருக்கும் சீதனக் கொடுமையைச் சாடுகின்றது. இவ்வாறு ஏழு கவிதைகளுடன் அறிமுகமாகிறார் திருமலை விக்னா.

"பொழுதுகளின் விடியல்களும்
மொட்டுக்களின் விரியல்களும்
சிட்டுக்களின் சினுங்கல்களும்
கேட்பதற்குப் பதிலாய்
கேட்பதென்னவோ;
தனியே-வேட்டுக்களின்
பாட்டுக்கள்தான்" எனவே

"தீர்மானியுங்கள்" என்கிறது அவரது கவிதை. ஆறு கவிதைகளுடன் அறிமுகமாகும் சிவ திவாகர் தமது "எங்கள் துரோகிகள்" என்ற கவிதையில் கேளுங்கள்

துரோகிகளே,
எதையும் தாங்கும் தேகம்
நெஞ்சுடன் கலந்த ஈகம்
இவை இரண்டில் மட்டுந்தான்
சுத்தமான விடுதலையைப்
பெற்றுக்கொள்ளமுடியும்
உங்களுக்கு என்ன....
..............................
துரோகிகளே எல்லாமே
எங்களுக்குத் தெரியும்"

என்கின்றார்.




ச.கருணாகரனின் நான்கு கவிதைகள் சொல்லும் சங்கதிகள் "பொங்கிய தமிழே பொங்கியெழு" எனும் கவிதையுடன் நெஞ்சக் கனவோடு நெருப்பேந்தி நிற்கின்றது.

"எம்
சகோதரியின் கற்பழித்து
படுகுழியில் புதைத்தவன்
என் அண்ணன் உதிரம் சீற
சுடுகுழலால் அடித்துக்
கொன்றவன்
என் மாமனை நீத்துக்காய்
போல் வெட்டி
மலக்குழியில் மறைத்தவன்
எம் உறவையே எம்
இனத்தையே
கொன்றழித்த பாவி
எமக்குப் பாதுகாப்பாம்-
ஆதலால்
இவ்வுண்மை உலகறிய
பொங்கு தமிழே
பொங்கியெழு"

இ.சியாமினி, வ.பிரதீபன் ஆகியோர் மும்மூன்று கவிதைகளுடன் ராசு (சாமினி) ஞீ. பகீரதன், செ. றொபின்சன் ஆகியோர் இவ்விரண்டு கவிதைகளுடனும் க.சிவசங்கர், இ.சிவதர்சினி, க.ஞீகரன் ஆகியோர் ஒவ்வொரு கவிதைகளுடனும் அறிமுகமாகியுள்ளனர். விடுதலைப் போரையும் வீரர் சிறப்பையும் வெளிப்படுத்தும் ஒவ்வொரு கவிதையிலும் வெற்றிப் பெருமிதம் பொங்கி எழுகிறது. அவை வாசகர்களின் உணர்வைத் தொட்டீர்க்கின்றன.

மரணத்துள் வாழ்வோம், காலம் எழுதிய வரிகள் ஆகிய போர்க்கள விடுதலை வேட்கைக் கவிதைத் தொகுப்புகளைப் போல் இந்த "நெஞ்சு கனக்கும் நினைவுகள்" என்னும் கவிதைத் தொகுப்பும் காலத்தால் அழியாத நினைவுகளைச் சுமந்து வெளிவந்துள்ளது.

"உள்ளிருப்பவை கவிதைகளல்ல தூங்கமறுத்த நினைவுகளின் துளிகள்" என்ற தொகுப்பாளரின் கருத்தையும் அவை வெளிப்படுத்தத் தவறவில்லை.

அட்டைப்படமும், ஒவ்வொரு தாளிலும் காணும் ஓவியங்களும் நுண்கலைப்பீட மாணவர்களின் கைவண்ண மேன்மையைக் காட்டுகின்றன.

தமிழ் மாணவர் ஒன்றியத்தைப் பாராட்டுவோம்.

நெடுந்தீவு மகேஷ்

இயந்திர இயக்குநரை இயந்திர அறைக்குள் அவர்கள் கொண்டுசெல்கின்றனர். அவரை இயந்திரத்தை இயக்குமாறு சொல்கின்றனர். ஆனால் அவர் மயக்கமடையவே இயந் திரம் இயக்கப்படமுடியாதுபோனது. அவர் சுதாரித்தும் இயந் திரத்தை இயக்கியிருந்தால் மிகுந்த ஆபத்து உருவாகியிருக்கும். ஏனென்றால் குமுதினியை சிறிலங்கா கடற்படையினர் மறித்த போது அது இயக்கநிலையில் கியரிலேயே நிறுத்தப்பட்டது. இதனால் அந்தவேளை இயந்திரம் இயக்கப்பட்டிருந்தால் இயந்திரம் சுழல ஆடுதண்டு புறப்பலரை சுற்றியிருக்கும்.அந்த ஆடுதண்டுக்கு மேலேயே கொல்லப்பட்ட மக்களும் காயப்பட்ட மக்களும் போடப் பட்டிருந்தனர்.ஆடுதண்டு சுழன்றிருந்தால் அவர்கள் சக்கையாக்கப் பட்டிருப்பர். இயந்திரம் இயங்காத நிலையில் குமுதினி நடுக்கடலில் அலைந்து கொண்டிருந்தது.அப்போதைய கடல் நீரோட்டத்தில் அது புங்குடுதீவு கண்ணகை அம்மன்கோயில் கரையை நோக்கி தானாகவே நகரத் தொடங்கியது.அலைந்து அலைந்து குமுதினி புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயிலுக்கு நேராக சென்றது. அதன் பின் நீரோட்டத்தால் நயினாதீவு நோக்கி அலையத் தொடங்கியது.

குறிகாட்டுவானில் 8 மணிக்கு வரவேண்டிய குமுதினி வந்து சேராததால் பதட்டம் ஏற்பட்டது. இயந்திரக்கோளாறா,



# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

எரிபொருள் தீர்ந்ததா என்ற கேள்வியே அங்கு எழுந்தது.ஆனால் படுகொலை ஒன்று நடந்திருக்கும் என எவரும் எதிர்பார்க்க வில்லை.

குமுதினியை தேட ஆயத்தம் நடந்தது.

குமுதினி நயினாதீவு நோக்கி அலைந்து நயினாதீவு அருகே ஆழ்கடல் ஆரம்பிக்கும் பகுதியை அடைந்து களப்பு கடலின் ஒரு மேடருகே பொறுத்துப்போனது.

குறிகாட்டுவான் துறையின் நுழைவாயிலில் ஒரு சில கடைகள் இருந்தன. உணவுக்கடைகள் அவை.

திடீரென கடையொன்றின் பெண்மணி பரபரப்படைந்தார். அவர் திருமதி.திருநாவுக்கரசு என்பவர்.

தொலைவில் குமுதினி அலைவதைக்கண்டார்.

குமுதினிக்குள் இருந்து ஒரு வெள்ளைத்துணி ஒன்று அபாய அசைப்பு காட்டியது. குமுதினிக்குள் தப்பியவர் ஒருவர் காட்டிய அழைப்பு அது.அப்போது குமுதினி பழுதடைந்ததாகவே கருதி உடனடியாக அதனைநோக்கி படகில் மீட்புப்பணிக்காக குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து குழு ஒன்று சென்று. அவர்கள் குமுதினியை நெருங்கி அதனுள் ஏறிப்பார்த்த போது இரத்தத்தை உறைய வைக்கும் பிணக்குவியலை கண்டனர்.

உடனடியாக குமுதினி குறிகாட்டுவான் நோக்கி இழுத்து வரப்பட்டது. விடுதலைப்புலிகள் அங்கு விரைந்து மீட்பு நடவடிக்கையைத் தொடங்கினர்.காயமடைந்தோர் உடனடியாக புங்குடுதீவு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இறந்தோர் உடல்கள் யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன. புங்குடுதீவு மருத்துவமனையிலிருந்து கடும் காயமடைந்தோர் பின்னர் யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இப்படுகொலையின் பின் காயமடைந்தவர்கள் புங்குடுதீவு மருத்துவமனையிலும் யாழ் போதனா மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் தாக்கப்பட்ட விடயம் மருத்துவமனை சிறிலங்கா பொலிசாரிடம் முறையிடப் பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பதிலாக சில நாட்களில் தப்பியவர்களை மருத்துவமனைக்கு வந்த சிறிலங்கா கடற்படையினர் தேடத்தொடங்கினர். உடனடியாக மருத்துவமனையில் இவர்கள் விடுதிகளுள் இடம்மாற்றி மறைக்கப்பட்டனர். உயிர் தப்பிய படகுப்பணியாளர் மருத்துவ மனையில் கடற்படையினர் தேடப்படுகின்றபோது அவர் மறைக் கப்பட்டு கடைசிவரை தலைமறைவிலேயே சிகிச்சை பெற்றார்.

இரு பெண்களைத்தவிர ஏனையோர் வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றனர். படுகொலை சாட்சியங்கள் தப்பிவிடக்கூடாது என்பதற்காக கடற்படையினர் அவர்களை தேடித்திரிந்தனர்.

இன்றும் தேடிக்கொண்டிருக்கின்றனர். எதுவித விசாரணை களும் நீதி வழங்கலும் இல்லாது அந்த முதற் கடற்படு கொலைகள் மறைக்கப்பட்டுவிட்டன. ஆனால் ஆட்களை தேடுவதில் இன்றும் சிறிலங்காப்படையின் அக்கறை தீவிரமாக இருப்பது தெரிகின்றது.

குமுதினியில் நடந்தவை பற்றி மேலும் வரும்.

துருவன்




# தொன்மைக்கால புவிச்சரிதவியல் கற்கருவிகள்

வன்னியில் இரணைமடு புவிச்சரிதவியல் படையில் 1 லட் சத்து 25 ஆயிரம் ஆண்டுகட்கு முந் திய மனிதர்களின் கற்கருவிகள் கண்டறியப்பட்டன. முதலாய தகவல் களைத் தந்தோம். ஈமச்சின்னங்கள்- பெருங்கற்கால பண்பாடு பற்றிக் கூறி வரும் வேளையில் உங்களின் தெளி வுக்காக மனித குல வரலாற்றின் சுருக்கக் குறிப்புகளை இங்கு தரலாம் என நினைக்கிறோம். இதன் மூலம் நாம் எங்கே நிற்கிறோம் என்பதை தெளிவாக எம்மால் புரியமுடியும்.

குரங்கிலிருந்து மனிதன் பரிணமித்தான் என்ற கோட்பாட்டின் படி மனிதனுக்கான முதல் பரிணாமம் 3கோடி 70 லட்சம் ஆண்டுகளில் தொடங்குகின்றது.

இது "ஒலிகோசென்" என்ற காலமாக வகுக்கப்பட்டுள்ளது. அடுத்தது 'மியோசென்' காலம்.

அது 2 கோடி 60 லட்சம் ஆண்டுகள் முதல், 1 கோடி 20 லட் சம் ஆண்டுகள் வரை நீடித்தது.

அடுத்தது 'பிளியோசென்' காலம்.

இது 1 கோடி 20 லட்சம் ஆண்டுகள் முதல் 30 லட்சம் ஆண்டு கள் வரை நீடித்தது.

பிளியோசென் காலத்தின் கடைசிக்கட்டத்தில் மனிதன் கற் களைப் பயன்படுத்தத் தொடங்குகின் றான்.

30 லட்சம் ஆண்டுகள் முதல் (10 லட்சம் ஆண்டுகள் வரை) 40 ஆயிரம் ஆண்டுகள் வரை பிளைஸ்டோசென் காலமாகும். இங்கு தான் நவீன மனிதனுக்கான முதற் பரிணாமமான ஹோமோரெக்டஸ் மனி தன் உருவாகினான்.

ஹோமோரெக்டஸ் மனி தன் 10 லட்சம் ஆண்டுகள் முன் பரிணமித்தான். இப்போதைய மனிதன் ஹோமோசேபியன்.

இவரின் பரிணாமம் 40 ஆயிரம் ஆண்டுகளின் முன் ஆகும்.

ஹோமோசேபியனின் ஆரம்ப மனிதன் பரிணமித்தது 2 லட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகளின் முன்.

ஹோமோசேபியன் மனித னும் பூமியின் சகல பகுதிகளின் பொதுமைப்பாடாக இருக்கவில்லை. ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு வகையில் அவன் இருந்தான். எந் தெந்தப் பகுதிகளில் இந்த மனிதனின் எலும்புப் படிவங்கள் எடுக்கப்பட்டதோ அப்பிரதேசப் பெயர் அவனுக்கு சூட்டப்பட்டது. சோபோ நதி மனிதன், ரொமீசிய மனிதன், நியாண்டர்தால் மனிதன், ரோமன்யான் மனிதன் என வகைப்படுத்தப்படுகின்றன.

இரணைமடு புவிச்சரிதவி யல் படை கற்கருவிகளின் படி அது 1 லட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானது.

இது ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நியாண்டர்தார் மனிதனுக்கும். 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய குரோமன்யான் மனிதருக்கும் இடைப் பட்ட காலத்துக்குரியதாகும் என்ற மேலாய்வுக் கருத்தை நாம் முன் வைக்கலாம். அகழாய்வுகளே இதனை முடிந்த முடிவாக்கும்.

இங்கு நாம் தந்த விடயங் கள் மனித குல வரலாற்றின் கால ஒழுங்கு ஆகும். 40 ஆயிரம் ஆண்டு களில் உருவான வரலாற்றுக்கு முந்திய இன்றைய ஹோமோ சேபிய மனிதனில் நாம் இந்த மண்ணில் அடங்குகிறோம்.

இவை பற்றிய தகவல் களை திரட்டியே நாம் இங்கு தரு கிறோம்.

40 ஆயிரம் ஆண்டுகளுக் குட்பட்ட காலத்தில் உலகில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடு களின் தொன்மை பற்றி தருவதும் நன்மையானதாக இருக்கும்.

தற்போதைய மனிதனுக்கு முந்திய குரோமக்னொன் மனிதன்- எமக்கு முந்திய எமக்கான அண்மைய மூதாதை மனித எலும்புக்கூடுகள் பிரான்சின் குரோமக்னொன் பகுதியில் 1868 இல் கண்டுபிடிக்கப்பட்ட இடத் தின் பெயரினால் இந்த எலும்புக் கூட்டுக்குரிய மனிதனுக்கு குரோமக் னொன் மனிதன் என பெயரிடப் பட்டது. இதன் தொன்மை -கி.மு 40 ஆயிரம் ஆண்டுகளுக்கும் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. பாறைக குகைகளில் இந்த எலும்புகள் காணப்பட்டன.

குரோமக்னொன் மனித னுக்கு முந்தியது... நியாண்டர்தார் மனிதன் ஜேர்மனியில் நியாண்டதார் பள்ளத்தாக்கில் எடுக்கப்பட்ட தொன் மை மனித எலும்புக் கூடுகளுக்கு இடப்பட்ட பெயர் நியாண்டர்தார் மனி தன். நீண்டதலை, மூக்கை கொண்ட மனிதன் இவன். உயரம் 5அடி 1 அங்குலம் முதல் 5 அடி 10 அங் குலம் வரை 1 லட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகால பரிணாமத்துக்குரிய இனம் இது. இந்த மனிதர்கள் தென் ரஷ்யா, தென்மேற்கு ஆசியா, மேற்கு


(இரணைமடு)

ஐரோப்பா பகுதிகளில் வாழ்ந்துள் ளனர். ஆசியாவில் இதன் இருப்பு கி.மு. 60 ஆயிரம் ஆண்டுகள்.

நியாண்டர்தார் மனிதனுக்கு முற்பட்ட மனிதவாழ்வு மிக அரி தாகவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இங்கு இந்த மனித குல பரிணாமத்தினூடாகவும் எமது தொன்மையை தேடவேண்டும். இந்தத் தொன்மை வரலாற்றாய்வுகள் எமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட வில்லை. அடுத்தவாரம்- மீள எமது மண்ணில் வரலாறைத் தேடுவோம்.

குரலோன்

# புகைத்தலுக்குத் தடை?



சம காலத்தில் புகைப் பிடிப்பவர்களின் தொகை அதி கரித்தே வருகின்றது. இதனால் ஏற்படும் பாதிப்புகளை புரிந்தும், புரியாமலும் அதனை பெரும் பாலானவர்கள் நாகரிகமாகக் கருதி நாசமாய்ப் போகின்றனர். புகைத்தலால் ஆண்டுக்கு 50 லட்சம் பேர் இறக்கின்றனர். இது இன்னும் பதினைந்து ஆண்டு களில் ஒரு கோடியாக அதிகரிக் கலாம் என அச்சம் தெரிவிக் கப்படுகிறது. இதில் முக்கிய மான விடயம் என்னவெனில் அபிவிருத்தி. அடைந்து வருகின்ற நாடுகளில்தான் இதன் தாக்கம் அதிகம் எனக்கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து முக்கிய பொது இடங்களில் புகைப்பிடிக்கக் கூடாதுஎன்பது போன்ற ஏற்கனவே உள்ள பல்வேறு சட்டங்களை செயற்படுத்துவ தோடு சிகரெட் போன்ற பொருட் களின் பொதிகளின் மீது கடுமை யான எச்சரிக்கைகள் அச்சிட வேண்டும் எனவும் விளையாட்டுப் போட்டிகளுக்கான விளம்பரங் களை இவ்வாறு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து பெறு வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த உடன்படிக்கையில் இந்தியா, இலங்கை, பிரிட்டன் உட்பட 168 நாடுகள் கையொப்பம் இட் டுள்ளன. இந்த உடன்படிக்கை யின் வரவு மகிழ்ச்சியானதே ஆனால் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தினால் அதைவிட மகிழ்ச்சியானதே. இவ்வாறான உடன்படிக்கை களை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகளே இவ்வாறான பழக்க வழக்கங்களுக்கு அடிமை யாகும்போது உடன்படிக்கை யின் நிலை...?

A9 வீதியின் ஒருபக்கம் பதிந்தும், மறுபக்கம் உயர்ந்தும் காணப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்களின் பொறிமுறை சார்ந்த அறிவுகளுக்கே சவாலாக இருக்கிறது இந்தப் பிரச்சினை. சீரில்லாமல் உயர்ந்தும் பதிந்துமிருக்கிற வீதியால் வாகனங்களை ஓட்டுவதற்கு பாடாய்ப்படுகிறார்கள் ஓட்டுநர்கள். இதில் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடைப்பட்ட பகுதி வீதியில்தான் இந்தப்பிரச்சினையுண்டு. இந்த இடைப்பட்ட பகுதியில்தான் வீதி விபத்துகளும் அதிகம்.

முன்பு போலல்லாமல் இப்போது இந்தச் சாலையால் வாகனங்கள் கூடுதலாக ஓடுகின்றன. முன்னர் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கான போக்குவரத்துக்கு புகையிரதங்கள் ஓடின. அவற்றில் சனங்களும், பொருட்களும் இடம்மாற வசதியாக இருந்தது. பாரப்பொருட்கள் கூடுதலாக புகையிரதங்களிலேயே எடுத்துச்செல்லப்பட்டன.

இதெல்லாவற்றையும் பிற வாகனங்களே செய்யவேண்டியிருக்கிறது.

இதனால் வீதியில் நெரிசல் கூடிவிட்டது. அதிலும் ஒரேவழியால் தான் இவையெல்லாம் செல்லவேணும், வேறுவீதிகளில்லை. அத்துடன் குறிப்பிட்ட நேரத்துக்குள்தான் பயணமும் செய்தாக வேண்டியுள்ளது. பிறகு தடை முகாம் பிரச்சினைகள்.

முன்பு இரவுபகலாக போக்குவரத்திருந்தது. அப்படியிருந்ததால் பயணத்தில் நெருக்கடிகள் கூடுவதற்கான வாய்ப்புகளில்லை.

இவற்றை கருத்தில் எடுக்காத ஓட்டுநர்கள் ஓடும் ஓட்டத்தால் விபத்துகள் கூடுதலாக நடப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குகிறது. கணக்கெடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி பார்த்தால் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான வீதியிலேயே கூடுதலான விபத்துகள் நிகழ்கின்றன.

தொலைதூரப் பயணத்தில் ஏற்படுகிற அயர்ச்சி விபத்துகளுக்கு ஒரு காரணம். தடைகளில் தாமதப்படாமல் அவற்றைக் கடந்துவிட்டால் இடையில் தங்காமல், தாமதிக்காமல், செலவில்லாமல் போகவேண்டிய இடத்திற்குச் சென்று சேர்ந்துவிடலாம் என்ற அவசரம் விபத்துகளை ஏற்படுத்துகின்றது.

# பயணம்..?



இப்போது புகையிரதங்கள் இல்லை. அதேவேளையில் முன்னரைவிட தேவைகளும் கூடிவிட்டன. அதற்காக போக்குவரத்தின் அவசியமும் அதிகமாகிவிட்டது. போக்குவரத்துக்கான வாகனங்களும் பெருகிவிட்டன.

ஒரு தடவை வீதி அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார் "புகையிரதம் ஓடவில்லையென்றால் A9 வீதியை இன்னொரு மடங்கு பெரிதாக்கவேண்டும்" என்று.

வட பகுதிக்கான போக்குவரவில் பாதிக்கு மேலானதை புகையிரதங்களே ஈடுகட்டிவந்தன. பொருட்களை மட்டும் ஏற்றுவதற்கென்றே அப்போது தனியாகப் புகையிரதங்கள் ஓடியிருந்தன. இப்போதுள்ள புதிய தலைமுறையினர் பலருக்கு இந்தவிடயம் தெரியாமலிருக்கலாம்.

காங்கேசன்துறையிலிருந்து சிமெந்தை புகையிரதங்களே எடுத்துச்சென்றன. வடபகுதிக்கான எரிபொருட்களையும் புகையிரதங்களே கொண்டுவந்தன. ஆனையிறவிலிருந்து உப்பு, முருங்கனிலிருந்து சிமெந்துக்கான களிமண் இப்படி இன்னும் பலதரப்பட்ட பொருட்களையும் எடுத்துச்செல்வதிலும், கொண்டுவருவதிலும் இந்தவண்டிகள் கூடுதலாகச் செயற்பட்டன. இப்போது

இதில் இன்னுமொன்றையும கவனிக்கவேணும். வன்னி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து போக்குவரத்துச்செய்யும் வாகனங்கள் எல்லாம் A9 வீதியைப் பயன்படுத்தியே கொழும்பு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை என ஏனைய பிரதேசங்களுக்குச் செல்கின்றன. வவுனியாவிலிருந்துதான் பின்பு கிளை பிரிந்து வேறிடங்களுக்குச் செல்லமுடியும். இதேபோல ஏனைய பகுதிகளிலிருந்து வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வருகின்ற வாகனங்களும் A9 ஐ தான் பயன்படுத்த வேணும். ஏனைய வீதிகள் தடைப் ப' டுவிட்டன என்பதையும் கவனித் ... அவசியம்.

ஆக இவ்வாறான காரணங்கள் எல்லாம் சேர்ந்து A9 வீதியை நெரிசல் மிக்கதாக்கியுள்ளன. அத்துடன் விபத்துகளின் பிரதேசமாகவும் உருவாக்கியிருக்கின்றன.

இவை விபத்துப் பிரச்சினைகள். இப்பத்தியில் முன்னுரைக்கப்பட்டுள்ளது போல A9 வீதியின ஒருபக்கம் பதிவாகவும் மறுபக்கம் மிதப்பாகவும் இருப்பதற்கான காரணம் வட பகுதியிலிருந்து வெளியே போகும் வாகனங்கள் வெறுமையாகப் போகின்றன. தென்பகுதியிலிருந்து வடபகுதிக்குள் வருகின்ற வாகனங்கள் பாரத்துடன் வருகின்றன என்பதே.

முன்புபோல இப்போது வடபகுதியின் உற்பத்திகள் வெளியே செல்வதில்லை. வடபகுதியின் உற்பத்தியும் பெருமளவு வீழ்ச்சியடைந்துவிட்டது. சிமெந்து, உப்பு, கூரைத்தகடுகள், மீன் போன்றவை முற்றாகவே வெளியே அனுப்பப்படுவதில்லை. பதிலாக இப்போது இவையெல்லாம் வெளியேயிருந்து உள்ளே எடுத்துவரப்படுகின்றன.

தவிர வெங்காயம்,மிளகாய், புகையிலை, மரக்கறி வகைகள், நெல் வாழைக்குலை போன்ற விவசாய உற்பத்திகள் இப்போது வெளியே செல்வதில்லை. இதேபோல கருவாடு, மீன் போன்ற கடலுணவுப் பொருட்களும் தென் பகுதிக்குப்போவதில்லை. அப்படிப் போனாலும் மிக மிகக் குறைந்த அளவில்தான் கொண்டுபோகப்படுகின்றன. மற்றும்படி வெறுமையான வாகனங்களே தெற்கே போய் எல்லாப் பொருட்களையும் எடுத்து வருகின்றன.

தென்பகுதியிலிருந்து பொருட்கள் வருகின்றன. வடபகுதியிலிருந்து காசு மட்டும் போகிறது. இது பொருளாதாரச் சமனிலையின்மையைப் பெரிய அளவில் விரித்துச் செல்கிறது. தென்பகுதிப் பொருட்களுக்கான சந்தையாக வடபகுதி மாறிவிட்டது. வடபகுதியின் உற்பத்திகள் பெருமளவு வீழ்ச்சியடைந்துவிட்டன. இராணுவ நெருக்கடிகளும் பொருளாதாரத்தடைகளும் இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பும் இப்பொருளாதார வீழ்ச்சிக்குச் ஒருகாரணம்தான். அதே வேளையில் 'வெளிநாட்டுக்காசு' எனப்படும் புலம்பெயர்ந்தோரின் காசு பெரும்பாலான தமிழர்களைச் சோம்பேறிகளாக்கிவிட்டது.

அரசாங்க உத்தியோகம், வியாபாரம், வாகனம் வைத்திருத்தல் என்பதோடு வருவாய்க்கான வழிகளும் தொழில்களும் சுருங்கிவிட்டன.

உற்பத்தி மீதான ஆர்வமும் முயற்சியும் வெகுவாகக் குறைந்துவிட்டது. நுகர்ச்சியில்மட்டும் தங்கியிருக்கிறது வடபகுதி.

நுகர்ச்சிக்காகக் கொண்டு வரப்படும் பொருட்களை ஏற்றிய வாகனங்கள்தான் A9 வீதியின் ஒரு பக்கத்தை பதித்துவிட்டிருக்கின்றன. மறுபக்கத்தால் போகும் வெற்று வாகனங்கள் உயர்ந்தபகுதியால் போகின்றன.

ஒரு பாதையிலேயே எமது பொருளாதாரச் சீரழிவின் முகத்தை நன்றாகப் பார்க்கமுடிகிறது. எங்கள் மீதான சிங்களத்தரப்பின் ஒடுக்குமுறைக்கு இதுவொரு சாட்சியும் கூட.

எல்லாவிதமான பொறிமுறைகளுக்குமப்பால்- எல்லா விதமான விதிமுறைகளுக்குமப்பால் யதார்த்தம் மிகக்கொடூரமாகவேயிருக்கிறது. பொருளாதார வல்லுநர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்.

கருணாகரன்

எண்ணற்ற நாடகங்களை படைத்த கலைஞர் "புதுவை அன்பன்" அவர்களின் கதை வசனம் நெறியாள்கையில் தற்போது தமிழீழ தாயகமெங்கும் நயமிடும் அருமையான நாடகம். "மீண்டும் எழுவோம்" என்பதாகும். பொதுவாக தமிழீழ மக்களின் உணர்வுகளையும், வரலாறுகளையும், சாதனைகளையும் கொண்டு புதுவை அன்பன் அவர்கள் நாடகங்களைப் படைப்பது



# "மீண்டும் எழுவோம்" நாடகமும் பார்வையும்

இயல்பு. இருந்தாலும் இதே வகையில் அமைந்த இந்த நாடகம் பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த நாடகம் கந்தலாய் பிரதேசம் சிங்கள வாதிகளுக்கு அடிமையானதை புடமிடுகிறது தமிழர்கள் அவர்களை வாழவைத்ததையும் அவர்கள் அதற்கு பிரதி உபகாரமாக வாரி எடுத்ததையும் நிதர்சனமாக பேசுகிறது.

தமிழ் மக்கள் காலம் தோறும் பரிணாமம் அடையும் வேளை ஒவ்வொரு சிங்கள ஆட்சியாளரும் பீடம் ஏற்று அந்த மக்களை அடக்கி ஒடுக்கி வந்ததை சொல்லிவிட்டது இந் நாடகம். சிங்கள ஆட்சிக்குப் பின்னால் விசிறியோடு இருக்கும் பௌத்த பிக்குகளே இந்த இனப்பிரச்சினையை ஆட்டி வைப்பதே அப்பட்டமாக கூறுகிறது. அர்த்தமற்ற சிங்களவரின் வாக்குகளை நம்பி ஏமாந்த தமிழரின் வேதனை கலந்த நிலைமையும், எமது வரலாற்றுக்கருவூலங்களில் தமது எச்சங்களை இட்டு "இது பௌத்த நாடு" எனக் கோசம் இடும் அடாவடித்தனத்தை வெளிப்படையாக அரங்கு கூறுகிறது.

இவற்றுக்குப் பின்னால் உள்ள பௌத்தபிக்குகள் தமிழரை அடக்கும் வேளை எம்மில் தார்மீக பண்புடன் உருவான தமிழீழத் தேசியம் தென்படுகிறது. "பேச்சுவார்த்தை" என்ற போலியான செயலைக் கொண்டு எம்மை பலதடவை சிங்கள அரசாங்கம் ஏமாற்றுவதை நாடகம் சிறப்பாகச் செப்புகிறது.

சந்திரிகா அரசாட்சி பீடத்திற்காக கூறிய திருவாசகங்களையும் பின்னாளில் அவரின் திருச் செயல்களையும் நிவாரணம் என்ற பெயரில் யுத்தத்திற்கு வலுவூட்டும் அவரின் தந்திரோபாயங்களையும் நாடகத்தில் காட்சியாகக் காணமுடிந்தது. "சுனாமி" என்ற ஆழிப்பேரலை சந்திரிகாவின் பொருளாதார இறுக்கத்திற்குக் கிடைத்த பரிசாக மாறுவதையும் உலக நாடுகள் வழங்கிய உதவியில். தமிழ் மக்களுக்கு பன்னீர் தெளிப்பதையும் கிண்டலாக வேதனையுடன் கூறப்பட்டுள்ளது. கடன்கள் நீங்கி மூச்செடுக்கும் சந்திரிகாவும் ஒட்டு மொத்தமாக அன்னிய சிங்கள மக்களும் நிம்மதி அடையும் அதேவேளை தமிழ் மக்களாகிய நாமும் நம் மொழியை பேசும் முஸ்லிம் சகோதரர்களும் ஏமாந்து போவதை புதுவை அன்பன் அற்புதமாகக் கூறுகிறார். அத்துடன் சுனாமிப்பேரலை தாக்கிய எம் மக்களை அன்புடன் காத்த தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் சேவைக்கு நன்றி கூறி பின்னதாக எம் ஒட்டுமொத்தமான முடிவையும் பிரச்சினைகளையும் எம் பெரும் தலைவர் தீர்த்து வைப்பார் என நாடகத்தின் முடிவை இயல்பாகக் கூறியுள்ளார் அன்பன் அவர்கள்.

இவ்வாறு அமைந்த இந் நாடகத்தில் நடித்த திருகோணமலை தமிழ்த் தேசிய கலாமன்றக் கலைஞர்களின் இயல்பான நடிப்பு மேலும் அழகு சேர்க்கிறது. இங்கு பாடல்களினைப் பாடிய கலைஞர் வீரசிங்கம் அவர்களின் குரல் இன்னும் நாடகத்தை சிறப்பித்து விட்டது. குறிப்பாக ஒளி, ஒலி என்பன மிகவும் அற்புதமாக உள்ளது. சினிமாவில் டியிற்றல் ரெக்னிக் முறைகளில் செய்யும் வேலையை நம் கண்கள் முன்னே உண்மையாகவே நடித்துச் சென்றதே அதிக சாதனை. இவற்றை உணர்வு பூர்வமுடன் மக்கள் பார்த்திருந்தது நிஜமே. இதுவும் தனது நாடகத்தையே தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தார் புதுவை அன்பன் அவர்கள். அப்போதே இந்நாடக வெற்றி தீர்மானிக்கப்பட்டு விட்டது.

கலைரசிகன்




எங்களுக்கு நீர் எவ்வளவு அவசியமான ஒரு வளமாக உள்ளதோ அவ்விதம் நீரைப்பாதுகாத்தல் தொடர்பான நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

யாழ்ப்பாண குடா நாட்டில் நீர் தொடர்பான அவசியமான நடவடிக்கைகள் பலவற்றை எடுக்க வேண்டியது தொடர்புடைய சகலரதும் நடவடிக்கையாகும்.

நாளாந்தம் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், சமைப்பதற்கும் பயன்படுத்தும் பொதுசனமாக இருந்தால் என்ன

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

விவசாய, கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோராக இருந்தால் என்ன இந்தப் பொது விதிக்கு உட்பட்டவர்களே.

குறிப்பாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் நர் வளத்தைப் பாதுகாக்க பல்வேறு புதிய செயற்பாடுகள் முன்வைக்கப்படுகினறன. முக்கியமாக புதிய நீர்ப்பாசன முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

எனினும் 60000இற்கு மேற்பட்ட விவசாயிகள் உள்ள யாழ்மாவட்டத்தில் இந்தப் புதிய முறைகள் தொடர்பான ஆவலோ அக்கறையோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை என குற்றம் சாட்டப்படுகிறது.

புதிய நீர்ப்பாசன முறையான தூவல் நீர்ப்பாசன முறையை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிடம் இருந்தும் பத்து விவசாயிகளின் விபரங்களைக் கோரியிருந்தபோதிலும் போதிய விபரங்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தூவல் நீர்ப்பாசன முறைமூலம் நீர், காலம், நேரம் என்பவற்றை மீதப்படுத்த முடிவதுடன் உற்பத்திச் செலவையும் குறைக்கமுடியும். அதிக நன்மைகளையும் பெறக்கூடியதாகவும் இருக்கும்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவது யாதெனில். நான்கு பரப்புக்காணி, நீர்பாசனக் கிணறு, நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவற்றை உடைய விவசாயிகள் இம்முறையினைப் பயன்படுத்த வங்கிக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

எனினும் விவசாயிகளின் கவனம் இந்த தூவல் நீர்ப்பாசன முறையின் மீது திரும்பவில்லை. புதி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இருக்கும் எமது வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தி உச்ச லாபத்தினைப் பெறமுடியும். அதுமட்டுமல்லாது எமது இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் முடியும்.

எனவே எங்கள் மண்ணின் காவலர்களான விவசாயிகள் இது தொடர்பில் அக்கறை கொள்ளவேண்டும்.

# வன்னிச் சுரபி

வன்னிச் சுரபித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஒரு வருடத்தைத் தாண்டி விட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதும் பால், பால் உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் நுகரும் அளவை பொதுமக்களிடம் அதிகரிக்கச் செய்வதன் மூலம் போசாக்கான சமுதாயத்தை உருவாக்குதலும் ஆகும். இதன்மூலம் உள்ளூர் கால்நடை வளர்ப்போரின் வருமானமும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

தற்போது இத்திட்டத்தில் பல வகையான பால் உற்பத்திப் பொருட்கள், சந்தையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சுவையூட்டிய பால், யோக்கட், யூஸ், பால் கோவா என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. இத்துடன் எதிர் காலத்தில் பாச்சர் முறையில் தொற்று நீக்கப்பட்ட சுத்தமான பசுப்பாலை பைக்கற்றுகளில் அடைத்து பாவனையாளர்கள் வேண்டிய போது தேனீராகவோ அல்லது வேறு விருப்பமான பானமாகவோ தயாரித்து உட்கொள்வதற்கு ஏற்றவகையில் சந்தையில் வழிவகை செய்யும் திட்டமும் உள்ளது. அத்துடன் பழவகை சேர்த்து யோக்கட் தயாரித்து பாவனையாளர்களுக்குக் கிடைக்கவும் எதிர்காலத்தில் உற்பத்திகள் விரிவாக்கப்படும்.

பசுப்பாலைத்தெரிவு செய்யும் போது அதன் நிறம், மணம் சுவை என்பன முதலில் திருப்திகரமாக இருந்தால் அதன் அடர்த்தி லக்ரோ மீற்றர் என்னும் கருவியால் அளக்கப்படும். இதன் அளவு குறைவாகக் காட்டுமானால் பா கலப்படம் செய்யப்பட்டது. அல்லது பால் கறக்கும் மாட்டில் ஏ னா குறைபாடு உள்ளது என்பது [illegible]ியப்படும்.

பாலின் அ[illegible] சரியான அளவில் இருந்தா[illegible] ாலின் நெய் வீதம் பரிசோதிக்கபபடும். இதற்கு கேபர் முறையில் சல்பூரிக்கமிலம், எமைல் அல்ககோலும் பாவித்து நெய்யின் அளவைக் கணிக்கலாம். இதுவும் சரியான முறையில் இருந்தால் தான் உற்பத்திக்கு உகந்ததாக பாலை உபயோகப்படுத்தலாம்.

மேலே கூறப்பட்ட முறைப்படி பாலைத் தெரிவுசெய்து நெய்யின் அளவு மட்டுப்படுத்தப்படுவதற்காக பச்சை வெண்ணெய் பிரிக்கப்பட்டு உற்பத்திக்குத் தேவையான தரத்திற்கு பால் தயார்ப்படுத்தப்படும். இதன் பின் பால் $80^0$-$85^0$c க்கு காய்ச்சி அதே உஷ்ண நிலையில் அரை மணித்தியாலம் வைத்திருக்க வேண்டும். இப்படிச் செய்வதால் பாலிலுள்ள நோய்க் கிருமிகள் அதாவது பற்றீரியா வைரஸ் போன்ற நுண்ணுயிர்கள் அழிக்கப்படுகின்றன.

இதன் பின் பாலின் அளவுக்கேற்ப சீனி, அனுமதிக்கப்பட்ட வாசனைப் பொருட்கள் எசென்ஸ் என்பன சேர்க்கப்பட்டு சுவை யூட்டிய பாலில் தயாரிக்கப்பட்டு குளிர்ந்த உஷ்ண நிலைக்கு வந்ததும் பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டு குளிரூட்டிப் பெட்டிகளில் சேமித்து விற்பனை நிலைய[illegible]ங்களுக்கு விநியோக[illegible]க்கப்படுகின்றன.

கொக்கோத் தூள் சேர்க்கப்பட்டு சொக்ளேற் சுவையூட்டப்பட்ட [illegible]ாகவும் வனிலா, ஸ்ரோபரி [illegible]பன சேர்க்கப்பட்டு முறையே வனிலாப்பால், ஸ்ரோபரிப்பால் என பைக்கற்றுகளில் விற்பனைக்கு விடப்படுகின்றன. இப்பாற்பொருட்களில் உடலுக்குத் தேவையான கொழுப்பு, புரதம், காபோவைதரேற்று, விற்றமின் கனியுப்புக்கள் பலவும் அடங்கியுள்ளதால் உடலுக்கு மிகவும் சிறந்தது. கடைகளில் உள்ள மற்றைய குளிர்பானங்களிலும் பார்க்கக் கூடிய சத்துடன் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

பால் முற்றாக தொற்று நீக்கப்பட்டு போத்தல்களில் அடைத்து விற்பனையாகின்றன. இவற்றை சாதாரண உஷ்ண நிலையில் சேமித்து வைத்து தேவையான போது குளிரூட்டிப்பாவிக்கலாம்.

வன்னி சுரபி பால் பதனிடும் நிலையம் மென் மேலும் வளர பொதுமக்களின் ஆதரவும் மிக முக்கியம். கால் நடை வளர்ப்போர் தங்கள் மாடுகளில் இருந்து பெறப்படுகின்ற பாலை வட்டக்கச்சி ஒரு[illegible]கிணைந்த மாதிரிப் பண்ணையில் இயங்கிக்கொண்டிருக்கும் வன்னி சுரபிக்கு விற்பனை செய்யலாம்.

**த.சிவலிங்கம்**


# இலக்கியப்போட்டி – 2005

**கப்டன் வானதியின் பதின்னான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகம் நடாத்தும் கவிதை,சிறுகதை,கட்டுரை,குறுநாவல் மற்றும் ஓவியப்போட்டிகள்.**

## போட்டி நிபந்தனைகள்

- படைப்புக்கள் தமிழ் தேசிய விடுதலை சமூகவிடுதலை என்பவற்றை கருப்பொருளாகக் கொண்டமைதல் வேண்டும்.
- கவிதைகள் மரபுக்கவிதைகளாகவோ, புதுக்கவிதைகளாகவோ அமையலாம். கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமல் அமையவேண்டும்.
- சிறுகதைகள் ஆறு பக்கங்களுக்கு(தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
- குறுநாவல்கள் 60 பக்கங்களுக்கு(தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
- கட்டுரைகள் பத்துப்பக்கங்களுக்கு(தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைவதோடு தரவுகள் உண்மையானதாக இருத்தல் வேண்டும்.
- ஓவியங்கள் தட்டச்சுத்தாளில் மட்டும் வரையப்படுதல்வேண்டும்.
- ஒருவர் எத்தனை படைப்புக்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- படைப்புக்கள் அனைத்தும் தட்டச்சுத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே தெளிவான கையெழுத்திலோ அல்லது தட்டச்சுப் பதித்தோ அனுப்புதல் வேண்டும்.
- அனுப்பும் படைப்புக்கள் வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையாகவோ வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டவையாகவோ இருத்தல் கூடாது.
- அனைத்துப்படைப்புக்களையும் தபால் மூலமே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- படைப்பாளிகளின் பெயர் முகவரி என்பவற்றை தெளிவாக தனித்தாளில் எழுதி இணைக்கப்படல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியைச்சேர்ந்தவர்களும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- நிபந்தனைகளுக்கு அமைவாக வந்துசேரும் படைப்புக்களே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- போட்டிகளில் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
**படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:**
**இலக்கியப்போட்டி - 2005.**
**கப்டன் வானதி வெளியீட்டகம்.**
**இல-61. கனகபுரம்.**
**கிளிநொச்சி.**

பரிசுகளை வெல்ல
இன்றே தயாராகுங்கள்:
போட்டி முடிவுத்திகதி
31-03-2005

(சி-11521)


(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமையைச் சிதைக்கும் புலிகள் சீறியெழுவார்கள் போர் மீளவும் ஆரம்பித்தால் புலிகளைச் சர்வதேச ரீதியாக வளைத்து நசுக்கலாம்- நசுக்க வேண்டும் என்பதே சிங்களத்தின் இலக்கு. இதன் மறுபக்கமாக அமைவது சமாதான காலத்தில் புலிகள் பெற்று வரும் சர்வதேச இராஜதந்திரப் பிரபல்யத்தை இல்லாதொழிப்பதாகும். யுத்தம் தொடங்குமாயின் புலிகளால் சர்வதேசப் பயணங்களை மேற்கொள்ளமுடியாது; கலந்துரையாடல்கள், சந்திப்புக்களை நடாத்த முடியாது. அவர்களது குரல் சபையேறாது எனவும் சிங்களம் கணக்குப்போடுகிறது. அப்படி ஒரு நிலை வந்தால் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிப் புலிகளை ஒருவழி பண்ணிவிடலாம் என மனப்பால் குடிப்பதன் விளைவே இன்றைய சீண்டல்கள்.

ஆனால், விதைத்தவன் வினையை அறுத்தே ஆக வேண்டுமென்பதுவும் துள்ளுகிற மாடு பொதி சுமப்பதுவும் தவிர்க்கவே முடியாத யதார்த்தங்கள். சிங்களதேசம் அந்த யதார்த்தத்தை நோக்கிப் பயணிக்க முயல்வதாகவே படுகிறது.

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் மோசடிகள் சொந்த உறவுகளாலேயே பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அவலம் பெருகிவருகிறது. கிருசாந்தியை கொன்றவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட பிறகுதான். சாரதா கோணேஸ்வரி, சிவமணி, ரீட்டா போன்றோர் மரணித்தனர். தண்டனைகளால் குற்றங்கள் குறைவதில்லை என்பதற்கு வேறென்ன சாட்சி. கர்ப்பப்பையின் மீது எழுப்பப்பட்டுள்ள கற்பு நெறிகூட இன்று ரெஸ்ற் ரியூப்பின் முன் சரணடைந்து விட்டது. இன்னும் மூன்றாம் உலக நாடுகளின் பெண்கள் விடுதலையை நோக்கி ஓரடிகூட எடுத்து வைக்கவில்லை. வெறும் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் மட்டும் மகளிர் சுதந்திரம் தங்கியிருக்கவில்லை. இது ஒரு வேலைத் திட்டம்.

பெண்களுக்கெதிரான மரபுகள் வழக்காறுகள் பழக்க வழக்கங்களைத் தகர்க்கும் திட்டம். ஆடை, அணிமணிகள், அடுத்தவர்களுடைய அரவணைப்பு, பாராட்டு இவற்றுள் புதைந்து போயிருக்கும் பெண்கள சலுகைகளையெல்லாம் தமது தவப்பேறாகக் கொண்டுவாழும் கிணற்றுத்தவளை வாழ்க்கையை எப்போது மறுத்துரைப் பார். அது நடக்கும் நடக்க வேண்டும் இதற்கு ஒவ்வொரு வரும் துணிந்து செயற்பட வேண்டும்.

(09 ஆம் [illegible]கத் தொடர்ச்சி)

குடும்பம் எனும் அலகின் மூலம்தான் பெண்ணுக்கு ஆதரவும், பாதுகாப்பும் கிடைக்கும் என்ற நிலையுண்டு. குடும்பம் அளிக்கும் பாதுகாப்பு அவளுக்குத் தேவையாக இருக்கின்றது. அதிலிருந்து விடுபடுகின்றபோது தொல்லைகள் ஏற்படுகின்றன. அநேக பெண்களுக்கு குடும்பம் என்ற அமைப்புக்குள் தான் உயிர் வாழ்வதற்கான அல்லது தனிப்பட்ட முன்னேற்றத்துக்கான வழி வகைகள் வகுக்கப்படவேண்டியதாய் இருக்கின்றது.

எனவே மனித நேயம், மனச்சாட்சி, மனிதர்களின் வாழ்வியற் கடமை என்பவற்றுக்கு மாறாக பால் அசமத்துவப் போக்குகளில் ஒரு தலைப்பட்சமான தீர்வுகளும், முன் மொழிதல்களும் தேவையற்றவை. உயிரியல் வேறுபாடு சமூக பொருளாதார வேறுபாட்டை உருவாக்கவில்லை. இதன் பின்னணியில் செயற்படுபவர்களே அவர்கள். ஆணாகவும் இருக்கலாம், பெண்ணா கவும் இருக்கலாம் அவர்களே பொறுப்பாளிகள். நான்கு பேர் இணைந்து முட்டாளாக்கும் பணிக்கு ஆளாகாமல், ஆண், பெண் எனும் ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஒளிக்காமல் மனித நேயம் பற்றிய விழிப்புணர்வுக்காய் விழித்து விடுங்கள்.

# வேண்டாப் பெண்டாட்டி கைபட்டாக்குற்றம்... கால்பட்டாக் குற்றம்




வணக்கம் எல்லாருக்கும்! என்ன இருந்தாலும் பாருங்கோ. நான் நியாயத்தைத்தான் கதைப்பன். கிளாலிப்பகுதியில எங்கட பிள்ளையள் ஆமியைச் சுட்டது சரியான அநியாயம். கடுமையான யுத்தநிறுத்த மீறல்! பின்ன என்னங்கோ போன வருசமும் உப்பிடியொரு சம்பவம் நடந்ததுக்குப்பிறகு அரசதரப்பால சொல்லப்பட்டதுதானே. அது ஆரோ மூளை பாதிச்ச ஆமிக்காரன் அத்துமீறிட்டான் எண்டு. இந்த முறையும் ஆமிக்காரற்றை விசாரணையளிலை அப்பிடி ஏதாவதுதான் கடைசியில கண்டுபிடிக்கப்படும். இப்படி நிலைமை இருக்க புத்திசுகமில்லாத மனநோயாளி ஆமியள் அத்துமீறி உள்நுழைஞ்சாங்கள் எண்டிறதுக் காக சுட்டுத் தள்ளிறதே ? பாவம் சந்திரிகா ! அவாவைச்சுத்தியும். அப்பிடி சுத்தியிருக்கிற ஆக்களுக்கு நடுவிலையும் எண்டு எல்லாமே உப்பிடி 'மேல பிசகின கேஸ்கள்' தானாம் ! அந்த மனி சியின்ர நிலைமையை நினைக்க பேக்கறுமமாக் கிடக்கிது. நாளைக்கு சிலநேரம் நப்பாசையில கண்டி வீதியை ஆமியின்ர ஒரு முழு டிவி சனே கடந்து வரப்பார்க்கும். இயக்கம் யுத்த நிறுத்தம் எண்டு விட்டி தெண்டால் வந்த வரைக்கும் அவையளுக்கு லாபம் தானே! அப்பிடியில்லாமல் இடையில வேண்டிக் கட்டினால் திரும்பி ஓடிப்போயிட்டு. மனநோய் வாய்ப்பட்ட சிப்பாய்கள் தான் அப்பிடிச் செய்திட்டினம் எண்டு சொல்லலாம். எடநாங்களும் நம்பித்தானே ஆகவேண்டும். ஏனெண்டால் ஆடிற விசராட்டங்களைப் பார்க்கேக்கிள்ளை. அப்பிடிப்பட்ட அவையின்ரை மனோநிலையைப் பற்றி அவையளே சொல்லிறதை ஒத்துக்கொள்ளத்தான் வேணும். ஆனாலும். குணமாகிற துக்கான விருப்பம் இருக்கிறதாவும் தெரியேல்லை. சுனாமிச்சாட்டில சும்மா கிடைச்சதுகளை ஈரானில கொட்டிக் குடுக்கிறதை விட்டிட்டு. கொஞ்சம் புளியெண்ணை வாங்கிக்குடுக்கலாம். இல்லாட்டி உப்பிடி வாங்கிக் கட்டத்தான் வேணும். இன்னுமொரு விசயம் பாருங்கோ! வீடுவாசல் வழியிலை அன்றாட அலுவல்களையும் கவனிக்காமல். ஒரு வேலை வெட்டியும் இல்லாமல் சும்மா 'லேடீஸ் கிளப' எண்டு ஷோக் காட்டிக்கொண்டு திரியிற நோணாக்களைப்போல 'பிள்ளை பிடிக்கிறாங்கள் ! பிள்ளை பிடிக்கிறாங்கள்!' எண்டு அறிக்கை விட்டுக்கொண்டு திரியிற சர்வ தேசக்காரர்கள் (திருகோணமலையில உதவி அரசாங்க அதிபர்மார் நல்ல முன்மாதிரியா நிலைமையை எடுத்துக்கொண்டு போயிருக்கினம்). புத்தி பேதலிச்சு. சுயபிரக்ஞை இல்லாமலுள்ள ஆக்களை ராணுவத்தில வைச்சிருக்கிற சிறிலங்கா அரசை கடுமையாகக் கண்டிக்க வேணுமல்லோ ? என்ன சொல்லிறியள் ?...ஆ... 'அப்பிடிப்பட்ட ஆக்களை வீட்டுக்கு அனுப்பினால் சிறிலங்கா நாடாளுமன்றம் வெளிச்சிடுமோ'..உங்கட லொள்ளு வேற! நீங்கள் சொல்லிறதிலையும் நியாயம் இருக்கத்தான் செய்யிது. ஏதோ நடக்கட்டும். பார்ப்பம் !

ஜாதிக ஹெல உறுமய ஆயுதங்கள் எல்லாத்தையும் இயக்கத்தை சார்க் நாடுகளிட்டை ஒப்படைக்கச்சொல்லிச் சொல்லியிருக்கு. இயக்கம் அப்பிடிச் செய் யாது. ஆனால் எனக்கு ஒரேயொரு ஆயுதத்தை அந்தப் பிக்குவிட்டை ஒப்படைக்க விருப்பம். கிளிப் கழட்டின கைக்குண்டு தானுங்கோ. அவர் கேட்டபடியே ஒப்படைச்சுப்போட்டு. ஆசீர்வாதம் வாங்கிறமாதிரி விழுந்து படுத்திடோணும். உதைக் கேட்டிட்டு நீங்களும் எல்லாரும் ஒப்படைக்க வெளிக்கிட்டு விடுவியள். பொறுங்கோ! எதுக்கும் கொஞ்சக்காலம் விட்டுப் பார்ப்பம்.

உலகத்திலையே இனிமேல் இல்லையெண்ட அறிவாளி ஆரெண்டு கேட்டால். நீங்கள் என்னசொல்லுவியள்? பார்த்தீங்களே ஒரு கேள்வியில மடக்கீட்டன் ! ஆனால் எனக்கும் பதில் போனகிழமைதான் தெரியவந்திச்சிது. கொழும்பில ஆளும் கூட்டணிக்கு ஆதரவளிச்சுக்கொண்டு வந்த இ.தொ.கா. திடீரெண்டு பின்வாங்கின செயலைத்தான் சொல்லிறன். அவையின்ர அறிவொளிதான் என்னோட இருட்டுப்புத்திக்கு விளக்கேத்தி வைச்சிது. எட சுனாமியாலை பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்திலை கூட அவசரகாலத் தடைச்சட்டம் நீடிக்கப்படிறதுக்கு அமோகமாக ஆதரவு குடுத்த விசுவாசங்களுக்கு படாரெண்டு என்ன நடந்திச்செண்டு யோசிச்சுப்பார்த்தன். இரண்டு விசயம் தட்டுப்படுகிது : எல்லாம் மொத்தமாகக் கவிண்டு புதுத்தேர்தல் வருகிற மட்டும் பார்த்துக் கொண்டிராமல். இப்பையே வெட்டினால் ஐ.தே.கட்சியோட கொஞ்சமாவது கௌரவத்தோட (?) பேரம் பேசலாம் எண்டிறது ஒண்டு. மற்றது அறுதிப்பெரும்பான்மை இருக்கிறதாலை தமிழருக்கு உருப்படியான தீர்வு ஏதாச்சையும் குடுக்கவேண்டின நிர்ப்பந்தம் வந்தாலுமெண்டு. தற்காலிகமா புதுச்சாட்டு சொல்லிறதுக்காக நோணா தான் 'சொல்லேக்கிள்ளை வாங்கோ !' எண்டு கழரச்சொன்னதாகவும் இருக்கலாம். வெளியால சொல்லிப் போடாதிங்கோ. நான் சொன்னதெண்டு. இன்னுமொருவிசயம்: பக்கத்திலை இருந்து பெரீசா படி அளக்கிற வையின்ரை இலங்கைக்கான துரும்புச் சீட்டாகவும் இருக்கலாம். இருக்கும். இருக்கிது... உஷ்... ! என்னவோ நிலைமையளுக்கேத்த மாதிரி உழைக்கத்தெரிஞ்ச 'கில்லாடி அறிவாளியளைப் பற்றி நீங்கள் அறிஞ்சிட்டீங்கள். ஆனா நான் இப்பிடி எல்லாம கற்பனை செய்ய உவங்கள் அம்மா வெருட்டின வெருட்டோட அம்மாவுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கப்போறாங்களாம். உதேமாதிரித்டைச்சட்ட நீடிப்புக்கு ஆதரவு குடுத்த இன்னுமொரு கூட்டணிக் கட்சியில அங்கம் வகிக்கிற சிறுபான்மையினத்தலைவர் தங்களை ஒருதரும் கவனிக்கினமில்லை எண்டு கவலையாய்க் கண்ணீர் விடுகிறார். அடுத்த தேர்தலெண்டு வந்தால் அம்போவான தன்ர நிலைமையை ஆராவது சட்டை செய்யுங்கோ எண்டு புலம்பிறார். என்னவோ தெரியேல்லை. சம்பந்தம் இல்லாமல் ஒரு விசயம் என்ர ஞாபகத்துக்கு வருகிது. நீங்களெல்லாரும் நல்லா இந்தியப்படங்கள் பார்க்கிறனீங்களெண்டு எனக்குத் தெரியும். அதிலை பாருங்கோ. கவர்ச்சி நடிகையள் எண்டு கனபேர் வந்து போறவையெல்லோ ? அவையளில ஒரேயடியா ஓவராக நடிக்கிற ஆக்களை நாலஞ்சு படங்களுக்குப் பிறகு இயக்குநர்மார் கைவிட்டு விடுவினம். ஆனால் கொஞ்சம் கொஞ்சம் அப்பிடி இப்பிடி நடிக்கிற ஆக்கள் கூடக் காலத்துக்கு சமாளிப்பினம். குடுக்கிறதுக்கெண்டு ஏதாவது மிச்சம்மீதி இருந்தால்தானே எடுக்கிறதுக்கான ஆர்வமும் இருக்கும். ஐயோ ! ஏதோ விசயம் கதைச்சுக் கொண்டிருக்கேக்கிள்ளை இடையில சினிமாக்கதை வந்து குழப்பீட்டிது.

என்னவோ பிள்ளையள் ! அதையிதையெண்டு ஏதோ நாலை வாசிச்சுப்போட்டு. உங்களுக்கு கொஞ்சத்தை நான் எழுதினாலும் உலகநாட்டு விசயங்கள் கனக்க எனக்கு விளங்கிறேல்லைப் பாருங்கோ! ஈராக் 'அணு குண்டு வைச்சிருக்கிது' எண்டிறதுக்கான வலுவான ஆதாரம் இருக்கெண்டு முதல்லை சொல்லுப்பட்டிச்சு. பேந்து 'அணு குண்டைத் தயாரிக்கிற வல்லமை இருக்கிது' எண்டிச்சினம். பேந்து 'அணுகுண்டைத் தயாரிக்கிற வல்லமையை அடையிறதுக்கான திட்டம் இருந்தது' எண்டாகி. கடைசியில கைக்குண்டாகி காணாமலும் போயீட்டிது. இதெல்லாம் நடந்து கொண்டிருக்கேக்கிள்ளை 'இஞ்சே பாருங்கோ ! அணுகுண்டு தயாரிக்கிறன்' எண்டு சொன்ன வடகொரியாவை ஒருதரும் ஒண்டும் சொல்லேல்லை. அப்பிடி சொல்லப்பட்ட காரணமெல்லாம் புஸ்வாணம். ஆனாப பிறகு 'ஜனநாயகத்தை அமுல் படுத்தல்' எண்டெல்லாம் கனக்கச் சொல்லுப்படுகிது. ஆனால் அதே ஆக்கள் உட்பட உலகத்தின்ர பெரீய்ய சனநாயக நாடெண்டு சொல்லப்படுகிற இந்தியாவும் சேர்ந்து. மக்களாட்சியை மறுதலிச்சு தான் தோன்றித்தனமாச் செயற்படுகிற மன்னராட்சிக்கு ஆயுத. நிதி. அரசியல் உதவியளை தாராளமா வழங்கி வருகினம். எந்த நாட்டைச் சொல்லிறனெண்டு விளங்கிதோ ? 'ரெலிபோன் மணி போல சிரிக்கிற' அவாவைத் தெரியுமோ உங்களுக்கு ? (எட உந்த மனுசனுக்கு உந்த வயசில உதுகளெல்லாம் தெரிஞ்சிருக்கெண்டு யோசியாங்கோ !) அவாவின்ரை சொந்த நாடு. ஓமோம் நேபாளம்தான் ! எண்ணெய் இருக்கிற நாடுகளுக்கு கொடுக்கப்பார்க்கிற சனநாயகத்தில கொஞ்சமாவது நேபாளத்துக்கும்போக விடலாமெல்லே! லெபனானில அங்கை நிலை கொண்டிருக்கிற சிரியப்படைகளை சிரியா திருப்பி எடுக்கோணுமெண்டு வற்புறுத்தின உள்ளூர் அரசியல்வாதி ஒருத்தர் கார்க்குண்டுவெடிப்பு மூலமாகக் கொல்லப்பட்டிட்டார். இதைத் தொடர்ந்து ஐ.நா. ஐரிஷ் அதிகாரிகளைக்கொண்ட விசாரணைக்குழு ஒண்டை அங்கை அனுப்பி விசாரிக்கப் போகுது. உப்பிடியெண்டால் இஞ்சினைக்கிள்ளை எத்தினையை எண்டு விசாரிக்கலாம் ! வேண்டாத சிரியா.... ஐயய்யோ... 'வேண்டாப்பெண்டாட்டி கை தொட்டாக் குற்றம். கால் தொட்டாக்குற்றம' எண்டிறது மாதிரி. அதுவும் சிலநேரம் பெண்டாட்டிக்கு ஒருக்கால் விளாசவேணும் மாதிரியிருந்தால். புருசன்காரன் தானே ஒருக்கால் தொட்டுப்போட்டும் குற்றம் சொல்லலாம். என்னவோங்கோ உந்த உலக நடப்புகள் ஒரு ஆக்கினையுமா விளங்குதில்லை எனக்கு ! பொதுநியதி எண்டொண்டு இல்லாமல். எல்லாமே முன்னுக்குப்பின் முரணா இருக்கிது.

மற்றதொரு விசயம். சூடானில இருக்கிற டார்ஃபுர் அகதிகளுக்கு 300 மில்லியன் டொலர் உதவிசெய்யிறதா பெரியநாடுகள் வாக்களிச்சுக் காலமும் கடந்திட்டிது. ஆனால் கையில கிடைச்சது 3 மில்லியன் மட்டும் தானெண்டு ஐ.நா. குறை சொல்லிக்கொண்டு நிக்கிது. இலங்கையிலையும் வெளிநாட்டுக் கணிப்பு ஒண்டின்படி 1000இற்கும் குறையாத உதவி(?) நிறுவனங்கள் இருக்கிதாம். எட ஒவ்வொரு நிறுவனமும் 100 குடும்பத்துக்கு உதவி செய்தாலே சுனாமி அழிவு இருக்கிற இடம் தெரியாமல் போயிடுமே எண்டு அங்கலாய்ச்சுப்போடாதிங்கோ ! ஏ9இல என்ர குந்து தாண்டிக் கொஞ்சத்தூரம் போக ஒரு பக்கத்தில உண்மையிலையே பாதிக்கப்பட்ட (சுனாமியால் அல்ல) ஆக்களுக்கு உதவிற உள்நாட்டு தமிழ் உதவிநிறுவனம் ஒண்டு. ஒரு வீட்டை தங்கட தேவைக்காக வாடகைக்கு எடுத்து. கொஞ்சப்பேரை அங்கை தங்க வைச்சிருந்தவை. இப்ப திடீரெண்டு 'சர்வதேச உபத்திரவ நிறுவனம்' ஒண்டு தங்கட டொலருகளைக்காட்டி. அந்த இடத்தை அப்பிடியே தங்களுக்கு எடுத்திட்டிது. வளவுச்சொந்தக்காரர்கள் நல்ல சனங்கள். இருந்தாலும் பாவம். என்ன கஷ்டமோ? அவசரமோ ? பெரிய தொகைப்பக்கம் ஓமெண்டிட்டினம். இவ்வளவு நாளும் அங்கை ஆதரவு கொடுக்கப்பட்டு வாழ்ந்து வந்த ஆக்களுக்கு. இப்ப அந்த உள்ளூர் நிறுவனம் வேற வீடு தேடிது. வெளிநாட்டு நிறுவனக்காரர் அதுக்குள்ளை கட்டடம் எழுப்பினம். உந்த நாரதர் வேலையளுக்கு முன்னால கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தால் உப்பிடிச்செய்திருக்க மாட்டினம். கட்டடம் கட்டிமுடிய இந்த வருசம் கழிஞ்சிடும். ஆனால். 'சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர உதவித்திட்டம்' எண்டு ஏதாவதைச் சொல்லிக்கொண்டு. காத்து வாங்கிக்கொண்டு திரிவினம். அண்டைக்குப்பார்த்தன் . . . கிளிநொச்சியில இருந்து முல்லைத்தீவுக்கு ஐ.நா. பிக்அப் ஒண்டு சின்னனா ஒரு தண்ணித்தாங்கியை ஏத்திக்கொண்டு போச்சிது. அஞ்சு நிமிசத்தால இன்னுமொண்டு இரண்டு மெத்தையைக் கட்டிக்கொண்டு அதே திசையில போச்சிது. எட என்னட்டைச் சொல்லியிருந்தால் சைக்கிள்-கரியலிலை கட்டிக் கொண்டு போய்க் குடுத்திருப்பன். அதை விட்டிட்டு இரண்டு வாகனம் மினைக்கெட்டு உவ்வளவு தூரம் ! அணை கட்டிறதுக்கு அணில் போல எண்டாலும். காலத்தால் செய்யும் உதவியை நாங்கள் மதிச்சு. நன்றி தெரிவிக்கோணும். ஆனால். அதேநேரம் அணிலும் அணிலாவே இருக்கிறதை விட்டிட்டு. அளவு மீறக்கூடாது. அதாவது செய்யிறதுக்கு மேலால கதை விடக்கூடாது. சனத்தின்ரை கஷடங்களைத் தீர்க்கிறதுக்கு முன்னுரிமை குடுக்கோணும் எண்டிறன். நீங்கள் என்ன சொல்லிறியள் ? அப்பநான் வாறன். அடுத்த கிழமை சந்திப்பம். சாப்பிட்டுக் கீப்பிட்டுச் சந்தோசமா இருங்கோ !



## சந்தேக மணியத்தார்...!

செய்யவேண்டியவேலை எவ்வளவோ இருக்கசெய்யத் தேவையில்லாதவேலையில எல்லாம் ஈடுபடத்தொடங்கினம்.

எத்தனை நாளைக்குத் தான் ஒரு "த்ரில்" இல்லாத வேலையைச் செய்யிறதெண்டு யோசிச்சுப்போட்டினம் போலக் கிடக்கு.

அதுக்காக எங்களோடை விளையாடக்கூடாது. அதாவது எங்கட பிள்ளையலோட விளையாடக்கூடாது.

அட நான் எனக்கு வந்த கோபத்தில திட்டிக்கொண்டு போறேன் அல்லாமல் யார் என்ன விசயம் எண்டெல்லாம் விபரமாக சொன்னால் தானே தெரியும்.

அடஉவையள் இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுக்காரரைத்தான் சொல்லுறன்.

திடீரென பொலிசுக்காரன் விளையாட்டெல்லாம் விடப்பாக்கினம்.

வவுனியாவில் அரசியல் துறைச் செயலகத்திற்குள்ள அத்துமீறி நுழைந்து அடாவடித்தனம் புரிஞ்சு இருக்கினம்.

இதுவொரு அரசியல் செயற்பாட்டு மையம். அங்க எப்பிடி நடந்து கொள்ள வேணுமெண்டு ஒரு நாகரிகம் இருக்கு.

அதைவிட்டுவிட்டு ஏதோ களவுபிடிக்கப் போண பொலிசுக்காரன் போல நடந்து இருக்கினம்.

முதல்ல கண்காணிப்புக் குழுக்காரர் ஒண்ட நல்லாப்புரிஞ்சு கொள்ளோணும்.

தொடர்ச்சியாக கண்காணிப்புக்குழு எங்களுக்கெதிரான சில ஆமியிண்ட காரியங்களில நழுவல் போக்கை கடைபிடிச்சுக் கொண்டு ஆமிக்காரர் சொன்னது, பொலிசுக்காரன் சொன்னது எண்டு எங்கட அரசியல் அலுவலகத்துக்கு நுழையினம்.

அப்படியெண்டால் இதே எடுப்பும், இதே துடிப்பும் அங்காலயும் காட்டவேணும் இல்லாட்டி இவையிண்ட நடவடிக்கையில எங்களுக்குச் சந்தேகம்வரும்.

கண்காணிப்புக் குழுக்காரருக்கு வேணுமெண்டால் யாரையும் திருப்திப்படுத்தவேண்டிய தேவையிருக்கலாம். ஆனால், எங்களுக்கு யாரையும் திருப்திப்படுத்த வேண்டிய தேவையில்லை. இதை கண்காணிப்புக்குழுக்காரர் சரியாப் புரிஞ்சுகொள்ளோணும்.

அதுசரி எனக்கொரு சந்தேகம் வந்திட்டுது. கிழக்கில நடந்த தாக்குதல்களின்போது எங்கட பேப்பர்க்கார, ரேடியோக்கார தம்பிமார் கண்காணிப்புக்குழுக்காரரிட்ட கேள்விகளைக் கேட்கக்குள்ள "நாங்கள் ஒரு அதிகாரம்" இல்லாதவர்கள். எங்களால் எதுவும் செய்ய முடியாது எண்டவை....

அப்படியெண்டால் இப்ப அதிகாரம் வந்திட்டுது போல அப்ப இனி இவையள் விடுற அறிக்கைகளிலும் நடவடிக்கைகளிலும் சூடு பறக்கப் போகுதோ?

ஆங்..... கத்தரிக்காய் அட்டகாசமா அறிக்கை எழுதுவினம் அதாவது அரசாங்கத்து நோக்காமல் அதிலமட்டும் அதிகாரம்

அச்சா... அச்சா



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 07**


**பகுதி -37**

"இது சரியா வேலை செய்யுதில்லை" என்றான் "நான் கவனித்தனான்" என்றேன் நான். மணல் பெட்டியின் விளிம்பில் இருந்து மணலை உள்ளே தட்டிவிட்டான். என்னைப் பார்த்தபடி அவன் அமர்ந்திருந்தான். பின் தனக்குத்தானே பேசிக்கொண்டே சிதறிக் கிடந்த மிருகங்களை எடுக்கத் தொடங்கினான். "சேவல் கூவுது... கொக்கரக்கோ" என்றான். "கோழி முட்டையிட சேவல் கூவுது. இரண்டு வாத்துகளும் நீந்துகின்றன. ஓ! இஞ்ச பாருங்கோ இவைக்கு ஒரு குளம் இருக்குது. அவைக்கு சொந்தமான சின்னக்குளம். சின்ன வாத்து 'குவாக்... குவாக்' எண்டுது. பெரிய வாத்தும் 'குவாக்...குவாக்' எண்டுது. அவை இரண்டும் தங்கட பாதுகாப்பான சின்னக்குளத்தில ஒண்டா நீந்துகினம். இஞ்ச இரண்டு முயல் இருக்குது. இரண்டு நாய், இரண்டு குதிரை, இரண்டு பூனை எல்லாம் இரண்டு இரண்டாய் இருக்கு. இங்க தனியா ஒண்டும் இல்லை.

பின் கையை நீண்டி, வழமையாகவே போர்வீரர் பொம்மைகளை வைக்கும் வெறுமையான பெட்டியை எடுத்தான். "சண்டைக்கு போற ஆட்களை இதுக்குள்ளதான் வைக்கிறது. அதுக்கு ஒரு மூடியும் இருக்கு சரியான இறுக்கமான மூடி" பொம்மை வீட்டைக் குனிந்து பார்க்க வசதியாக மணல் பெட்டியின் விளிம்பில் மண்டியிட்டு அமர்ந்து கைகளையும் ஊன்றிக்கொண்டு, வீட்டைத் திருப்பித் திருப்பிப் பார்வையிட்டான். "இந்தவீட்டில் ஆட்கள் ஒருத்தரும் இல்ல ஒரு பூனையும் ஒரு முயலும் மட்டும்தான். பள்ளிக்கூடத்தில நாங்கள் வைச்சிருக்கிற முயலுக்கு 'மாஸ்மலோ'எண்டு பேர்" என்று சொல்லிக்கொண்டே என்னைப் பார்த்தான். "அங்க இருக்கிற ஒரு அறையில, ஒரு மூலையில் பெரிய கூடொன்றில அத வைச்சிருக்கிறம். சிலவேளை அது துள்ளிப் பாய்ஞ்சு விளையாடவும் கீழஇருந்து யோசிக்கவும் எண்டு கொஞ்சநேரம் திறந்து விடுறணாங்கள்" "அப்ப.. இந்த பூனையும் முயலும் இந்த வீட்டில சேர்ந்து இருக்கினமா?" என்றநான் "முயலின்ர பேர் மாஸ்மலோ வா?" என்று கேட்டேன்.

"பள்ளிக்கூட முயலின்ர பேர்" டிப்ஸ் என்னை இடைமறித்துச் சொன்னான். " இந்த வீட்டில பூனையோட இருக்கிற முயல்ட பேர் இல்ல. எங்கட பள்ளிக்கூடத்தில ஒரு முயல் வைச்சிருக்கிறம். அதுக்குத்தான் மாஸ்மலோ எண்டு பேர். அது பெரிய... வெள்ள... முயல்.... இதப் போலத்தான்... இந்த பொம்மை முயலைப் போலத்தான். அதுதான் எங்கட பள்ளிக்கூட முயல ஞாபகப்படுத்திவிட்டது."

"ஆ...அப்ப உங்கட செல்ல முயல் பள்ளிக் கூடத்தில இருக்கு" என்றேன்.



கூட்டில போட்ட முயல்" என்று என்னைத் திருத்திய டிப்ஸ் "சிலவேளையில அதத்திறந்து விடுறணாங்கள். சிலவேளைகளில ஒரு தரும் பார்த்துக்கொண்டிருக்காட்டி நான் அத திறந்து விடுறனான்" என்றான்.

பள்ளிக் கூடத்தைப் பற்றி டிப்ஸ் குறிப்பிட்டது இதுதான் முதல் தடவை. பாடசாலையில் இப்போது எப்படி நடந்துகொள்கிறான் என்று யோசித்தேன். நான் போய் அவனை சந்தித்தபோது நடந்துகொண்டது போலவே இப்போதும் நடந்துகொள்கிறானா? விளையாட்டு வழிச்சிகிச்சை அமர்வுகளுக்கு டிப்ஸின் தாய். ஒப்புக்கொண்டபோதே அதை டிப்ஸின் பாடசாலைக்கு தெரிவித்திருந்தேன். டிப்ஸின் தாயார் அவனை மையத்துக்கு கொண்டு வரும் நாட்களில் மட்டும் டிப்ஸை பார்வையிடுவேன் என்றுதலைமைஆசிரியைக்கு தெரிவித்திருந்தேன். இந்த விளையாட்டு சிகிச்சை அமர்வுகளுக்கான டிப்ஸின் பிரதி பலிப்புகள் எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியாது என்பதை நேர்மையுடன் அவருக்கு கூறியிருந்தேன். இந்த அமர்வுகள் உதவிகரமானவையாக இருக்குமா என்பதும் எனக்கு தெரியாது என்றும் கூறியிருந்தேன். பாடசாலை நிர்வாகத்தினர் இன்னொரு கலந்துரையாடலை விரும்பினால் அல்லது நாங்கள் ஆராய வேண்டிய அவதானிப்புகள் அறிக்கைகள், பிரச்சினைகள் இருந்தால் பாடசாலையே என்னோடு தொடர்புகொள்ளவேண்டும் என்றும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தோம். சிகிச்சையில் நான் நேரடியாக தொடர்பு பட்டிருப்பதால், எனது விசாரணைகளுக்கான பதிலை அவர்கள் தருவதை விட நான் கேளாமலே, அவனது நடத்தை தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது அதிகபொருளுள்ளதாக இருக்கும் என்று நான் கருதியதாலேயே இவ்வாறான ஏற்பாட்டைச்செய்து கொண்டிருந்தேன். டிப்ஸின் தாயார் அவனைக் கூட்டி வந்தது பற்றி பாடசாலைக்கு நான் அறிவிக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை சிகிச்சை பற்றிய விடயங்களை, வேறு யாருக்காவது தெரிவிப்ப தாயின் அதை அந்தப் பிள்ளையின் பெற்றோர் தான் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். பெற்றோர் அறியாமல் அல்லது அவர்களது எழுத்து மூலமான ஒப்பு தலின்றி, வேறு யாருக்கும் அல்லது வேறு முகவரமைப்புகளுக்கு எந்த அறிக்கையும் கொடுக்கப்படமாட்டாது.




பாடசாலையில் இருக்கும் முயல்பற்றி டிப்ஸ் குறிப்பிட்டது என் ஆர்வத்தை ஈர்த்திருந்தது பாடசாலை பிள்ளைகளின் குழுவில் செயல் முனைப்பான அல்லது பங்கெடுக்கும் உறுப்பினாக டிப்ஸ் இல்லாதபோதும், அவன் அறைகளின் வளிம்புகள் நெடுக ஊர்ந்து கொண்டிருந்த வேளைகளில் அங்கு நடப்பவற்றை அவதானித்து, சிந்தனை செய்து முடிவுகளை மேற்கொண்டிருக்கிறான் என்பதை அது எடுத்துக் காட்டுவதாக இருந்தது.பாடசாலை யிலும் வீட்டிலும் அவன் எப்படி நடந்து கொள்கிறான் என்று அறிவது ஆர்வமூட்டுவதாக இருக்கலாம். டிப்ஸை அறிந்தவர்களுக்கு விளையாட்டறையில் அவன் என்ன செய்கிறான் என்பதை அறிவது அவர்களுக்கு ஆர்வமூட்டுவ தாகவும் இருக்கலாம். எனினும் அவை இப்போது நான் கைக்கொண்டிருக்கும் வழி முறைகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏனென்றால் தன்னுடைய உலகம் தன்னுடைய உறவுகள், தன்னுடைய உணர்வுகள் அவனுள் உருவாகிக்கொண்டிருக்குமஎண்ணக் கருக்கள், அவனது முடிவுகள், கணிப்புகள், பொருள் கொள்ளுதல்கள் பற்றி டிப்ஸ் தற்போது கொண்டிருக்கும் புலன் உணர்வுபற்றியே நான் அதிக அக்கறை கொண்டிருந்தேன். கூட்டில் இருக்கும் முயலை திறந்து விடுவதை என்னால் கற்பனை செய்து பார்க்கக்கூடியதாகவிருந்தது. அந்த செயற்பாட்டை தூண்டிவிடும் உணர்வை என்னால் புரிந்துகொள்ளமுடிந்தது.

(தொடரும்....)





எந்நேரத்திலும் உங்கள் தேவைகளை இனம் கண்டு நிறைவு செய்து தரும்
உங்கள் பாண்டியனின் இன்னுமொருபேரன் பன்னெறி ஆற்றல் கொண்டவனாக மாறிவிட்டான்.
ஏன் தெரியுமா?

கடந்த காலங்களில் ஊர்தி உதிரிகளை மட்டும் வழங்கி வந்தவன் இனி...

**கனரக ஊர்திகளின் உதிரிகளை உடன் தருவான்**
**(டோசர், வக்கோ, JCB, மோட்டர் கிறைண்டர்)**

**ஆலைப்பொறிகளின் உதிரிகளை உடன் தருவான்**

**புத்தம் புதிய உழுபொறிகள், இரு சில்லு உழுபொறிகள் என்பனவற்றை உடன் தருவான்**

**அம்மட்டோ!!!**
**கண்ணிமைக்கும் நேரத்தில் ஆலைப்பொறிகளை உடன் பெற்றுத்தருவான்**

**இந்தப்பேரன் வேறு யாருமல்லன்**




**பாண்டியன் ஊர்தி உதிரிகள் விற்பனைப்பகுதி**

ஏ-9 நெடுஞ்சாலை "குறைந்த பணச்செலவு மிகுந்த மனநிறைவு" கிளிநொச்சி

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

*பாவலா!*

*சுனாமிக்கும் சிறிலங்கா ஆமிக்கும் என்ன வித்தியாசம்?*

*ஞா.அழகன்*
புதுக்குடியிருப்பு.

அது பாரபட்சமின்றி எல்லோரையும் எல்லாவற்றையும் தாக்கி அழிக்கும். இது தமிழர்களையும் தமிழர்பிரதேசங்களையும் மட்டும் குறிவைத்துத் தாக்கி அழிக்கும்.

*பாவலா!*

*சினிமா இல்லையேல் சீவியம் இல்லை. டைட்டானிக் படம் பார்த்தாச்சு எப்போ சுனாமிப் படம் என எதிர்பார்ப்பவர்கள் பற்றி உமது சிந்தனை?*

*ஆ.லூசியாமேரி*
*புளியங்குளம்.*

*அவலங்களில் ரசனை காணும் சினி "மா" மாக்கள்.*

*பாவலா!*

*தன்னலம் கருதாது மக்களின் நலன் கருதி நாட்டின் தேவையைக் கருத்தில்... கொண்டு சேவை செய்யும்*



*அரசியல்வாதிகளுக்கும் அதே வேளை சுயலாபம் தேடி அரசியல் வேடம் காட்டும் அரசியல் வாதிகளுக்கும் தாங்கள் கூறும் கருத்து என்ன?*

யு.ராஜா,
தேவிபுரம்.

அவர்களால் நாடு வாழும் உயரும்... இவர்களால் அவர்களின் வீடு மட்டுமே வாழும்... உயரும் தன்னலமற்ற அவர்களுக்காக தலை வணங்குகின்றேன்:- தன்னலம்மிக்க உங்களை நினைத்துத் தலைகுனிகிறேன்...!

*பாவலா!*

*எனக்கோர் சின்னப் பிரச்சினை என்னவெனில் எல்லாரும் உங்களிடம் கடிதம் மூலம்தான் கேள்வி கேட்பார்கள் ஆனால், என்னிடம் நேரடியாகக் கேள்வி கேட்டு என்னை நிலை தடுமாறச் செய்கின்றார்கள். இதில் இருந்து தப்பிக்கவழி சொல்லுங்கள்?*

*அ.பாவலன்*
தேவிபுரம்.

*நீங்கள் நாவலனாக மாறுங்கள்.*

*பாவலா!*

*பெண்கள் இந்தப் பூமியில் பூஜிக்கப்பட வேண்டியவர்கள் ஆனால் இவர்களைப் பற்றி இழிவாகக் கூறும் சில ஆண்களை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*செ.விஜியா*
*கிளிநொச்சி.*

*காதலிக்கத் தொடங்கினால் திருந்திவிடுவார்கள்.*

*கல்யாணம் முடிந்ததும் அடங்கிவிடுவார்கள்.*

*பாவலா!*

*துறவியா, தியாகியா மேலானவன்?*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்.*

*தியாகிதான்... அவன் தான் மற்றவர்களுக்காக வாழ்பவன்.*

*பாவலா!*

*மனம் அலைபாயுதே என்ன செய்யலாம்?*

*தயாபரன்,*
*ஸ்கந்தபுரம்.*

சுனாமியாக மாறாவிட்டால் போதும்!

*பாவலா?*

*இடது சாரி- வலதுசாரி விளங்கவே இல்லை?*

*பகீரதி,*
*மல்லாவி.*

எல்லோருமே வாய்ப்புக் கிடைத்தால் டம்பாச் சாரிகள் தான்.

*பாவலா?*

*எழுத்தாளர்கள் பெரும்பாலும் ஏழையாகவே இருக்கிறார்கள் ஏன்?*

*கோகிலவானி,*
*கிளிநொச்சி.*

எழுத்தறிவை மதிக்காத சமூகத்தில் எழுத்தாளன் ஏழைதான்...!

*பாவலா!*

*திறமையை வெளிப்படுத்துவதற்குத் திறமை தேவையா?*

*சுபாசினி,*
*புளியங்குளம்.*

சந்தர்ப்பம் வரும்வரை காத்திருக்கும் 'பொறுமை'யும் தேவை!

*பாவலா!*

*கடந்த மூன்றாண்டு இலாபமா நட்டமா?*

*ராணி,*
*வவுனியா.*

கணக்கு இன்னும் முடியவில்லை

*பாவலா!*

*இன்னும் பல வடக்கு கிழக்கு கிராமங்களுக்கு சமாதானம் சென்றடையவில்லை அது பற்றி உமது கருத்து?*

*நிரஞ்சன்,*
புதுக்குடியிருப்பு.

நிவாரண தானமே சென்றடைவதாக இல்லை நீர் சமாதானத்தை பற்றி கவலைப்படுகிறீரே...!

*பாவலா!*

*அமெரிக்காவும்- அல்கெய்தாவும் சாதிக்க நினைப்பது எதனை?*

*குமார்,*
*வட்டக்கச்சி.*

மனித குலத்திற்கு யார் அதிகம் அழிவை ஏற்படுத்துவது என்பதில் சாதனை நிலை நாட்டுவதை...




"என்னய்யா நல்லா மெலிஞ்சு போறியள்"

"என்ன செய்யிற மனிசனுக்குத் துன்பம் வந்தா எப்பன் மெலியத்தான செய்யும்"

"எட துன்பம்? உங்களுக்கு? நம்பேலாமக் கிடக்கு"

'வீட்டில சுகமில்ல இந்தமுறை கொஞ்சம் கடுமை பண்ணிப் போட்டுது. பின்னக் கவலைதான்..."

அய்யா அந்த நாளயில நீங்கள் தெருவில வந்தாலே மற்றவை ஒதுங்கி நிப்பம். வாத்தியார் வாராரெண்டா அப்படி அமைதி. அழுதபிள்ளை வாய் மூடும்.

"ம்....அதொரு காலந்தான் தம்பி. ஆனா இப்ப மக்களையுங் கட்டிக்குடுத்து மருமக்கள் பேரப்பிள்ளையளெண்டும் குடும்பம் பெருகிற்றுது. இனி எங்கட காலம் போட்டுது. அய்யா இன்னும் நூறுவருசம் வாழவேணும் இண்டைக்கும் அண்டைக்குப் பார்த்த மாதிரி இருக்கிறியள். து...து....து.... கண்படப்போகுது.

இல்லைத்தம்பி அவவுக்கு வருத்தம் கடுமையெண்ண நான் பயந்து போனன். வாழ்நாள் முழுக்க அதிகாரங்காட்டி வாழ்ந்திட்டன்.

ஹ . . . ஹ . . . வாத்திவேலையெண்டா பிள்ளையளோட கொஞ்சம் மிடாங்காத்தானே நிக்கவேணும். பல்லைக்காட்டிப் பழகிப்போட்டு இந்த நாளைய வாத்திமார் படுறபாடு தெரியாதே அதுதான் இப்ப என்ன அதிகாரஞ் சொல்லக்கூடிய ஒரே இடம் என்ன பெண்சாதிதான். அவ இல்லையெண்டா நான் வெறுங்கூடுதான். அந்த வாழ்க்கை என்னத்துக்கு ஒரு நாளெண்டாலும் நான் முந்திப் போயிரவேணும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-109



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-109

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -108



**ம.கலைநிலா,**
**ஐங்கரன்படமாடம்,**
**முல்லைவீதி,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*ஊனம் எங்கள் உடலில் மட்டுமே*
*உள்ளத்தில் அல்ல- மன உறுதியுடன்*
*உழைக்கும் கரங்களை பயன்படுத்தி*
*உயர்ச்சியடைவோம் வா நண்பா.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இரண்டு காலிருந்தால்*
*ஒன்றை உனக்குத் தரலாம் - இருவரும்*
*இயலாது என்பது தெரியாமல்*
*இணைந்தே நடப்போம் வாடா.*

இசைநிலா,
புதுக்குடியிருப்பு.

*கால்கள் அவைதான் உறுதியற்ற போதும்*
*மனவுறுதி தளராத மழலை உள்ளம்*
*தனிமரம் தானென வருந்தியவேளை- எதிரே*
*காணாமல் போன அவன் இரட்டைச் சகோதரன்.*

சு.கோகிலா,
புதுக்குடியிருப்பு.

*பொருளாதாரத் தடையால் வயிறுகள் வெறுமையாயின.*
*போலியோவால் கால்கள் பலமிழந்தன*
*இருந்தும், நாம் 'தலைவர்' காலத்துக் குழந்தைகள்*
*ஊனம் உடலில்தான் மனதில் இல்லவே இல்லை.*

திருமதி. ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*உதைத்தவெம் பந்தினை ஓடியே எடுத்தோம்*
*புதைத்துமே வைத்திட்ட மிதிவெடி அதிர்ந்தது*
*சிதைந்தன பாதங்கள் சோகமும் சூழ்ந்தது*
*எதனையும் தாங்குவோம் கல்வியைத் தொடர்வோம்.*

கே.ஆர்.திருத்துவராஸா,
அல்வாய்.

*அட போங்க ஊனம் காலில்தான் உள்ளத்தில*
*அவனுக்கு நான் எனக்கு அவன்*
*நட்பின் ஊற்றை புரிகிறதல்ல?*

அ.மேரிஅருள்கல்பனா,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு






02-04-2005 அன்று யாழ்ப்பாணத்தில் அரசுக்கெதிராக நடைபெற்ற மாபெரும் கண்டனப்பேரணியின் போது பிடிக்கப்பட்ட படங்கள்


செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

எட்க்ரோ
கிரிவ்ஸ்

MK-12/MK-20

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்,புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கிவரக்கூடிய சலுகைகள் ஒரு வருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியதும் அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்கவல்லது. எரிபொருளை சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப்பிந்திய சிறந்த சேவை. தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.






SM Graphics

EDNA® GROUP

எட்னா அப்ளயன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
160, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04
தொலைபேசி: 508961-2,502291-3,592135-6
தொலைநகல்:594558,500909
தொடர்புகளுக்கு: மயூரா-0777 418821 இபுனு-0777 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஆர்க் என்ரப்பிறைசஸ் (சி-11452)
150,152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2052


சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட Japan Sony, T.V க்கள் (19'', 20'', 21'', 25'', 29'', Q21, T.21)
மற்றும் VEDIO டெக்.செட்டப் ரேடியோக்கள்.(Sony,Pioneer,Kenwood) RX, FH ரேடியோக்கள்
அம்பிளிபயர் என்பன மலிவான விலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.







ஷண் மல்ரிட் ரேட் சென்ரர்
SHAN MULTI TRADE CENTRE
150,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 7442
(சி-11457)





உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.
(சி-11458)
SM Graphics



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயாரில் பயணியுங்கள்...
யாழ்ப்பாணத்தைக்கண்டுகளியுங்கள்...
அனுபவம் வாய்ந்த நட்புறவு...
நம்பகத்திற்கு எக்ஸ்போ எயார்...





EXPO AVIATION(PVT)LTD.
1E,Stanly Road, Jaffna.
Tel: 021-222 3891/6297 077-2349999/8888
email:Jaffna@espoavi.com/reservations@expoavi.com

(C-10120)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது